# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 60 | தை 12ஆம் நாள் | வியாழக்கிழமை | 25 ஜனவரி 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## கடற்படை பவள் வாகனம் மோதி 9 வயதுச் சிறுமி நசுங்கிச் சாவு

### புங்குடுதீவில் நேற்றுச் சோகம்




யாழ்ப்பாணம், ஜன. 25

கடற்படையினரின் பவள் கவச வாகனம் மோதியதில் அதன் சில்லுக ளுக்குள் அகப்பட்ட 9 வயதுச் சிறுமி ஒருத்தி உடல் நசுங்கி உயிரிழந்தார். புங்குடு தீவில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் சம்பவம் இடம் பெற்றது. புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருலங்கன் கேசனா (வயது- 9) என்ற சிறுமியே விபத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தார். சிறுமியின் மாமன் வழி உறவான க.சசேஸ்வரன் காயங்களுக் குள்ளானா.

>> 06

## புங்குடுதீவுச் சிறுமி சாவு சாகலவின் கவனத்துக்கு

### கொண்டு சென்றார் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஜன. 25

போர்க் காலத்து இராணுவ வாகனங்களை உரிய பராமரிப்பு இன்றி மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் பயன்படுத்தியமையினாலேயே நேற்று விபத்து நடைபெற்றுள்ளது. இது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை

>> 06

## கர்ப்பிணி கொலை விசாரணைகள் சிஐடிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 25

ஊர்காவற்றுறையில் படுகொலை செய்யப் பட்ட 7 மாத கர்ப்பிணியின் வழக்கு 'விசார ணைகள், கொலை இடம்பெற்று ஒருவருட நிறைவில் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரி விடம் (சி.ஐ.டி.) ஒப்படைக்கப்பட்டன.

>> 06

see more news in new uthayan.com

## போலியான தீர்வை ஏற்கவே மாட்டோம்

### சிங்கப்பூர் தலைமை அமைச்சரிடம் சம்பந்தன் திட்டவட்டம்



கொழும்பு, ஜனவரி 25

போலியான தீர்வொன்றை ஏற்றுக் கொள் ளப்போவதில்லை என்று குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சிங்கப்பூர் தலைமை அமைச்சரை நேற்றுக் கொழும்பில் சந் தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித் தார்.

தமிழ் மக்களுக்காக நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றியடையவேண்டும் என்று வாழ்த்துவதோடு உங்களின் முயற்சிகள் அனைத் துக்கும் பக்கபலமாக இருப்போம் என்று

>> 23

## பல்கலை மாணவர்கள் ஒன்பது பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையே அண்மையில் ஏற்பட்ட கைக லப்புடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் 9 மாணவர்கள் நேற் றுச் சரணடைந்தனர். அவர்களை இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதி வான் மன்று உத்தரவிட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஏற்க

>> 06

## பதுங்குகுழியில் ஒதுங்கியிருந்த கொள்ளைக் கும்பல் சிக்கியது

### பணம் நகை என்பனவும் பொலிஸாரால் மீட்பு

தென்மராட்சி, ஜன. 25

பதுங்கு குழியினுள் மறைந்தி ருந்த கொள்ளைக் கும்பல் ஒன்றைத் தாம் இனம் கண்டு கைது செய்திருக்கிறார்கள் என்று சாவகச்சேரிப் பொலி ஸார் தெரிவித்தனர். சந்தேகந பர்கள் இருவர் கைது

>> 25

### தேர்தல் விதி மீறல்களை

## காணொலி மூலமும் இனி முறையிடலாம்

கொழும்பு, ஜன. 25

உள்ளூராட்சித் தேர்தலின்போது இடம்பெறுகின்ற தேர்தல் விதி மீறல்களைக் காணொலியாகப் பதிவு செய்து பொதுமக்கள் அனுப்பி வைத்தால் நடவ டிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித் தார்.

>> 06

### குடியேற்றங்களையும் பெரும் திட்டங்களையும் தடுக்காவிட்டால்

## தமிழரிடமிருந்து முல்லை பறிபோகும் அபாயம்

### எச்சரிக்கிறார் ரவிகரன்

முல்லைத்தீவு, ஜன. 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் காணிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப் படுவதும் புதிய குடியேற் றங் களை இலக்கா

>> 25

## தாக்கப்பட்ட சிறுவனிடம் அதிகாரிகள் விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 25

சிறைச்சாலை அலுவலர்க ளால் தாக்கப்பட்டுக் காயம டைந்தார் என்று கூறப்படும் சிறுவனிடம் மனித உரிமை கள் ஆணைக்குழு அதிகாரி கள் நேற்று விசாரணை நடத்தி னர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அநு ராதபுரம்சிறைச்சாலை

>> 06

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

## தேர்தல் அறிக்கை 28இல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியீடும், அதன் பின்னரான சூறாவளிப் பரப்புரை யும் எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியாவில்

>> 23

## இழுத்தடிப்பதே அரசின் நோக்கம்

### சித்தார்த்தன் சாடல்

யாழ்ப்பாணம் ஜன 25

பன்னாட்டு நீதிமன்ற விசார ணையை இலங்கை அரசு எதிர்கொள்ளக்கூடாது எப்பாடு பட்டாவது அதனை இழுத்தடிப் புச் செய்துவிடவேண்டும் என்றே அரசில் உள்ள பலர் எண்ணி வருகின்றனர். அதன் வெளிப்பாடாகவே

>> 06

## இந்தோனேசிய முதலீடுகள் வடக்கு கிழக்குக்கு தேவை

### அந்த நாட்டு அரச தலைவரிடம் சம்பந்தன் நேரில் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 25

வடக்கு கிழக்கு மாகா ணங்களில் இந்தோனே சியா முதலீடு செய்ய வேண்டும் என்று அந்த நாட்டு அரச தலைவரிடம், எதிர்க்கட்சித்

>> 06







# தமிழரின் உரிமைக்கே போராடுகிறது த.தே.கூ.

## வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் மயூரன் தெரிவிப்பு

வவுனியா,ஜன.25

**தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழர்களுடைய உரிமைக்காகப் போராடுகின்ற ஒரு அமைப்பு. இதை மற்றைய கட்சிகளுடன் ஒப்பிட்டு இதை வெறுமனமே கட்சி என்ற ரீதியில் பார்க்காது தமிழர்களின் உணர்வோடு தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற ஒரு கட்சியாகப் பார்க்கவேண்டும். இவ்வாறு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.**

திருநாவற்குளம் பகுதியில் த்மிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகம் திறக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

புதிதாக உதித்தவர்கள் பல பொய்களைச் சொல்கிறார்கள் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்கிறார்கள்.

30 நாள்களுக்குள் ஒரு கட்சியை ஆரம்பித்து விட்டு தமிழ் மக்களுடைய பிரச்சினைக்காக தமிழர்களுடைய தீர்வுக்காக நாங்கள் போராடுவோம் என்று சொல்கின்றார்கள்.

அவர்களைப்பார்த்து நான் கேட்கின்றேன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சின்னத்தில் போட்டியிட்டு நீங்கள் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் மாகாணசபை உறுப்பு பிரதிநிதித்துவத்தையும் நீங்கள் விட்டுச் சென்றுவிட்டு உங்களுடைய உதயசூரியன் சின்னத்தில் மீண்டும் நீங்கள் போட்டியிட்டு உங்களை மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யுங்கள் அப்பொழுது நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் நீங்கள் மக்களுடைய பிரதிநிதிகளாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள் என்று. தமிழத்தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். என்றார். (ற.ரி4)

## பெண் வேட்பாளர்களது தேர்தல் அறிக்கை வெளியீடு



திருகோணமலை.ஜன.25

போரால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நாம். பாதிப்புக்குள்ளான பெண்களின் ஒளிமயமான வாழ்வுக்கு கட்டியங்கூற பெண்களாகிய நாம் இந்த முறை தலைமைத்துவப் பொறுப்பைத் தேர்தலில் பெறுவோம்.

இவ்வாறு மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சகல கட்சியின் 32 பெண் வேட்பாளர்கள் இணைந்து வெளியிட்ட உள்ளூராட்சி மன்ற பெண்களின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்லடி கிறீன் ஹாடின் விடுதியில் விழுது மனிதவள அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பண்பாட்டுத் தளங்களின் இருப்பு கேள்விக்குரியதென்று இதை மீளக் கட்டியெழுப்ப கடந்தகால அரசியலுக்கு மாறுபட்ட விதத்தில் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பண்பாட்டில் மேம்பாட்டை கொணர்வதன் ஊடாகவே முடியும்.

நீதியையும், நியாயத்தையும் எமது பிரதேசத்தில் நிலைநாட்ட உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடக் கட்சிகள் மூலமாகவும், சுயேச்சைக் குழுக்கள் மூலமாகவும் களம் இறங்கியிருக்கின்றோம்.

உண்மையும் , நேர்மையும் கொண்ட எமது அரசியலில் தனி மனித பரிந்துரைகளோ, பொய்யான வாக்குறுதிகளோ அல்லது சலுகை காட்டி வாக்குப் பெறுவதோ இருக்காது. என்றுள்ளது. (ற.ரி4)

## சு.க.வின் மக்கள் சந்திப்பு



மன்னார்.ஜன.25

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு செயற்றிறன் மிக்க இளம் பிராந்தியத் தலைவர் கிடைத்திருப்பதில் நாம் பெருமைப்படுகிறோம், எமில் நகரில் போட்டியிடும் எமது இரு வேட்பாளர்களின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளமையை இங்கே கூடியிருக்கும் முழு கிராம மக்களும் உறுதி செய்கின்றனர் இவ்வாறு அரசதலைவரின் பிரத்தியேக செயலாளர் சேனக்க அபேகுணசேகர தெரிவித்தார்.

மன்னார் எமில் நகரில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற.ரி4)

## கூட்டமைப்பின் அலுவலகங்கள் திறப்பு





வவுனியா.ஜன.25

வவுனியாவில் பலபகுதிகளில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகங்கள் கடந்த 21 ஆம் திகதி திறக்கப்பட்டன.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தாத்தன், வவுனியா மாவட்ட தமிழரசுக்கட்சியின் தலைவரும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான மருத்துவர் ப. சத்தியலிங்கம், வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், கஜபதி, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் செந்தில்நதான் மயூரன், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள் நகர உப பிதா சந்திரகுலசிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப்பலரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (ற.ரி4)

## மீனவர்களது பிரச்சினைகளில் கூட்டமைப்புக்கு அக்கறையில்லை

### டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவிப்பு



மன்னார்.ஜன.25

போர் முடிந்து எட்டு ஆண்டுகள் நிறைவுற்ற போதிலும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் அனுமதி பெற்றே கடற்றொழிலுக்குச் செல்லவேண்டிய அவலம் இன்னும் தொடர்வது எனக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றது.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்

மன்னார் தாழ்வப்பாடு பகுதியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாணத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் கடற்றொழிலுக்கான அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மன்னார் மாவட்டத்தில் கடற்றொழிலுக்கான அனுமதி பெறப்படவேண்டிய துர்ப்பாக்கியமான நிலையில் எமது கடற்றொழிலாளர்கள் நாளாந்தத் தொழிலை முன்னெடுத்து வருகின்றனர். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராமுகமாக இருந்துவருகின்றமையானது மிகுந்த வேதனையைத் தருகின்றது.

மன்னார் மாவட்ட மக்கள் உணர்ந்து எமக்கு வாக்களித்து எம்மை வெற்றிபெறச் செய்வார்களாயின் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நடைமுறை மட்டுமன்றி சுருக்குவலை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகள் எம்மால் பெற்றுக் கொடுக்கப்படும் என்றார். (ற.ரி4)

## வாக்கு சீட்டுக்களை புகைப்படம் பிடிக்கத் தடை

கொழும்பு.ஜன.25

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களுக்குள் கையடக்க அலைபேசிகளை பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.

வாக்குச்சீட்டுக்களை புகைப்படம் எடுப்பதற்கும் தடைவிதித்துள்ளது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த் தேசப்பிரிய தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அலைபேசிகளைப் பயன்படுத்தி அல்லது புகைப்படக் கருவிகள் மூலம் வாக்குச்சீட்டுக்களை புகைப்படம் எடுத்தல் சட்டவிரோத செயற்பாடென கருதி கைதுசெய்யப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார். (ற.ரி2)

## ஐ.தே.க வின் மக்கள் சந்திப்பு



யாழ்ப்பாணம்.ஜன.25

ஜக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகள் சண்டிலிப்பாயில் அண்மையில் நடைபெற்றன.

மகளிர் சிறுவர்விவகார இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மக்களையும் ஜக்கிய தேசிய கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களையும் சந்தித்தார்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அமைச்சர் எழுத்துமூல வேண்டுகோள்களை முன்வைக்குமாறும் அவற்றை முன்னிலைப்படுத்துவேன் எனத் தெரிவித்ததுடன் வாக்களிப்பது உங்கள் உரிமை எனவே உங்கள் விருப்புக்கட்சிகளுக்கு தாராளமாக வாக்களியுங்கள் ஆனால் அதன் முன் நன்கு சிந்தியுங்கள் என்றும் தெரிவித்தார். (ற.ரி4)

## தேர்தல் அலுவலகம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு.ஜன.25

மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் அலுவலகத்தில் விளம்பரப் பலகை தாக்கப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் அண்மையில் முறைப்பாடு செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் அலுவலகத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டதுடன் பாதுகாப்பையும் வழங்கினார். (ற.ரி4)



# மைத்திரி அரசால் அது முடியுமா? மகிந்த விடுக்கிறார் சவால்

கொழும்பு,ஜன.25

எனது அரசால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களைப் பட்டியலிட்டுக் காட்ட முடியும். ஆட்சியிலுள்ள தற்போதைய அரசால் அது முடியுமா? என கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

பலாங்கொடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஆட்சியில் இருக்கும் போது பெறப்பட்ட கடன் தொகையை விட இவர்கள் பன்னாட்டு நாடுகளிடம் அதிக கடன் தொகையை பெற்றுள்ளனர்.

ஆனால் பெற்ற கடனுக்கேற்ற வேலைத் திட்டம் இல்லை. என்னால் அது இயலும் எனது அரசால் மேற்கொள்ளப் பட்ட வேலைத் திட்டங்களை இப்போதும் பட்டியலிட்டுக் காட்ட முடியும். பதவி ஆசையில் பதவிக் காலத்தை 6 ஆண்டுகளாக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முயற்சித்தார். எனினும் அவரது ஆசை நிறைவேற வில்லை. 5 ஆண்டுகள் மாத்திரமே அரச தலைவர் பதவி வகிக்க முடியும் எனத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் மைத்திரி குழப்பத்தில் உள்ளார். பதவியை தக்க வைத்துக் கொள்ள முடியாது போனதால் கோபத்தை என் மீது காட்டுகின்றார். அதனால் எந்த பிரயோசனமும்



இல்லை. எனக்கும் எந்த பாதிப்பும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ற.ரி2)

## கேள்விப்பத்திரம் கோராமல் அனுமதிப் பத்திரம் வழங்குக

### தனியார் போக்குவரத்துத் தரப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25

போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையின் கீழ் பாதை அனுமதிப்பத்திரத்தை உரிமை மாற்றம் செய்யும் போது அரை மடங்கு பணத்தை விட அதிகரித்துக் காணப்படுவது உரிமையாளர்களுக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இனிவரும் காலங்களிலும் கேள்விப் பத்திரங்கள் இன்றி தங்கள் பரிசீலனைக்கமைவாக பாதை அனுமதிப்பத்திரங்கள் வழங்க ஆவன செய்ய வேண்டும். இவ்வாறு தனியார் பேருந்துத் தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர், உப செயலாளர் முல்லைத்தீவு மன்னார் வவுனியா கிளிநொச்சி யாழ். தூர சேவைப் பேருந்து உரிமையாளர்களின் கம்பனி என்பவற்றின் தலைவர், செயலாளர்கள் இணைந்து நேற்று வடக்கு மாகாண சபை முதலமைச்சரைச் சந்தித்தனர். அந்தச் சந்திப்பில் அவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

அதில் உள்ளதாவது:

முன்னாள் போக்குவரத்து அமைச்சரின் காலத்தில் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்கள் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் நாம் அவரிடம் அதனைத் தெரிவித்திருந்தோம். வடக்கு முதல்வருக்கும் அதிகாரசபைத் தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் இந்தக் கட்டணத்தை குறைத்து அறவிடுவது பற்றி அறிவித்தோம்.

இந்தக் கட்டணம் பற்றிய உரிய தீர்மானம் எடுக்க முன்னரே 19.09.2016 அன்று வடக்கு முதல்வரின் அனுமதியுடன் சட்ட விதிமுறை நடைமுறைப்படுத்தப்படும் என்று எமக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் காலத்தில் வருடாந்த பாதை அனுமதிப் பத்திரத்துக்குரிய புதுப்பித்தல் கட்டணம் ரூபா 3 ஆயிரமும் மாதாந்த சம்பவத் தாளுக்குரிய கட்டணமாக ரூபா 200ஆம் பாதை அனுமதிப் பத்திரத்தை உரிமை மாற்றுவதற்குரிய கட்டணமாக ரூபா ஒரு லட்சமும் உறவினர்களுக்கான உரிமைமாற்றுக் கட்டணமாக ரூபா 25 ஆயிரமும் செலுத்தி வந்தோம்.

போக்குவரத்துத் தொழிலை மையமாகக் கொண்டு வாழ்வாதாரத்தை நடத்தி வரும் உரிமையாளர்கள் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களோ நாளொன்றுக்கு முன்னைய காலத்தில் கிடைக்கப் பெற்ற வருமானத்தைப் பெற முடியாததொரு இக்கட்டான சூழ்நிலையிலேயே சேவையாற்றி வருகின்றோம்.

இலங்கைப்போக்குவரத்து சபையின் அதிகரித்த சேவைகளுக்கு மத்தியில் இலாபங்கள் எதுவும் அற்ற நிலையில் சேவையாற்றுகிறோம். இந்தத் தொழிலை சேவை அடிப்படையில் செய்யலாமே தவிர மேலும் வருமானம் அதிகரிக்கக் கூடிய மாற்று வழிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையின் கீழ் பாதை அனுமதிப்பத்திரத்தை உரிமை மாற்றம் செய்யும் போது அரை மடங்கு பணத்தை விட மேலும் அதிகரித்துக் காணப்படுவது உரிமையாளர்களுக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடமாகாணத்தில் ஆயிரத்து 100க்கும் அதிகமான பாதை அனுமதிப் பத்திரங்கள் கேள்விப் பத்திரங்கள் இல்லாமல் வழங்கப்பட்டிருந்தன. தேசியப் போக்குவரத்து ஆணைக் குழுவின் காலத்தில் கேள்விப் பத்திரம் மூலம் வழங்கப்படும் முறையை எம்மால் கோரப்பட்டதற்கு அமைய நிறுத்தி வைக்கப்பட்டது.

இனிவரும் காலங்களிலும் கேள்விப் பத்திரங்கள் இன்றி தங்கள் பரிசீலனைக்கமைவாக பாதை அனுமதிப்பத்திரங்கள் வழங்க ஆவண செய்து தருமாறு கேட்டுக் கொளகிறோம்.என்றுள்ளது. (ற-ரி2,8)

## ஏமாற்றுபவர்களுக்கு எதற்கு அரசியல்

### நஸீர் அஹமட் கேள்வி

மட்டக்களப்பு,ஜன.25

ஒட்டு மொத்தமான சமூகத்தையும் ஏமாற்றி வயிறு வளர்க்கும் அரசியல்வாதிகளுக்கு எதற்காக அரசியல் அதிகாரம் தேவை. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார். ஏறாவூர் நகரில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

காலாகாலமாக மக்களை ஏமாற்றி அரசியல் கட்சி நடத்தும் சில அரசியல்வாதிகளுக்கு இன்னும் அரசியல் அதிகாரத்தை ஏன் வழங்க வேண்டும், நகரக் கழிவுகளைச் சேகரித்து ஊருக்குள் குப்பை கொட்டும் கையாலாகத்தனத்தை இந்த அரசியல்வாதிகள் கடந்த 30 வருட கால ஆட்சியில் செய்து கொண்டிருந்தார்கள். இதனை நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக வந்த ஒரு சில குறுகிய காலங்களுக்குள்ளாகவே மாற்றியமைத்தேன். மட்டக்களப்பு வாவியையும் அதனைச் சூழவுள்ள சதுப்பு நிலப் பிரதேசங்களையும் இயற்கை மாறாமல் பேணுவதற்காகவும் பல திட்ட முன் மொழிவுகளைச் செய்துள்ளோம். பிரதேசத்தின் மீன் பிடி வளம் எதுவித திட்டமுமில்லாமல் வீணாகிறது. தொழில்துறை சார்ந்த மக்களுக்கு நன்மை தரும் எத்தனையோ பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டியுள்ளோம். அதன் பலாபலன்கள் சிலவற்றை இப்பொழுது பிரதேச மக்கள் ஆரம்பித்திருக்கிறார்கள் இதனையெல்லாம் சிந்திக்காமல் இவ்வளவு காலமும் "ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூதான் சர்க்கரை" என்கின்ற மாதிரி வெறும் காட்சிப் பொருளாக இருந்து கட்சிகள் மாறி மாறி தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொண்ட அரசியல்வாதிகள் இப்பொழுது புதிய அரசியல் வருகையால் தடுமாறிப் போயுள்ளார்கள். அபிவிருத்தித் திட்டங்களை மக்களுக்கு முன்மொழியாமல் ஆளாளைப் பற்றி விமர்சிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். இத்தகைய ஏமாற்று அரசியல்வாதிகளை விரட்டியடிப்பதற்கு மக்கள் இம்முறை திடசங்கற்பம் பூண வேண்டும்"என்றார். (ற.ரி2)

## பிரதேச சபை மூலமே அபிவிருத்தி ஏற்படும்

### இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

நுவரெலியா.ஜன.25

நுவரெலியாவில் கடந்த காலங்களில் மக்களுக்கென சொந்தமாக காணி கிடையாது. தாரேன் தாரேன் என்று கூறினார்களே தவிர வெறும் சொல்லால் மட்டுமே முடிந்துவிட்டன. இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். நோர்வூட் பிரதேச சபைக்கு ஐ.தே.க. வின் "யானை" சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து வெற்றி செய்த பொழுது, அன்று புதிதாக தமிழ் முற்போக்கு கூட்டணி உருவாகியது. மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியோர் இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டணியை உருவாக்கினோம். மற்றும் தாதியர்களுக்கு இந்தப் பகுதியில் நிரந்தரமாக இருப்பதற்காக வீடுகளைக் கட்டுவதற்கு காணிகள் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தமிழ் முற்போக்கு கூட்டணி ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தோடு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஊடாக பல அபிவிருத்திகளை செய்து வருகின்றது. ஆகவே இந்த அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென்றால் பிரதேச சபையை நாம் கைப்பற்ற வேண்டும். பிரதேச சபையை நாம் கைப்பற்றினால் தான் இந்த சேவைகளை நாம் செய்ய முடியும். பிரதேச சபைகளில் எமது உறுப்பினர்கள் அதிகமாக வந்தால் தான் எமக்கு தேவையானவற்றை நாமே செய்துகொள்ள முடியும் - என்றார். (ற.ரி4)

## அனைவரும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

### அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவிப்பு

நுவரெலியா.ஜன.25

மக்களுக்குத் தேவையான சேவைகளை நாங்கள் முன்னெடுக்கின்ற போது நாங்கள் கொண்டு வந்த திட்டத்தை தான் இவர்கள் முன்னெடுக்கின்றனர் என மக்கள் மத்தியில் சிலர் கூறி வருகின்றார்கள். இவ்வாறு மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார். நோர்வூட் பிரதேச சபைக்கு ஐ.தே.க. வின் "யானை" சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

நாங்கள் இந்த மூன்று வருட காலப்பகுதியில் வீடுகளைக் கட்டி வருகின்றோம். பாதைகளை அபிவிருத்தி செய்கின்றோம் என பல உட்கட்டமைப்பு வசதிகளை செய்து வருகின்றோம். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஊடாக நானும், இராதாகிருஷ்ணன், மனோ கணேசன் ஆகியோர் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் சென்று இது தொடர்பாக கதைத்து இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தற்பொழுது அதிகார சபையை நாம் பெற்றுள்ளோம். இது தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குக் கிடைத்த மற்றுமோர் வெற்றி.எனவே இந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார். (ற.ரி4)

## வாக்குகளைக் கூறுபோடவே கட்சிகள் பலவும் களத்தில்

### தமிழரசுக் கட்சி வேட்பாளர் தெரிவிப்பு

மானிப்பாய்.ஜன.25

வாக்குகளைக் கூறுபோடுவதற்காக 9 கட்சிகளின் பிரதிநிதிகள் ஓடித்திரிகின்றனர். இவர்கள் எவரும் கடந்த 7 ஆண்டுகளில் பிரான்பற்று மக்களுக்கு எதுவுமே முன்னின்று செய்யாதவர்கள்.

இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருமான சி.மகேந்திரன் தெரிவித்தார்.

பிரான்பற்று பேச்சியம்மன் வீதி முகப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

நான் தவிசாளராக இருந்தபோது மக்களின் பங்களிப்புடன் கருத்திட்டங்களை முதலில் தேர்ந்தெடுத்து மக்களின் சனத்தொகை பயனாளிகளின் எண்ணிக்கை, பாதிப்புக்களின் தன்மை பின்தங்கிய நிலை என்பவற்றை கருத்தில் எடுத்துத் தொகுப்பேன். சகல விடயங்களையும் கருத்திட்டங்களையும் சபையின் மக்கள் பிரநிதிகளிடம் முன்னிறுத்தி அனுமதி பெற்றே உட்கட்டுமான அபிவிருத்திகளை முன்னேடுப்பேன். இடம்பெறவுள்ள தேர்தலில் மக்கள் ஏனைய கட்சியினருக்கு முறையான பாடம் புகட்ட வேண்டும். உண்மையில் கடந்த காலங்களில் பிரான்பற்று மக்களுக்கு சேவை செய்த வேட்பாளரை சிந்தித்துப் பாருங்கள் அதன் பின் உங்கள் வாக்குகளை அளியுங்கள்.பல வேட்பாளர்கள் வேடிக்கைக்காக களமிறக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் பணத்துக்காக இறங்கியுள்ளனர். வேறுபலர் எந்தக் கட்சியில் எந்தச் சின்னத்தில் எந்தப் பிரதேச சபைக்காக நிற்கின்றோம் என்று தெரியாத பலர் வேட்பாளர்களாக உள்ளனர்.

பிரான்பற்று மக்கள் ஒன்றிணைந்து தவறாது எதிர்வரும் 10 ஆம் திகதி சென்று வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு வாக்களித்து உதவுங்கள் - என்றார். (ற.ரி2,50)

# சப்பாத்தைக் கையில் ஏந்திக்கொண்டு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள்

## முட்கொம்பனில் அவலம் கவனிப்பார்களா அதிகாரிகள்

**கிளிநொச்சி, ஜன.25**

**முட்கொம்பன் கண்ணகைபுரம் கிராமத்து மாணவர்கள் நீர்நிலை ஒன்றுக்குள் இறங்கிக் கடந்து பாடசாலைக்கு சென்றுவரும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். சீருடைகளுடன் வரும் இவர்கள் நீர்நிலையை அண்மித்ததும் தமது சப் பாத்துகளைக் கழற்றி கைகளில் எடுத்துக்கொண்டு செல்கின்றனர். தண்ணீரைக் கடந் ததும் ஈரக்கால்களுடன் மீண்டும் அவற்றை அணிந்துகொண்டு செல்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிர தேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பூநகரி யில் அமைந்துள்ள தேகண்ணகைபுரம் கிராமம். இங்குள்ள மாணவர்கள் சுமார் எட்டுக்கிலோ மீற்றர் துரத்தைக் கடந்தே பாடசாலைக்கு சென்று வருகின்றனர். இவர்கள் பாடசாலைக்குச் செல்லும் பாதையை ஊடறுத்து ஆளமான பள்ளம் ஒன்று காணப்படுகின்றது. இப்பள்ளம் மழைகாலத்திலும், வயல் விதைப்புக் காலங்களிலும் நிரம்பிவிடும். எனினும், மாற்றுவழிகள் இல்லாததால்; இந்தப் பள்ளத்துக்குள் இறங்கி தண்ணீரில் நனைந்தவண்ணமே செல்கின்றனர்.

இதுதொடர்பில் கிராம மக்கள் தெரிவித்த தாவது:

நாங்கள் இங்கு யாருடைய உதவிகளு மின்றி வாழ்ந்து வருகின்றோம். உதவி வழங்குவதுக்கு எவரும் முன்வருவது மில்லை. காரணம் எமது கிராமத்துக்கு வருவதுக்கு சரியான சாலைவசதி இல்லை. எமது பிள்ளைகள் கல்வியில் நல்லநிலையில் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு உரியமுறையில் கல்வி யைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது. குறித்த பாதையில் நிரம்பும் நீரில் நனைந்தே பாடசாலை சென்றுவருகின்றனர். இதனால் அவர் கள் பல சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இங்கு தேங்கிநிற்கும் நீரில் பல கிருமி கள் காணப்படுகின்றன. இதில் நனை யும் பிள்ளைகள் ஈரக்கால்களுடன் சப்பாத்துகளை அணிந்துகொண்டு செல்கின்றனர். பாடசாலையில் நீண்ட நேரம் ஈரத்துடன் இருப்பதால் கால்களில் சொறி, சிரங்கு, புண்களுடன் காய்ச்சல் வருகின்றது.

இவ்வாறான நிலமைகளால் பிள்ளைக ளால் சரிவர பாடசாலை செல்லமுடிய வில்லை. கல்வியில் பின்னிலைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எமது பிள்ளைகள் ஒரு ஆசியராகவோ, வைத்தியராகவோ, பொறியிலாள ராகவோ, வழக்கறிஞராகவோ வருவார் கள் என்று எண்ணியே பாடுபடுகின் றோம். ஆனால் அவர்களால் உரிய கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதுதொடர்பாக நாம் அனைத்துத் தரப்பி னருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறு வதற்காக மட்டுமே வருகின்றார்கள். நாங்கள் செய்து தருவோம் என்று கூறி விட்டுச் செல்வார்கள். ஆனால் இது வரை எதுவும் நடக்கவில்லை. சிறுவர் கள் நாட்டின் நாளைய தலைவர்கள் என்றுஅரசதலைவர் கூறுகிறார். ஆனால் இங்கு எமது பிள்ளைகளுக்கு அடிப்ப டைக் கல்வியைக்கூட பெற்றுக்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது. இதனை அனைவரும் கவனத்தில் எடுத்து எமது பிள்ளைக ளின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்றனர். (ய-6)

## பொங்கல் விழா

சாவகச்சேரி.ஜன.25

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பொங்கல் விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நேற்றுக் காலைஇடம் பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலை மையில் நடைபெற்ற நிகழ்வில் சிவஸ்ரீ வீ. பாலகுமாரக் குருக்கள், தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி ஆலய போதகர் அருட்பணி என்.ரி.ஜெபநேசன் அடிகள் உட்பட சர்வமதத் தலைவர்க ளும் நான்கு மதங்க ளைச் சேர்ந்த ஆசிரியர் களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். சர்வமதப் பிரார்த்த னைகளுடன் விழா இடம்பெற்றது.

நிகழ்வில் மர்ணவர்க ளின் கலைநிகழ்வு களும் இடம்பெற்றன. (எ-9)

## கந்தபுராண விளக்கவுரை

யாழ்ப்பாணம்.ஜன.25

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியாரால் நல்லூ ரில், அமைந்துள்ள 'ஞானவேல்' ஆச்சிரமத் தில் 'கந்தபுராண விளக்கவுரை' வாரந் தோறும் வெள்ளிக்கிழ மைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் நாளை வெள்ளிக் கிழமை 'ஆறுமுகப் பெருமானின் அவதாரம்' என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறவுள் ளது. (எ-8)

## மயங்கி வீழ்ந்த குடும்பத் தலைவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்.ஜன.25

பாரவூர்தியில் இருந்து பொருள்களை இறக் கிக்கொண்டிருந்த குடும் பத்தலைவர் மயக்கம டைந்து உயிரிழந்த சம்பவம் நேற்றுமுந்தி னம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கொக்கு வில் கிழக்குப் பகுதியை சேர்ந்த செல்வராசா சிறீ காந்த ராசா (வயது 56) என்ற இரண்டு பிள்ளை களின் தந்தையே உயி ரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

கொக்குவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த குறித்த குடும்பத் தலை வர் திருநெல்வேலிச் சந்தையில் பாரவூர்தி யில் இருந்து பொருள் களை நேற்று முந்தி னம் காலை இறக்கிக் கொண்டிருந்தார். அவ் ருக்கு உடல் வலி ஏற்பட் டுள்ளது. இதனால் அரு கில் உள்ள கடையில் தேநீர் அருந்திவிட்டு பனடோலும் போட்ட பின்னர் மீண்டும் பணி யில் ஈடுபட்டார்.

பின்னர் அந்த இடத்தில் மயக்கம் அடைந்தார் எனத் தெரிவிக்கப்பட் டது.

உடனடியாக யாழ்ப்பா ணம் போதனா வைத்தி யசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் ஏற்கனவே இறந்து விட் டதாக கூறப்பட்டுள்ளது. இறப்பு தொடர்பாக விசா ரணையை யாழ்ப் பாண போதனா வைத் தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற் கொண்டார். (எ-8)

## குருதிக்கொடை நிகழ்வு

பருத்தித்துறைப் பிரதேச ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் எதிர் வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு இடம் பெறவுள்ளது. குருதிக்கொடை செய்ய விரும்புகின்ற பொதுமக்கள் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ள முடியும் என பிரதேச செயலர் ஆ.சிறி அறிவித்துள்ளார். (எ-4)



முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்ப்பணம் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தி.மகேஸ்வரனின் பிறந்த தினத் தையொட்டி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் 90 வறியமாண வர்களுக்கு கற்றல் உபகரணங்களும் அன்னதானமும் அண்மையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட ஆசிரியர் இரா.செல்லவடிவேல், உபதபாலதிபர் த. வசந்தகுமாரி ஆகியோரிடமிருந்து கற்றல் உபகரணங்களைப் பெற்ற மாணவர்களைப் படங்களில் காண லாம். (எ-173)

### யாழ். மாவட்ட தனியார் ஊழியர் சங்க

## ஆரம்ப நிகழ்வும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 'தனியார் ஊழியர் சங்கம்' என்ற பெயரில் சங்கம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. அதற்கான கலந்துரையாடலுக்குஅனைத்துதனியார் ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டப முதலாம் மாடியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

"தனியார் ஊழியராகிய நாங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கை ஆற்றுகின்றோம். எனினும் எமக்குரிய அங்கீகாரம் இதுவரை கிடைக்க வில்லை. எனவே எமது சிறுசிறு பிரச்சினைகள், உரிமை கள் போன்றவற்றை நிலைநாட்ட எமக்கு ஒரு அமைப்புத் தேவை என்ற எண்ணத்தில் இது உருவாக்கப்படவுள்ளது. அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்" என்று ஏற்பாட்டாளர்களான ஊழியர்கள் கேட்டுள்ளனர். (எ-4)

## கார்த்திகை உற்சவம்

வடமராட்சி.ஜன.25

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், யாழ்ப்பாண, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தி. மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக வடமராட்சி தொண்ட மானாறு செல்வச்சந்நிதி கோவிலில் (தை) திருக்கார்த்திகை உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. சந்நி தியான் ஆச்சிரமத்தின் அனுசரணையில் இடம்பெறும் உற்ச வம் காலை 9 மணியளவில் 108 கலச அபிசேகத்துடன் ஆரம் பமாகும். சண்முக அர்ச்சனை, சிறப்புப் பூசை என்பன இடம் பெற்று முருகப்பெருமான் வீதிவலம் வருவார். தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன் மிக சஞ்சிகை வெளியீட்டுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (எ-173)

## 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா

சாவகச்சேரி.ஜன.25

சாவகச்சேரி இந்து ஆரம் பப் பாடசாலை மாணவர் களின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளை யாட்டு விழா பாடசாலை மைதானத்தில் நாளைம றுதினம் சனிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் சி.கந் தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மைவிருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி முகாமைத்துவ பிர திக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினராக வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## யாழ். பொது நூலகத்தில் சிறுவர் நாடக கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ப்பாணப் பொதுசன நூலகமும் ஈழத்தின் செயல்திறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் சிறுவர் நாடகக் கொண்டாட்டம் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் 'பஞ்ச வர்ண நரியார்' சிறுவர் நாடக மேடையேற்றத்துடன் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகிறது. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமைகளில் சிறுவர்நாடகங்க ளை மேடையேற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரபரப்பான வாழ்க்கைச் சுமை மற்றும் கல்விச்சுமையால் அல்லலுறும் சிறுவர்களின் மனவிடுவிப்புக்கான களமாகவும் சிறுவர்களின் குதூகலிப் புக்கான களமாகவும் இது அமையும். சிறுவர்களையும் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (எ-4)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

# வீட்டுத் திட்டத்துக்கு பயனாளிகளை தெரிவு செய்வதற்காக விவரம் சேகரிப்பு

சாவகச்சேரி,ஜன.25

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் வீட்டுத் திட்டப் பயனாளிகளை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்வதற்கான தகவல்களை கிராம அலுவலர்கள் மூலம் பதிவுகள் மேற்கொண்டு கணினிமயப்படுத்தவுள்ளனர். இந்தப் பதிவுகளில் போர் அனர்த்தவேளையில் முற்றாக அழிக்கப்பட்ட நிரந்தர வீடுகளையுடைய ' உ ' பங்கீட்டு அட்டைதாரர்களின் விவரங்களும் உள்ளடக்கப் படுகின்றன.

இதற்கான பதிவுகள் பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. பதிவுகளின்போது ஆண், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் போர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட (மரணம், அவய இழப்பு, ஊனம்) குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள், போரின் போது மாற்றுத்திறனாளியாக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள், கணவன் மனைவி பிரிந்து வாழும் குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களின்குடும்பங்கள், அரசியல் கைதிகளாக காணப்படும் குடும்பங்கள், காணாமல் ஆக்கப்பட்டோரைக் கொண்டகுடும்பங்கள், இன்னமும் பிரதேசத்தில் மீளக்குடியமர முடியாமல் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள் போன்ற தகவல்கள் தனித்தனி படிவங்கள் மூலம் முழுமை செய்யப்பட்டு வருகின்றன. இவர்களுடன் கடந்த போர் அனர்த்தங்களால் வீடுகளை முற்றாக இழந்து நிரந்தர வீட்டைப் புனரமைக்க முடியாமல் உள்ள 'உ' பங்கீட்டு அட்டை வைத்துள்ள குடும்பங்கள், அத்துடன் ஒரு அங்கத்தவர் மற்றும் இரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களின் தகவல்களும் திரட்டப்படு கின்றன.

'உ' பங்கீட்டு அட்டைதாரர்கள் நிரந்தர வருமானம் கிடைப்பவர்கள் என்பதால் அவர்களது விண்ணப்பங் கள் இதுவரை காலமும் நிராகரிக்கப்பட்டு வந்தன. தற்போதைய படிவங்களில் தகவல்கள் சேகரிக்கும் போது ' உ' பங்கீட்டு அட்டைதாரர்களின் விவரங்களும்திரட்டப்படுவதால் நிரந்தர வீடுகள் அழிந்த நிலையில் தமது காணிகளில் தற்காலிக வீடுகள் அமைத்து வாழ்ந்து வரும் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

கிராம அலுவலர்களால் திரட்டப்படும் தகவல்களின் அடிப்படையில் வருங்காலத்தில் வீட்டுத்திட்டங்கள் பிரதேசத்துக்கு கிடைக்கும்போது இந்த விவரங்களின் பிரகாரம் வீடமைப்புக்கு பயனாளிகள் தெரிவு இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (எ-9)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஜன.25

யாழ்ப்பாணம் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய மைதானத்தில் இன்று வியாழக்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டியில் முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளர் க.பாலச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய முன்னாள் அதிபர் பொ.கனகரத்தினமும் தென்மராட்சிக் கல்வி வலய சமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இ.இராசமலரும் மதிப்புறு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக மனித வலு வேலை வாய்ப்பு க்கள் பிரிவின் அபிவிருத்தி உத்தியோ கத்தர் சி.சிவசொரூபனும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

*****************

அச்சுவேலி,ஜன.25

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று வியாழக்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் (காணி) சு.முரளிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் யுகராசா ஜெலீபனும் மதிப்புறு விருந்தினர்களாக ஓய்வு நிலை ஆசிரியர் நா.சண்முகரத் தினம், பழைய மாணவன் கு.சிவதயாளன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (எ-4)

*****************

யாழ்ப்பாணம், ஜன 25

யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.05 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எம்.சி.சுதாகரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வலிகாமக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் மேர்சி சேவியர் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. (எ-4)

*****************

காரைநகர்,ஜன.25

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.நேத்திரானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

விழாவில் முதன்மை விருந்தினராக முன்னாள் காரைநகர் பிரதேச செயலரும் யாழ். மாநகரசபை ஆணையாளருமான இ.த.ஜெயசீலனும் சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.யோக லிங்கம், இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் வே.புவனேந்திரராஜா ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக தி.பிரமேந்திரதீசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-250)

# மத்திய கல்லூரி மாணவருக்கு வீதி விதிமுறைப் பயிற்சிகள்



யாழ்ப்பாணம், ஜன. 25

பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்தில் வரும் வாகனங்களை எவ்வாறு வழிப்படுத்தி போக்குவரத்தைச் சீர்ப்படுத்துவது உள்ளிட்ட போக்குவரத்தின்போது வீதி விதிமுறைகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு நேற்று நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் இந்தப் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கினர்.

பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் மாணவர்கள் உள்வருகை மற்றும் வெளிச் செல்கையில் இத்தகைய வீதிப் போக்குவரத்து நடைமுறைகள் அவசியமாகவுள்ளது.

சில இடங்களில் இந்த நடைமுறை உள்ளது. அதனை மேலும் வலுப்படுத்துவதாகவே இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வீதி விபத்துக்குள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் இத்தகைய பயிற்சிகள் ஊடாக விபத்தைக் குறைப்பதே நோக்கம் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## வலி. கிழக்கில் தேர்தல் பரப்புரைகள் சூடுபிடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25


வலி.கிழக்கு பிரதேசத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான பரப்புரைகள் சூடுபிடித்துள்ளன.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது கட்சிகளின் சின்னத்துக்கு வாக்களிக்குமாறுகோரி துண்டறிக்கைகளை விநியோகித்து வருகின்றனர். உள்ளூராட்சி மன்றத்துக்கு தம்மை அனுப்பி வைத்தால் பிரதேசத்துக்கு தம்மாலான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அவர்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கி வருகின்றனர். இரவு பகல் பாராது வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தேர்தல் பரப்புரைகளில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். சில வேட்பாளர்கள் தாம் வெற்றி பெற வேண்டும் என்று ஆலய வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (எ-17)

## தவசிகுளம் மாதா வழிபாடு ஆரம்பம்

தென்மராட்சி ஜன. 25

புனரமைக்கப்பட்ட மிருசுவில் தவசிகுளம் புனித காணிக்கை மாதா ஆலயத்தின் வழிபாடுகள் எதிர்வரும் 29ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர், அருட்பொழிவு வழங்கி வழிபாட்டை ஆரம்பித்து வைப்பார். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் நவநாள் வழிபாடுகள் இடம்பெறும். பெப்ரவரி முதலாம் திகதி பிற்பகல் திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் இடம்பெற்று மறுநாள் காலை திருநாட்பாடல் பலிபூஜையும், திருச்சொரூப பவனியும் இடம்பெறும் என மேலும் அறிவித்துள்ளனர். (எ.-9)



புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையம் கடந்த 18ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய, வலய ரீதியில் சாதனை படைத்த மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (எ-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.25

இன் சீ சீமெந்து முகாமைத்துவ நிறுவனம் யாழ்ப்பாண தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கலந்துரையாடலை ஒழுங்குசெய்துள்ளது. மேற்படி கலந்துரையாடல் யாழ். தொடருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள வலம்புரி ஹோட்டலில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொழில்நுட்ப அலுவலர்களை சமூகமளிக்குமாறு முகாமைத்துவ நிறுவனம் கோரியுள்ளது. (எ-50)

# முதல்வரைத் தூக்காவிடின் கூட்டரசைக் கைவிடுவோம்

## நீதிக்காகப் பதவிகளைத் துறந்து வீதியில் இறங்கியும் போராடுவோம் என்கிறார் சுரேஷ்

கொழும்பு, ஜன. 25

பதுளையில் பெண் அதிபரை மண்டியிடவைத்த ஊவா மாகாண முதலமைச்சரை அந்தப் பதவியிலிருந்து தூக்கிவிட்டு, அநீதி இழைக்கப்பட்ட அதிபருக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசிலிருந்து வெளியேறி, மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராடுவேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

அமைச்சர் பழனி திகாம்பரத்தின் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊவா மாகாண கல்வி அமைச்சை கீரியிடமிருந்து பிடுங்கி நரியிடம் கொடுத்துள்ளனர். ஊவா மாகாண கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமான், அரச ஊழியரைத் தாக்கிய ஒருவராவார்.

அவர் இதற்கு முன்னர் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபரை வெளியே விரட்டி அவரது ஆசனத்தில் அமர்ந்தவர். அவர் நியமிக்கப்பட்டவுடன் மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் பதறியடித்துக்கொண்டு என்னுடன் அலைபேசியில் தொடர்புகொள்கின்றனர்.

அரச சேவையில் இருந்த தபால் ஊழியரைத் தாக்கிய குற்றச்சாட்டில் செந்தில் தொண்டமான் மீது வழக்கொன்று இன்றும் பண்டாரவளை நீதிமன்றில் நடைபெற்றுவருகின்றது.

இந்தியா, தமிழக அரசியல் நடவடிக்கைகள் இங்கு சரிவராது. இவ்வளவு பிரச்சினைகள் நடந்தும் அவர் அங்கு செல்லவில்லை. கல்வி அமைச்சுப் பதவி கிடைத்த பின்னர்தான் செந்தில் தொண்டமான் அந்தப் பாடசாலைக்குச் சென்றார்.

கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து அதிபரை மண்டியிடவைத்துவிட்டு பின்னர் முதலமைச்சர் தனது வியாபார ஊடகவியலாளர்கள் ஊடாக பொய்யான குரல் பதிவை வழங்கி இந்த விடயத்தை மூடி மறைத்துவிட்டார்.

9ஆம் திகதிக்குப் பின்னர்தான் இந்த விடயம் சிறிது சிறிதாக வெளியில் வந்தது. அத்துடன், முதலமைச்சரான சாமர சம்பத் தசநாயக்கவும் இதற்கு முன்னர் ஊவா மாகாண பெண் கணக்காளருக்கு இவ்வாறு செய்து அதற்கு எதிராக ஊழியர்கள் வீதியில் இறங்கினர். ஊவா பரணகம பிரதேச செயலர் விடயத்திலும் முதலமைச்சருக்கு எதிரான ஊழியர்கள் வீதியில் இறங்கினார்கள்.

இந்தச் சம்பவங்கள் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்பதற்கப்பால், அரசியல்வாதிக்கு இவ்வாறான அதிகாரம் இல்லை. இந்த தமிழ்ப் பெண் செய்த தவறு என்ன? அவர் முதலமைச்சரிடம் மண்டியிட்டதை நிரூபிக்க ஊடகங்கள், பொலிஸ் எனபலர் முன்னிலையில் அதனை செய்துகாட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அவரிடம் 6 மணித்தியாலங்களுக்கும் அதிகமாக பொலிஸார் விசாரணை செய்துள்ளனர். பாதிக்கப்பட்டவரை இவ்வளவு நேரம் விசாரித்தால் குற்றம் இழைத்தவரை 6 நாள்களாவது விசாரிக்க வேண்டும். இந்த நாட்டில் சுதந்திரக் கல்வி உரிமைக்கு என்ன நடந்தது?

எமது சமூகம்தான் எமக்கு முக்கியம். அதற்காக எதையும் விட்டுக்கொடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதற்கு அரசியல்தான் தடையென்றால், அதிபர் பவானிக்கு நீதி கிடைப்பதற்காக அரசியலிலிருந்து ஒட்டுமொத்தமாக விலகிவிட்டு, ஆசிரியர்களுடன் வீதிக்கு இறங்கத் தயாராக இருக்கின்றோம் - என்றார். (5)

---

### காணொலி...

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைக் கூறினார்.

“தேர்தல் விதி மீறல்கள் குறித்துப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. வீடு வீடாகப் பரப்புரைக்குச் செல்லும்போது 12 பேர் சென்றால், அது சட்டத்துக்குப் புறம்பான கூட்டமாகவே கருதப்படும். அவ்வாறு செல்பவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடு செய்தால், காணொலியூடாக அந்த முறைப்பாடுகளை மேற்கொண்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்” -என்றார். (உ-5,71)

### கர்ப்பிணி...

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு ஓராண்டாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சந்தேகநபர்களும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

வழக்கு விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை என்பதால் விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸாரிடமிருந்து கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் பாரப்படுத்துமாறு வழக்குத் தொடுநர் தரப்பினர் நீதிமன்றிடம் கோரிவந்த நிலையில் நேற்று அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி ஊர்காவற்றுறையிலுள்ள வீடொன்றில் இருந்து கொலை செய்யப்பட்ட நிலையில் 7 மாத கர்ப்பிணி சடலமாக மீட்கப்பட்டிருந்தார். ஞானேஸ்வரன் மேரிறம்சியா என்பவரே கொலை செய்யப்பட்டிருந்தார். (உ-4)

### பல்கலை...

னவே கோப்பாய் பெலிஸாரால் 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 9 மாணவர்கள் நேற்றுப் பொலிஸ் நிலையத்தில் தாமாகச் சரணடைந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் மாணவர்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது. 6 மாணவர்கள் காயமடைந்திருந்தனர். அதனையடுத்து 3ஆம், 4ஆம் ஆண்டுப் பீடங்கள் மூடப்பட்டிருந்தன. கடந்த வாரம் கற்றல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகின. அதன் பின்னரும் மாணவர்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது. (உ-4,8)

### தாக்கப்பட்ட...

நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிறைச்சாலை வாகனத்தில் வந்த சிறைக் காவலர்களே சிறுவனைத் தாக்கினார்கள் என்று கூறப்படுகின்றது. உணவகம் ஒன்றுக்குள் வைத்துச் சிறுவன் மூர்க்கமாகத் தாக்கப்படும் காணொலிகள் மற்றும் ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகி இருந்தன.

இதனை அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக அதிகாரிகள் நேற்று கிளிநொச்சியில் உள்ள சிறுவனின் வீட்டுக்குச் சென்று அவனை நேரில் சந்தித்து விசாரணை நடத்தினர்.

“சிறுவனிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளோம். பொலிஸார், சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்டவர்களின் அறிக்கைகளைப் பெற்று உரிய விசாரணைகள் நடத்தப்படும்” என்று ஆணைக்குழுவின் யாழ்ப்பாண இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (உ-4,35)

### இந்தோனேசிய...

தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தோனேசிய அரச தலைவர் ஜோக்கோவிடோடோவிற்கும் இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தோனேசிய அரச தலைவருக்கு எடுத்துக் கூறிய எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்தியத்தில் இலங்கை மிகவும் பின்தங்கியுள்ள நிலையில் உள்ளது. அதனை மாற்றுவதற்கு பன்னாட்டு ஒத்துழைப்பு தேவை என்பதையும் சம்பந்தன் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார். தேசியப் பிரச்சினையின் காரணமாக ஐம்பது வீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் எனவும், இவர்களில் பெரும்பாலானவர்கள் கல்விமான்கள் எனவும் தெரிவித்ததோடு, ஒரு புதிய அரசமைப்பின் ஊடாக தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதன் மூலம் இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதனை உறுதி செய்யமுடியும் எனவும் தெரிவித்தார். (5)

### இழுத்தடிப்பதே...

மகிந்த சமர சிங்க பன்னாட்டு நீதிபதிகள் பக்கச்சார்பாகச் செயற்படுவார்கள் என கூறியுள்ளமை வெளிக்காட்டுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பன்னாட்டு நீதிமன்ற விசாரணை இடம்பெற்றால் அது பக்கச்சார்பாக அமையும் என மகிந்த சமரசிங்க தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் உதயன் பத்திரிகை வினவியது.

இலங்கை அரசு ஆரம்பத்திலிருந்தே பன்னாட்டு நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்ளக் கூடாது. அதற்கு அனுமதிக்க மாட்டோம் என்ற நிலையில் இருந்து வருகின்றது. இந்நிலையில் அரசு ஐ.நாவுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் பலவற்றை இன்றுவரை முழுமையாக நிறைவேற்றவில்லை. இதனால் எதிர்வரும் ஐ.நா. கூட்டத்தொடரில் அரசுக்கு மிகப் பெரிய அழுத்தம் ஏற்படும்.

இந்த நிலையில் பன்னாட்டு நீதிமன்ற விசாரணையை இலங்கை எப்பாடுபட்டாவது இழுத்தடிப்புச் செய்துவிட வேண்டும்-என்றமனோநிலையின் வெளிப்பாடாகவே மகிந்த சமரசிங்கவின் கருத்துக்கள் அமைந்துள்ளன -என்றார். (உ-8)

### புங்குடுதீவுச்...

ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயத்தை சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகலவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

புங்குடுதீவில் 9 வயதுப் பாடசாலை மாணவி கடற்படையினரின் வாகனம் மோதியதில் நேற்று உயிரிழந்தார். இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, காயமடைந்த மாணவியின் உறவினரை மருத்துவமனையில் நேரில் சென்று பார்வையிட்டார். மாணவியின் பாடசாலைக்கும் சென்றார்.

அதன் பின்னர் அவர் தெரிவித்ததாவது:

உயிரிழந்த மாணவி வகுப்பில் முதலிடம் பெறுபவர் என்று பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்தனர். இவ்வாறான அநியாய உயிரிழப்புக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. பாதுகாப்புத் தரப்பினர் இவ்வாறு செயற்படுவது கண்டனத்துக்குரியது.

விபத்தை ஏற்படுத்திய பாதுகாப்புத் தரப்பினரின் வாகனத்திற்கு பிரேக், சமிக்ஞை விளக்கு என்பன இல்லை. வாகனத்தின் ரயர்கள் மிக மோசமாகத் தேய்வடைந்த நிலையில் உள்ளன. இவ்வாறான வாகனத்தை பொதுமக்கள் பயன்படுத்தும் வீதிகளில் செலுத்த முடியுமா? போர்க் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இப்போதும் பாதுகாப்புத் தரப்பினர் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்த விடயங்களைச் சட்டம் ஒழுங்கு அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன் - என்றார். (உ-5)

### கடற்படை...

வீதியோரம் மோட்டார் சைக்கிளுடன் நின்ற பாடசாலைச் சிறுமியை கடற்படையினரின் பவள் கவச வாகனம் மோதியது என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். சிறுமி இழுத்துச் செல்லப்பட்டு பவள் வாகனச் சில்லில் சிக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

“புங்குடுதீவு றோ.க.த.க பாடசாலையில் கேசனா தரம் 4 இல் கற்கிறார். வீட்டிலிருந்து பேருந்து வரும் வீதிச் சந்தி வரை மாமனாருடன் உந்துருளியில் சென்றார். சந்தியில் சிறுமியை இறக்கிவிட்டு சசேஸ்வரன் புறப்பட்டபோது பேருந்து வரவில்லை. பாடசாலையில் இறக்கிவிடுங்கள் என்று கேசனா கேட்டாள். சசேஸ்வரன் கேசனாவை ஏற்றிக் கொண்டு பாடசாலைக்குப் புறப்பட்டார். மருத்துவமனைச் சந்தியால் பாடசாலைக்குத் திரும்புவதற்கு முற்பட்டபோது பவள் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக வருவது தெரிந்தது. சந்தியில் ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி பவள் கடந்து செல்லும்வரை சசேஸ்வரன் காத்திருந்திருந்தார். ஆனால் பவள் கவச வாகனம் அவர்களை மோதியது. சசேஸ்வரன் தூக்கி வீசப்பட்டார். கேசனா பவள் வாகனச் சில்லில் அகப்பட்டு மோட்டார் சைக்கிளுடன் சுமார் 10 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டாள். மோட்டார் சைக்கிள் சுமார் 15 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு வாகனத்தின் சில்லுக்குள் இறுகி நின்றது” என்று சாட்சிகள் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கிய கேசனாவில் எந்தவொரு அசைவும் இருக்கவில்லை. அவரையும் அவரது மாமனாரையும் அங்கிருந்தவர்கள் புங்குடுதீவு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு மருத்துவரோ தாதியரோ கடமையில் இருக்கவில்லை. அங்கிருந்த சிற்றூழியர்கள் நோயாளர் காவுவண்டியில் இருவரையும் ஏற்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பினர். மருத்துவமனையில் சேர்க்கப்படும்போதே கேசனா உயிரிழந்திருந்தாள். சசேஸ்வரன் சிகிச்சை பெற்றுவருகிறார்.

“கோத்தம்பர முகாம் கட்டளை அதிகாரிக்கு நாம் பலதடவைகள் முறைப்பாடு செய்திருந்தோம். இந்த வாகனம் இரவில் ஒரு முகப்பு விளக்குடன் (லைற்) மட்டும் பல நாள்களாக ஓடித் திரிந்தது. வேகத் தடுப்பு (பிறேக்) இல்லாமல் இந்த வாகனம் ஓடுகின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர். போர்க் காலத்திலேயே குறித்த வாகனம் பயன்படுத்தப்படுவது வழமையாக இருந்தது. போர் நிறைவடைந்த பின்னரும் அந்த வாகனத்தைப் பயன்படுத்துகின்றனர். அதுவும் எமக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தி இருந்தது. இன்று (நேற்று) அநியாயமாக ஒரு உயிரைக் கொன்றுவிட்டனர்” என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். பவள் வாகன சாரதி கைது செய்யப்பட்டார். அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார். கவச வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது.

புங்குடுதீவில் 4 ஆயிரத்து 200 பேரே இப்போது வாழ்ந்து வருகின்றனர். எனினும் அங்கு ஆறு கடற்படை முகாம்கள் உள்ளன. அவற்றை குறைந்தபட்சம் இரண்டாகக் குறைக்கவேண்டுமென்று பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல்களில் வலியுறுத்தப்பட்டிருந்தன. ஆனால் அது நடக்கவில்லை. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருந்தால் சிறுமியின் உயிர் பறிபோயிருக்காது என்று மக்கள் தெரிவித்தனர்.

மருத்துவமனைகளில் சிகிச்சையுடன் தொடர்புபடும் எந்தவொரு உத்தியோகத்தரும் கடமை முடியும்போது கடமையைப் பொறுப்பேற்பவர் வந்த பின்னரே கடமையிலிருந்து விலக முடியும் என்ற நியதி சுகாதார நடைமுறையில் உண்டு. விபத்தில் சிக்கியவர்களை நேற்று புங்குடுதீவு மருத்துவமனையில் சேர்த்தபோது அங்கு மருத்துவர் இருக்கவில்லை.

“அந்த மருத்துவமனையில் இரண்டு மருத்துவர்கள் கடமையில் உள்ளனர். ஒருவர் கடமைக்குச் சென்றுகொண்டிருந்தபோது மருத்துமனையில் இருந்த மருத்துவர் புறப்பட்டுவிட்டார். இடைவழியில் (அனலைதீவில்) வரும்போது சம்பவம் தொடர்பில் அந்த மருத்துவருக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த மருத்துவர் திரும்ப மருத்துவமனைக்குச் சென்றார்” - என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ரு-4,106,26)

# ஐ.தே.க. மீது மைத்திரி நேரடித் தாக்குதல்

## ஆட்சியைக் கைப்பற்றி அபிவிருத்தி செய்யவில்லை எனச் சாடல்

கொழும்பு, ஜன. 25

கொழும்பு மாவட்ட மக்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்கு பல ஆண்டு காலமாக வாக்களித்தபோதும் கடந்த 25 ஆண்டு காலப் பகுதியில் அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட எந்தவொரு மக்கள் பிரதிநிதியும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குற்றஞ் சுமத்தியுள்ளார்.



புறக்கோட்டை ஐக்கிய வியாபாரிகள் சங்கத்துடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மத்;திய வங்கி பிணைமுறி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சில பக்கங்களைக் காணவில்லையென சிலர் கூக்குரலிடுகின்ற னர். அதில் பக்கங்கள் எதுவும் குறைவடையவில்லை. சில சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்வரை அந்த ஆவணங்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. அதனை வெளியிடுவதன் மூலம் குற்றஞ் சுமத்தப்பட்டிருப்பவர்கள் நன்மை அடைவதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது.

மேலும், கொழும்பு மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்கு அவர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும்.

நகரத்தை அழகாகவும் தூய்மையாகவும் பேணுகின்ற அதேநேரம் மக்களின் வாழ்க்கையை அழகுபடுத்துவது மிகவும் அவசியமாகும்.

புறக்கோட்டை சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளினதும் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முறையான நிகழ்ச்சித் திட்ட மொன்றை நடைமுறைப்படுத்துவேன் - என்றார். (5)

## சுவிசில் அடைக்கலம் கோரும் இலங்கையரின் தொகை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 25

சுவிற்சர்லாந்தில் அடைக்கலம் தேடுவோரின் எண்ணிக்கை கடந்த ஆண்டு வெகுவாகக் குறைந்துள்ளதாக, சுவிஸ் அரச குடிவரவுச் செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையிலிருந்து அடைக்கலம் கோருவோரின் எண்ணிக்கை 38.8 சதவீத வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

2017ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தில் அடைக்கலம் கோரியவர்களின் எண்ணிக்கை, 33.5 வீதத்தினால் குறைந்திருக்கிறது. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடைக்கலம் கோருவோர்களிடம் இருந்து ஆகக் குறைந்த விண்ணப்பங்கள் கடந்த ஆண்டிலேயே கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டு எரித்ரியாவைச் சேர்ந்த 3 ஆயிரத்து 375பேர் அதிகளவில் சுவிசில் அடைக்கலம் கோரியுள்ளனர். எனினும், இது முன்னைய ஆண்டை விட 35 வீதம் குறைவாகும். சிரியாவில் இருந்து ஆயிரத்து 951 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இது 9 வீதம் குறைந்துள்ளது. ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஆயிரத்து 217 பேர் அடைக்கலம் கோரியுள்ளனர். இது 62 வீத வீழ்ச்சியாகும். துருக்கியில் இருந்து 852 பேர் சுவிசில் அடைக்கலம் கோரியுள்ளனர். கடந்த ஆண்டைவிட இது 62 வீதம் அதிகரித்துள்ளது. சோமாலியாவில் இருந்து 843 பேர் அடைக்கலம் கோரியுள்ளனர்.

இலங்கையிலிருந்து 840 பேர் சுவிசில் அடைக்கலம் கோரியுள்ளனர். இது 38.8 வீத வீழ்ச்சியாகும். (5)

## மகிந்த, கோத்தாவுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை

### ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைப்பு

கொழும்பு, ஜன. 25

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் காலத்தில் சுயாதீனத் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வழங்க வேண்டிய நிதித் தொகையைச் செலுத்தாமை தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினருக்கும் ரத்னாலங்கா மற்றும் அவன்காட் நிறுவனங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல் விடயங்களில் இடம்பெற்ற நிதி மோசடி குறித்து முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினருக்கும் எதிராகக் குற்றவியல் வழக்குத் தொடரப்பட வேண்டும் என்று ஊழல் மோசடி தொடர்பான அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழல் மோடிகள் சம்பந்தமான 34 தொகுதிகள் அடங்கிய விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, பிரியங்கர ஜெயரத்ன, பசில் ராஜபக்ச, மகிந்தானந்த அளுத்கமகே, சரத்குமார குணரத்ன, மகிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோருக்கு எதிராகவும் நிதி அமைச்சின் முன்னாள் செயலர் பி.பி.ஜெயசுந்தரவுக்கு எதிராகவும் மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் தனசிறி அமரதுங்க ரேணுக பெரேரா, அரச அதிகாரிகளான சுயாத்தா தமயந்தி, நிசாந்த வீரதுங்க, பிரியாத் பந்து உள்ளிட்ட பலருக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் இடம்பெற்ற நிதிமோசடி சம்பந்தமாக முன்னாள் அமைச்சர் சரத்குமார குனரத்ன உள்ளிட்ட ஐவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (5-61)

## வாக்களிப்பு நிலையங்களுக்கு முப்படைப் பாதுகாப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 25

உள்ளூராட்சித் தேர்தலின்போது வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முப்படையினரையும் பயன்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது.

பொலிஸ் திணைக்களத்தினருக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவினருக்கும் இடையே கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

வாக்களிப்பு நிலையத்திலிருந்து 400 மீற்றர்களுக்கு வெளியே முப்படையினர் பயன்படுத்தப்படுவார்கள். அவர்கள் எந்தக் காரணத்துக்காகவும் வாக்களிப்பு நிலையத்தினுள்ளேயோ, வாக்கு எண்ணும் நிலையத்தின் உள்ளேயோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். வாக்களிப்பு நிலையத்திலும், வாக்கு எண்ணும் நிலையத்திலும் வழமை போன்று பொலிஸாரே கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். (5.71)

## மொட்டின் மனு நிராகரிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாணந்துறை, வெலிகம நகர சபைகள் மற்றும் மகியங்கன, அகலவத்த, திரப்பன பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்காக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியி னால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை சவாலுக்குட்படுத்தி அந்தக் கட்சியால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் நேற்று முன்தினம் நிராகரிக்கப் பட்டன.

இந்த மனுக்கள் உயர்நீதிமன்ற நீதியரசர்களான புவனேஹ அலுவிஹார, கே.ரி.சித்ரசிறி, விஜித் கே.மலல்கொட ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்ட ரீதியான காரணங்கள் இன்மையால் நிராகரிக்கப்பட்டன. (5-31)

## நீதிமன்றுக்குள் கஞ்சா கொண்டு சென்றவர் கைது

புத்தளம் நீதிமன்றத்திற்குள் கஞ்சா விற்பனை செய்யச் சென்ற அக்காவும், தம்பியும் கஞ்சா பொதிகளுடன் கைது செய்யப்பட்டதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கல்பிட்டி பள்ளிவாசல்துறையில் வசித்து வரும் இவர்கள் வழக்குக்குப் பணம் கட்ட வேண்டும் என்று கூறி குழந்தையுடன் நீதிமன்றத்திற்குள் சென்றுள்ளனர்.

நீதிமன்ற வளாகத்தில் கடமையில் இருந்த பெண் பொலிஸார் பெண்ணைச் சோதனையிட்டபோது, அவரது உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 சிறிய கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. பெண்ணின் சகோதரனுடைய பணப்பையை சோதனையிட்ட போது அதில் கஞ்சாப் பொதி இருந்துள்ளது. சிறையில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படும் கைதிகளுக்கு மிகவும் தந்திரமான முறையில் அதிக விலைக்கு இவர்கள் கஞ்சாவை விற்பனை செய்து வந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (5)



## மைலோ விவகாரத்தில் மைத்திரிக்கு எதிரான நிலைப்பாட்டில் மகள்

கொழும்பு, ஜன. 25

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு எதிராக அவரது மகள் சத்துரிக்கா சிறிசேன செயற்பட்டுள்ளார்.

இலங்கையில் அதிக இனிப்புக் கலந்த மைலோ பானத்தை சிறுவர்களுக்கு வழங்க வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரி பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

அந்த உத்தரவுக்கு எதிராக அவரது மகள் சிறுவர்களுக்கு மைலோ பானம் வழங்கும் ஒளிப்படமே சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது. இந்த ஒளிப்படத்துக்கு பலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். உள்ளூராட்சித் தேர்தலை இலக்கு வைத்து தேர்தல் சட்டங்களை மீறி சிறுவர்களுக்கு உதவுவதாக ஒரு தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (5)

## பொலிஸாருக்கு பயிற்சி போதாதாம்

### சட்டம் ஒழுங்கு அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு.ஜன. 25

கதிர்காமத்தில் பொலிஸாரின் ஆணையை மீறி பயணித்ததாகக் கூறி மோட்டார் சைக்கிள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு காரணம் பொலிஸாருக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படாமையே என்று சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.



2016ஆம் ஆண்டு கொக்குவிலில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டது தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய சட்டம் ஒழுங்கு அமைச்சர் பொலிஸார் வானத்தை நோக்கியே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தாகக் குறிப்பிட்டிருந்தார். அதுவே மாணவர்களின் உடலில் துளைத்து உயிரிழப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே கதிர்காமத்தில் அதேபோன்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் சாகல தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளதாவது, பொலிஸாருக்கு முறையான தொழில்முறை பயிற்சி வழங்கப்படாத நிலையே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முக்கிய காரணம். கூடிய விரைவில் பொலிஸாருக்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் பயிற்சி செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (5)

## ரூபா 2 கோடி விவகாரத்தை கையிலெடுத்தது மகிந்த அணி

வரவு -செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேருக்கு தலா இரண்டு கோடி ரூபா லஞ்சம் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்திற்கு எதிராக, மகிந்த அணி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது, வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 15 பேருக்கு தலா இரண்டு கோடி ரூபா லஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசத்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலும் அரச தலைவர் மைத்திரி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் இது பாராதூரமான விடயமாகும். நாடாளுமன்ற வாக்கெடுப்பிற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே லஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கூற்றை அடிப்படையாக்கொண்டு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (5.61)

# ஊவா முதலமைச்சருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை தேவை

### கூட்டமைப்பு நாடாளுமன்றில் வலியுறுத்து

*கொழும்பு, ஜன. 25*

*பதுளை தமிழ் மகளிர் கல்லூரியின் அதிபரை மண்டியிட செய்த ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.*

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பதுளை தமிழ் மகளிர் கல்லூரி அதிபர் ஆர்.பவானியை ஊவா மாகாண முதலமைச்சர் மண்டியிட வைத்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் கடுமையான விசனத்தை நாம் தெரிவிக்கின்றோம். மலையகத்தில் அதிபர் பதவியை பெற்றுக்கொள்வது சாதாரண விடயமல்ல. எட்டாக் கனியாகும்.

ஊவா மாகாண முதலமைச்சரின் செயற்பாட்டின் ஊடாக உலகளவில் இலங்கைக்கு பெரும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சரின் கல்வி அமைச்சு பதவி பறிக்கப்பட்டமை தொடர்பில் மைத்திரிக்கும், ரணிலுக்கும் நன்றி கூறுகின்றேன். முதலமைச்சருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது விவாதமொன்று நடக்கும் போது சபாபீடத்தில் ஆளும் தரப்பில் அமைச்சர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ இல்லை. இலங்கையின் நாடாளுமன்ற மக்களாட்சி தொடர்பில் நோக்கும் போது இலங்கையின் மக்களாட்சியே கேள்விகுறியாகியுள்ளது - என்றார்.

(5,31)



# தேவை ஏற்பட்டால் அரசியல் மாற்றம்

### சு.க. அறிவிப்பு

கொழும்பு, ஜன. 25

பொருளாதார நெருக்கடிகளை கையாளவே மைத்திரி நேரடி தலையீட்டை மேற்கொண்டுள்ளார். நாட்டுக்கு தேவைப்படும் நிலையில் அரசியல் மாற்றத்தை முன்னெடுப்பார் என்று அரச தொழில் முயற்சி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்தன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் சிக்கல் நிலைமைகள் பொருளாதார நெருக்கடிகள் அனைத்தையும் சரிசெய்ய வேண்டும் என்றால் அது சரியான தரப்பிடம் இருக்க வேண்டும். அதனால்தான் அரச தலைவர் தலைமையில் பொருளாதார முகாமைத்துவத்தை முன்னெடுப்ப தாகக் கூறப்பட்டது. இப்போதுள்ள நிலமையில் தேர்தல் முடிந்த பின்னர் சில மாற்றங்களை முன்னெடுக்க நேரிடலாம். அரசியல் மாற்றமாக இது அமையும். நாட்டின் தேவையின் நிமிர்த்தம் அரசியல் ரீதியில் சகல மாற்றங்களையும் அரசதலைவர் முன்னெடுப்பார். மாற்றங்கள் அவசியமாகின்றன, அதிலும் உயரிய மட்டத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அவை அனைத்துமே விரைவில் இடம்பெறும் - என்றார்.

(5,31)

## உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரே அறிக்கைகள் மீதான விவாதம்

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஜன. 25

பிணைமுறி விசாரணை அறிக்கை மற்றும் பெரிய ஊழல் மோசடி தொடர்பான அறிக்கை ஆகியவற்றின் மீதான விவாதத்தை உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் நடத்துவதற்கு கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிணைமுறி மோசடி தொடர்பான ஆணைக்குழு அறிக்கையின் பக்கம் குறைவடைந்தமை தொடர்பாக ஏற்பட்ட சிக்கல் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன கட்சி தலைவர்களை பிரத்தியேகமாக சந்தித்து அறிவுறுத்துவார் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய கட்சி தலைவர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

(5)

# கூட்டு அரசு தொடருமா?

### எதிரணியின் கேள்வியால் சபையில் நேற்றுச் சர்ச்சை

கொழும்பு, ஜன. 25

கூட்டு அரசை நிறுவும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நீடிக்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஆளும் கட்சியிடம் கேள்வி எழுப்பியமையினால் நேற்றுச் சபையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை, மகிந்த அணி நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஷ் குணவர்தன கேள்வி எழுப்பியதை அடுத்தே சபையில் சர்ச்சையான நிலமை ஏற்பட்டது.

'நாட்டின் அரசமைப்புத் தொடர்பான முக்கியமான விடயமொன்றை சபைக்கு முன்வைக்க விரும்புகின்றேன். 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டு அரசை நிறுவப் போவதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யோசனையொன்றை முன்வைத்தார். இதன்போது அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் எண்ணிக்கையும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கூட்டு அரசில் அங்கம் வகிக்க முடியுமான அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அரசு ஏற்றுக்கொள்ளுமா? தற்போது இந்த விதிமுறை மீறப்பட்டுள்ளது என்பதனை ஏற்பீர்களா? ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நிறைவு பெற்றுள்ளமை அரசு ஏற்குமா? சிரானி விஜேவிக்கிரம மற்றும் பியசேன கமகே ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளமையினால் அரசமைப்பின் 46 ஆவது சரத்து மீறப்பட்டுள்ளது. இதனை ஏற்பீர்களா' என்று தினேஷ் குணவர்தன கேள்வி எழுப்பினார்.

'சிரானி விஜேவிக்கிரம இராஜாங்க அமைச்சினை பெற்றுக்கொண்டமையா உங்களது பிரச்சினை. சிரானி விஜேவிக்கிரம மீண்டும் உங்களுக்கு தேவையா?' என்று சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல கிண்டலாகக் கேட்டார்.

'சிரானி எனக்குத் தேவையில்லை. ஐக்கிய தேசியக் கட்சி சிரானியை வைத்துக் கொள்ளட்டும். தற்போது கூட்டு அரசின் இரு பிரதான கட்சிகளின் ஒப்பந்தம் நிறைவுபெற்றுள்ளது. அரசமைப்புக்கு முரணாக அமைச்சரவை இயங்கி வருகின்றது. ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் பதில் வழங்க வேண்டும்' என்று தினேஷ்குணவர்தன குறிப்பிட்டார்.

இதனையடுத்து பேசிய அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, ரணில் விக்கிரமசிங்க விரைவில் பதில் வழங்குவார். எனினும் கூட்டு அரசு தொடர்பாக எதிரணி கவலை கொள்ளத் தேவையில்லை. இது ஆளும் கட்சி பிரச்சினை என்று குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான அநுர குமார திசாநாயக்க, கூட்டு அரசு இரண்டு ஆண்டுகளுக்கே என்று கூறப்பட்டது. பிரதான கட்சிகளுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் செப்ரெம்பர் மாதமே நிறைவு பெற்று விட்டது. புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதா? என்று கேட்டபோது, இடையில் குறுக்கிட்டு பேசிய அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, இது கூட்டு அரசின் பிரச்சினையாகும். எதிரணி தலையிட வேண்டியதில்லை, என்றார்.

'இது கூட்டு அரசின் பிரச்சினை மாத்திரமல்ல. நாட்டு மக்களின் பிரச்சினையாகும். இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான ஒப்பந்தம் நீடிக்கப்படுமா? இல்லையா? புதிய ஒப்பந்தங்கள் ஏதும் கைச்சாத்திட்டிருந்தால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியாயின் சபாநாயகரே உங்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் ஏதும் கிடைத்துள்ளதா? என்றார் அநுரகுமார.

தனக்குப் புதிய ஒப்பந்த தொடர்பான எந்தவொரு நகலும் அதற்கான தகவல்களும் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் கரு ஜயசூரிய கூறினார்.

இதன்போது உதய கம்மன்பில, கூட்டு அரசின் ஒப்பந்தம் நிறைவு பெற்றுள்ள நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் சொகுசு வாழ்க்கைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமா? என்றார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய குறுக்கிட்டு இந்தக் கேள்விக்கான பதிலை ரணில் வழங்குவார் என்று கூறி வாக்குவாதத்தை நிறைவுக்கு கொண்டு வந்தார். (5,61)

## மண்ணெண்ணெய் முறைகேடுகளை தடுக்க அவசர சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 25

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மண்ணெண்ணெய் முறைகேடாக பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தானம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மண்ணெண்ணெய்யை முறைகேடாக பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தொடர்பில் சில தரப்புக்கள் போலிப் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இழப்புக்கு மத்தியிலும் கடற்றொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கும் வகையில் குறைந்த விலையில் மண்ணெண்ணெய்யை விற்பனை செய்கிறது. மீனவர்களுக்கோ, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கோ மண்ணெண்ணெய்யை விநியோகிக்கும் நடவடிக்கை வரையறுக்கப்படவில்லை. இவர்களுக்குத் தேவையான அளவு மண்ணெண்ணெய்யை விநியோகிக்குமாறு சகல நிரப்பு நிலையங்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் மானியத்தை காரணம்காட்டி பெரியளவில் இடம்பெறும் முறைகேடுகளை தடுக்கும் நோக்கிலேயே சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் இடம்பெறும் முறைகேடுகளை தடுப்பதற்காக அவசர சுற்றிவளைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பெற்றோல் கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பாக தகவல்கள் கிடைக்குமாயின், அது தொடர்பாக பொலிஸாருக்கு முறையிடலாம். பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் சுற்றி வளைப்புப் பிரிவின் தொலைபேசி இலக்கமான 077 7748 417 என்ற எண்ணுடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(5,61)

# முதலாம் ஆண்டு நினைவுதினம்

தோற்றம்
18 . 04 . 1958

மறைவு
05 . 02 . 2017



## அமரர் பொன்னம்பலம் அமிர்தலிங்கம்

**BA.Dip.in Edu., M.Phil.(Edu.) S.L.P.S**

(யா/ நடேஸ்வரக் கல்லூரி – முன்னாள் அதிபர், காங்கேசன்துறை,
திறந்த பல்கலைக்கழகம்–முன்னாள் விரிவுரையாளர், யாழ்ப்பாணம்)

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய் விழுது இழந்து நிற்கின்றோம்.
நோயென்று வந்திருந்தால் நொந்திருக்க மாட்டோம்
நொடிப்பொழுது கூட அமைதியின்றித் தவிக்கின்றோம்.
என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்....

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

**மனைவி, மகள்.**




Degree Progression to more than 300 universities in UK, USA, Australia etc.

Pearson | BTEC | University of Wolverhampton | University at Albany | University of Canberra | RICS | CIOB

**COMPUTING**
- Access (Degree Foundation Programme)
- BTEC HND in Computing
  - Network Engineering
  - Software Engineering
  - Applications Development
- BSc (Hons) in Computing
- BSc (Hons) in Management of IT

**ENGINEERING**
- BTEC National Diploma in Engineering
- BTEC HND in Civil Engineering
- HND in Electrical & Electronic Engineering
- BSc / BEng (Hons) in Civil Engineering

**MANAGEMENT**
- Diploma in Business Management (BMAC)
- BTEC HND in Business Management
- BTEC HND in Marketing
- BTEC HND in HR Management
- BA (Hons) in Business Management

**BIOMEDICAL SCIENCE**
- Foundation in Science
- BTEC HND in Biomedical Science
- BTEC HND in Biotechnology
- BSc (Hons) in Biomedical Science

**BUILDING STUDIES**
- CAD & BS
- BTEC HND in Quantity Surveying
- BSc (Hons) in QS (RICS)

**LANGUAGE & TEACHING**
- Diploma in English
- Certificate in English

**LEGAL STUDIES**
- LLB (Hons) in Law

**POSTGRADUATE STUDIES**
- Extended Postgraduate Diploma Level 7
- MBA
- MSc in Construction Project Management

BCAS Ranked "Platinum Partner" No.1 once again

UGC Recognized | TVEC Approved

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Employer Brand Award 2017 | Asia's Training Excellence Award 2017

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna.

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6.
T : 0112597217

City Campus
256, Galle Road,
Colombo 6.
011 236 4459

021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk


# 3ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

தோற்றம்
27 . 11 . 1951

மறைவு
28 . 01 . 2015



திதி:
25 . 01 . 2018



தோற்றம்
27 . 10 . 1998

மறைவு
19 . 12 . 2014

அமரர்
## செல்லையா துரைராசா (J.P)
(ஓய்வுபெற்ற விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரி)

அமரர்
## துரைராசா தனுசன்
(மாணவன்- யாழ்.இந்துக்கல்லூரி)


நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர் கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம் மூன்று ஆண்டுகள் சென்றபின்னும்
என்றும் அழியாத நினைவுகளுடன்.......

வெடியரசன் வீதி, காரைநகர்.

(CS/13145)(11.17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை நவநீதகுமாரன்
**(சின்னத்தம்பி)**

இன்னாவத்தை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவநீதகுமாரன் கடந்த (23.01.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - புவனேஸ்வரி (செல்லமணி சோதி) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கவேலு மற்றும் தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் தவக்குமாரியின் பாசமிகு கணவரும் டக் ஷாயினி, சஞ்சீவன், கம்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதாரகௌரி, நந்தகுமாரன்(ஜேர்மனி), ஜெயக்குமாரன், நிஷாந்தன் ஆகியோரின் சகோதரனும் ஈஸ்வரன், பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் தேவராசா நளினி ஆகியோரின் மருமகனும் சிவகுமார், கிரிஜா, தவறஞ்சன், தனரூபன்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சுபேந்தினி, கவிதா,ஜெயவதனி ஆகியோரின் சகலனும் கஜீபன், கௌசிகா, கஜலக் ஷன், றஜிதா, கிருஸ்ணவி, மகாலஷ்ணவி, வைஸ்ணவி ஆகியோரின் மாமனாரும் காயத்திரி, நாகசுமி, நாகதர்சினி, நாகலக்சி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சுழிபுரம் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இன்னாவத்தை,**
**கொல்லங்கலட்டி.**
(CS 13252) (14,17)
**தகவல்:**
**சகோதரர்கள்.**

---

## fz z Bm Q ryp



யாழ்.மாவட்டச் செயலகத்தில் திட்டமிடல் பிரிவின் சாரதியாக கடமையாற்றிய

### ஆறுமுகம் சிவலட்சணம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்**
(c/ 5646,16,174)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01.08.1970
உதிர்வு 07.02.2014

### அமரர் கந்தையா ரகுநாதன் (மகிந்தன்)
திதி: தைமாத பூர்வபட்ச நவமி

புன்னகை தவழும் உன்முகமும்
இராகம் இசைக்கும் உன்பேச்சும்
மண்ணுக்குநோகா மென்நடையும்
மனதுக்குள் வந்து
கண்களால் சொரியுதுவே.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16.03.1998
உதிர்வு 25.01.2009

### செல்வி மாலதி (மதுஷா) மனோகரராசா
மாணவி - தரம் 06 - 2009
கிளிநொச்சி மகாவித்தியாலயம்

பிறந்த நாளுக்கு
ஆடம்பரம் வேண்டாம்
பாடசாலை நூலகத்திற்கு
புத்தகம் வாங்கிக் கொடுப்போம்
என்ற உன் உயரிய சிந்தனை
கனவாய் போனதுவே.

**இல - 23, பண்றோட்,**
**திருநகர் வடக்கு கிளிநொச்சி.**
(CS 13205) (14.17)
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா மகாலிங்கம்

**தோற்றம்** 04.02. 1945
**மறைவு** 23.01.2018



காரைநகர், வெடியரசன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா மகாலிங்கம் 23.01.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அமராவதி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் பாசமிகு மைத்துனியும் குஞ்சரம், செல்வதி, வில்லியம்துரை, கெந்தீஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் உலகேஸ்வரி, தேவராசா, தேவராணி, இராசமலர், கோமதி, சற்குணராசா(கனடா), சாந்தினிதேவி(ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகராசா, சிவராணி, காலஞ்சென்ற துரைராஜா(போதனாசிரியர்) மற்றும் சரவணபவன், சந்திரரூபன், ஏஞ்சலின்(சத்தியா - கனடா), ஆனந்தராஜ்(ஆசிரியர்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் கெங்கேஸ்வரி, விஜயகுமாரி ஆகியோரின் பெரிய தாயும் அனுஷா, லதீசன், கஜானன், தீபன்(கனடா), றஞ்சித்குமார், செந்தூரன், மயூரி, கஸ்தூரி, புஸ்பகாந்தன்(ஆசிரியர்), மஞ்சுளா(பொறியியலாளர்), காலஞ்சென்ற தனுசன் மற்றும் கிரிஷாந், கோபிஷாந், சஜீவன், நிஷாந்கினி, கருணியா, ஹரிஸ், லிஷானி, ஜாதுசாளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக் ஷயா(கனடா), அபிஷேக்(கனடா), தயன், அஷ்வந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 624 9072/ 077 110 0124**

(CS 13149)(14,17)

வீட்டுத் திட்டத்துக்கு வழங்கப்பட்ட

## தரமற்ற ஓடுகளால் வேலைகளை முழுமை செய்ய முடியவில்லை

பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி.ஜன.25

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கு தரமற்ற ஓடுகள் விநியோகிக்கப்பட்டதால் வீட்டுத்திட்ட வேலைகளை முழுமை செய்ய முடியவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

வீட்டுத்திட்டப் பயனாளிகளின் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக மாவட்ட செயலகத்தால் ஓடுகள் உற்பத்தி நிலையங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அவர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது: சில வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஓடுகள் தரமற்ற நிலையில் காணப்படுகின்றன. வீட்டுத் திட்டத்துக்கென எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 75 ஆயிரம் ரூபா ஓடுகளுக்கு அறவிடப்பட்டது. எனினும் வழங்கப்பட்ட ஓடுகள் தரமற்றவை. உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டோம். அவற்றை மாற்றித் தருவதற்கு அதிகாரிகள் முன்வராததால் கூரைக்கான மரங்கள் போடப்பட்ட போதிலும் ஓடுகள் போடவில்லை. இதனால் வீட்டுவேலையை முழுமை செய்ய முடியவில்லை வழங்கப்பட்ட ஓடுகளை உரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மாற்றித் தரவேண்டும் - என்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டபோது, ஓடுகளை மாற்றித் தருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளவில்லை. இதுதொடர்பில் ஆராயப்படும் எனத் தெரிவித்தனர். (எ-9)

தேங்காய் உற்பத்தியைச் சீரழிக்கும்

## மைற்றா பூச்சியின் தாக்கத்தை தடுக்க தென்னங்குலையில் மருந்து வைக்கவும்

வடக்கு பிராந்திய தென்னை பயிர்ச்செய்கைச் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.25

**வடக்கு மாகாணத்தில் உள்ள தென்னைகளின் உற்பத்தியை குறைப்பதில் 'மைற்றா'பூச்சியின் தாக்கம் அதிகமாக உள்ளது. மைற்றா உயிர்கொல்லி மருந்தை தேங்காய் குலையில் வைத்தால் குறித்த பூச்சிகளை அழிக்க முடியும். இதனைத் தென்னைச் செய்கையாளர்கள் பின்பற்றிப் பயனடையலாம்.**

இவ்வாறு வடக்கு பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை தெரிவித்துள்ளது. சபை பற்றி மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் தேங்காயின் விலை அதிகரித்துச் செல்கின்றது. தென்னைச் செய்கையில் ஈடுபடும் பயனாளிகளுக்கான மானியங்களை வழங்கி வருகின்றோம். ஆனால் அண்மைக் காலமாக தேங்காயின் தரம் குறைந்து செல்வது கண்டறியப் பட்டுள்ளது. தேங்காய் சிறிய தாகவும், பால்தன்மை குறைவாகவும் காணப்படுகின்றது.



இது தொடர்பில் லுனுவிலவில் அமைந்துள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்துக்கு தெரிவிக்கப்பட்டது. ஆராய்ச்சின் விளைவாக தென்னை மரத்தின் உற்பத்தியில் 50 வீதமான உற்பத்தி குறைந்து வருவதற்கு 'மைற்றா' பூச்சியின் தாக்கமே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

'மைற்றா'பூச்சி தென்னை காய்க்க தொடங்கியவுடன் தேங்காயின் பொச்சு முகிழ் வழியே உள் நுழைந்து அதன் போசனைப் பொருள்களை உறிஞ்சுகின்றது. இதனால் தேங்காய் பருமனில் சிறிதாகவும், பால் தன்மை குறைவாகவும் காணப்படுகின்றது. இதனால் உற்பத்தி குறைகின்றது. பூச்சியின் தாக்கத்தை இல்லாமல் செய்வதற்கு செய்கையாளர்கள் முன்வர வேண்டும். இதற்கான உயிர் கொல்லிகளை மற்றும் அம்பன் ஆய்வுகூடத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த மைற்றா உயிர் கொல்லி ஒரு பையில் அடைக்கப்பட்டுள்ளது. இதனை மரத்தின் மேல் உள்ள தேங்காய் குலையில் வைக்க வேண்டும். இந்தச் செயற்பாட்டை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டும். நடப்பு ஆண்டில் சபையின் வேலைத்திட்டங்களில் மைற்றா ஒழிப்பு ஆண்டாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த உயிர் கொல்லி மருந்தை தென்னைப் பயிற் செய்கைச் சபையில் அல்லது கற்பகதரு சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

*அரியாலை இளைஞன் கொல்லப்பட்ட வழக்கு:*

## சிறப்பு அதிரடிப் படையினரின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.25

யாழ்ப்பாணம் அரியாலை மணியந்தோட்டம் பகுதி இளைஞன் சுட்டுகொன்ற வழக்கில்கைது செய்யப்பட்ட சிறப்பு அதிரடிப் படையினர் இருவரினதும் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி அரியாலை கிழக்கு மணியந்தோட்டம்உதயபுரம்ஆம் குறுக்குப்பகுதியைச் சேர்ந்த டொன் பொஸ்கோ ரிஸ்மன் என்ற இளைஞர் படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த வழக்கானது நேற்று முன்தினம் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி விளக்கமறியலானது நீடிக்கப்படுகின்றது என நீதிவான் எஸ்.சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர்கள் தரப்பு சட்டத்தரணி மோகனதாஸ்பிணை விண்ணப்பம் செய்திருந்தார். சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூரணப்படுத்தப்படவில்லை என குற்றப் புலனாய்வு பிரிவானது மேலதிக அறிக்கையூடாக மன்றுக்கு தெரியப்படுத்தியது. இதனையடுத்து நீதிவான் குறித்த இரு சிறப்பு அதிரடிப்படையினரதும் விளக்க மறியலை எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார். (எ-8)

## ரயர்களை எரித்தால் தண்டம்

யாழ்ப்பாணம்.ஜன.25

காணிகளில் அல்லது பொது இடங்களில் ரயர் எரிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் பத்தாயிரம் ரூபாவில் இருந்து 1லட்சம் ரூபா வரையில் தண்டம் செலுத்த நேரிடும் என்று சுகாதாரத்துறையினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றனர். சுற்றாடல் மாசடையக்கூடிய வகையில் ரயர்களை வளவுகளில் அல்லது பொது இடங்களில் எரிக்க வேண்டாம் என்று பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். வளவுகளில் பழைய ரயர்கள் காணப்படின் உள்ளூராட்சி சபைகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரத் துறையினர் கேட்டுள்ளனர். (எ-4-8,9)

## சபையின் திறனின்மையே அனந்தி வருந்தக் காரணம்

மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.25

வடக்கு மாகாண சபை வினைத்திறனாக செயற்பட்டிருந்தால் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள கண்காட்சிக்கு தன்னை அழைக்கவில்லை என வடக்கு மாகாண கைத்தொழில் அமைச்சர் அனந்தி சசிதரன் கலங்கியிருக்க மாட்டார். தங்கள் மீது முழுப் பிழையை வைத்துக் கொண்டு மற்றவர்களைக் குற்றம்சாட்டுவதில் எந்தப் பயனுமில்லை என வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள வர்த்தகக் கண்காட்சி நிகழ்வில் தன்னை அழைக்க வில்லை என்றும் மாகாண சபையைப் புறம்தள்ளி விட்டனர் எனவும் அனந்தி தெரிவித்த கருத்து தொடர்பில் கேட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: குறைகூறும் அனந்தி, கண்காட்சிக்கு முதலமைச்சரின் அமைச்சான உள்ளூராட்சி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதை அறிந்திருக்க வில்லையா?

அனந்தி சசிதரன் குற்றம் சாட்டவேண்டுமானால் முதலில் அவர் முதல்வரையே குற்றம் சாட்ட வேண்டும். ஏனெனில் கண்காட்சி நடைபெறவுள்ள இடம் யாழ்ப்பாண மாநகர சபை மைதானமாகும்.

யாழ்ப்பாண மாநகர சபை இப்போது மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. இது வடக்கு மாகாண முதல்வரின் வசமுள்ள அமைச்சாகும். எனவே முதலமைச்சரின் அனுமதியுடனேயே கண்காட்சி இடம்பெறவுள்ளது.

மாகாணத்துக்கு என கைத்தொழில்வாணிபம் சார்ந்த நியதிச் சட்டம் ஒன்றை உருவாக்கி இருந்தால் நாம் இதனைத் தட்டிக் கேட்டிருக்கலாம் என அமைச்சரே கூறியிருப்பதாக அறிகின்றேன். இதனூடாக அமைச்சரே மாகாண சபை வினைத்திறனாகச் செயற்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் இறுதிக் காலத்தில் இருந்து கொண்டு எவ்வித வினைத்திறனான செயற்பாடுகளையும் முன்னெடுக்காமல் மற்றவர்களைக் குறைசொல்வதில் எவ்வித பயனுமில்லை-என்றார்.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வர்த்தக சந்தை நாளை ஆரம்பமாகி தொடர்ந்து இரு நாள்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். (எ-8)

## கணித, விஞ்ஞான வினா விடை போட்டியின் இறுதி சனியன்று

யாழ்ப்பாணம்.ஜன.25

பொறியியல் வாரம் 1ஐ முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொறியியல் பீட மாணவர்கள் நடத்திய தமிழ்மொழி மூல கணித விஞ்ஞான வினா விடைப் போட்டியின் இறுதிக்கட்ட போட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.



போட்டியின் முதலாம் இரண்டாம் கட்ட வினாவிடைப் போட்டியானது வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நிகழ்ந்தது. இறுதிக்கட்டப் போட்டிக்கு திருகோணமலையிலிருந்து ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும், ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரியும், மன்னாரிலிருந்து சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியும், புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையும், முல்லைத்தீவிலிருந்து குமுழமுனை மகா வித்தியாலயமும், யோகபுரம் மகா வித்தியாலயமும், வவுனியாவிலிருந்து தமிழ் மத்திய மகா வித்தியாலயமும், ரம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலயமும், யாழ்ப்பாணத்திலிருந்து யாழ் இந்துக் கல்லூரியும், யாழ் ஹாட்லிக் கல்லூரியும், கிளிநொச்சியிலிருந்து கிளிநொச்சி மகா வித்தியாலயமும் சென் தெரேசா பெண்கள் கல்லூரியும் தெரிவாகியுள்ளன. என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எ-35)

# புதிய பாதை அனுமதிகளை திருத்தம் செய்வது கடினம்

## மாகாண போக்குவரத்து அமைச்சு கூறுகிறது

யாழ்ப்பாணம்,ஜன.25

**வடக்கு மாகாணத்தில் தனியார் பேருந்து விவரங்களை ஒழுங்குமுறைப்படுத்தி அவர்களுக்குப் புதிய பாதை அனுமதிப் பத்திரங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்ற முறையில் வழங்குவதற்காகவே அவர்களுக்குப் பாதை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. இனிமேல்அதில் திருத்தம் செய்வது கடினம் என்று மாகாண போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.**

"புதிய நடைமுறைகள் தொடர்பாக 6 மாதங்களுக்கு முன்னரே அரசிதழ் வெளியிடப்பட்டது. அதில் திருத்தங்கள் ஏற்படின் மூன்று மாத காலத்துக்கு முன்னரே தெரியப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்தியிருக்க திருத்தங்கள் மேற்கொண்டு இருக்கலாம். பாதை அனுமதிப் பத்திரங்கள் பேருந்து உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. அவர்களின் விவரங்களை ஒழுங்குமுறைப்படுத்தி புதிய வடிவத்துடன் கூடிய புத்தகத்தை வழங்குவதற்கே. அந்த நடவடிக்கையை அதிகார சபை மேற்கொண்டுள்ளது" என்று மாகாண போக்குவரத்து அமைச்சு மேலும் தெரிவித்தது.

வடக்கு மாகாணத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின்கீழ் இருந்த தனியார் போக்குவரத்துத்துறை வடக்கு மாகாண சபையின் அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

அதன் பின்னர் அதிகார சபை யின் கீழ் தனியார் பேருந்துகளின் பதிவுகள் நடைபெற்றன. வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பாதை அனுமதிக்கு அதிகளவில் பணம் அறவிடப்பட்டு வந்தது. ஆகவே சகல மாவட்டத்துக்கும் சமமாக பணத்தை அறவிடுவதற்கான அரசிதழ் வெயிடப்பட்டது. ஆனால் அந்தத் தொகை தமக்கு கட்டுபடியாகாது என்று தனியார் பேருந்து சேவையில் ஈடுபடுவோர் தெரிவித்துள்ளனர். தனியார் பேருந்துகளின் வருடாந்த பாதை அனுமதிக்கான தொகை 3 ஆயிரமாகவும், மாதாந்த சம்பவத் தாளுக்கான தொகை 200 ரூபாவாகவும் காணப்பட்டது.

ஆனால் வடக்கு மாகாண இலச்சினை பொறிக்கப்பட்ட புதிய பத்திரம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வருடாந்த பாதை அனுமதிக்கான தொகை 10 ஆயிரமாகவும், மாதாந்த சம்பவத் தாளுக்கான தொகை ஆயிரம் ரூபாவாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையை எம்மால் செலுத்த முடியாது. மாதத்தில் 15 நாள்கள் சேவையில் ஈடுபடும் எமக்கு இந்த தொகை அதிகமாக காணப்படுகின்றது. வருடாந்தப் பாதைஅனுமதிக்கான தொகை 5ஆயிரமாகவும், மாதாந்த சம்பவத் தாளுக்கான தொகை 500 ரூபாவாகவும் அமைய வழிவகைகள் செய்ய வேண்டும் என்று பேருந்து உரிமையாளர்கள் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-ரி)

# புலிகளின் துப்பாக்கியை வைத்திருந்த பொலிஸூக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம்,ஜன. 25

விடுதலைப் புலிகளின் துப்பாக்கியை அனுமதியின்றி வைத்திருந்த பொலிஸ் உத்தியோத்தருக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது.

கடந்த 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொடிகாமம் பகுதியில் விடுதலைப் புலிகளின் மைக்ரோ ரக துப்பாக்கியை அந்தப் பகுதியில் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மீட்டுள்ளார். அதனை கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் ஒப்படைத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. துப்பாக்கி பொலிஸ் மேலதிகாரிகளால் மீட்கப்பட்டது. துப்பாக்கியை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவருக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதின்றில் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தரும், துப்பாக்கியை வழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்படும் இராணுவச் சிப்பாயும் மேல்நீதிமன்றில் முற்பட்டனர். பொலிஸ் உத்தியோகத்தர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அவருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இராணுவச் சிப்பாய் குற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அவர் மீதான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (எ-4)

## சுகாதார அமைச்சின் கீழ் அமைக்கப்படும்

# கட்டடங்களுக்கான இடத்தெரிவில் அனுமதி பெறப்படவேண்டும்

யாழ்பாணம்.ஜன.25

வடக்கு மாகாணத்தில் சுகாதார அமைச்சின் கீழ் அமைக்கப்படும் புதிய கட்டடங்களுக்கான இடத்தைத் தெரிவு செய்யும்போது பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று துறை சார்ந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் மக்களின் தேவைகள் கருதி, புதிய கட்டடங்கள் புதிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. கால் நடை மருத்துவமனை, தாய் சேய் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் புதிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனது சேவைகள் பல்வேறு பிரிவினருக்கும் தேவை. ஆகவே புதிய கட்டடங்களால் பக்க சார்பு இன்றி அனைவரும் சேவைகளைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

ஒரு பிரிவினரின் நலன் கருதி கட்டடங்கள் அமைக்கும் பொது அதை ஏனையவர்கள் பயன்படுத்த முடியாமல் போகின்றது. அவ்வாறான இடங்களில் அமைக்கப்படும் கட்டடங்களால் பயன் ஏதும் இல்லை. ஆகவே புதிய இடங்களில் கட்டடங்களை அமைக்கும்போது அது பற்றிய தகவல்களை பிரதேச செயலகரின் ஊடாக அதனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்க வேண்டும். இதன்போது பல்வேறு தரப்பினரின் கருத்துக்களும் பெறப்படும். அதன் பின்னர் பொருத்தமான இடங்களில் கட்டடங்களை அமைக்கும் போது அது பயனுள்ளதாக அமையும். இது தவிர சட்ட ரீதியாக உடைமையாக்கப்படாத காணிகளையும் தெரிவு செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (எ-ரி)

# வன்புணர்ந்தவருக்கு தண்டனை ஒத்திவைத்த கடூழியச் சிறை

## யாழ். மேல் நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம்.ஜன.25

சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்தவருக்கு 2 வருடம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இழப்பீடாக 40 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் நேற்று உத்தரவிடப்பட்டது. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2012ஆம் ஆண்டு சிறுமியைக் கடத்திச் சென்று கனகராயன் குளம் பகுதியி[illegible]து வைத்திருந்ததோடு 3 தடவைகள் வன்புணர்ந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்[illegible]கமைய அவருக்கு எதிராக 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். இருவரும் விரும்பியே அவ்வாறு சென்றனர் என்றும் கூறப்பட்டது. அதையடுத்து மேற்குறித்த தண்டனை விதிக்கப்பட்டது. ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டமும் விதிக்கப்பட்டது. (எ-4)

# தேர்தல் சுவரொட்டிகளை அப்புறப்படுத்தப் பணிப்பு

## உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களுக்கு தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.25

மின்கம்பங்கள் மற்றும் தொலைத் தொடர்புக் கம்பங்கள் ஆகியவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தேர்தல் சுவரொட்டிகளை அப்புறப்படுத்துமாறு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அனைத்து உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில், தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள் காட்சிப்படுத்துவது தேர்தல் திணைக்களத்தால் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் பல வேட்பாளர்கள் தமது தேர்தல் சுவரொட்டிகளை மின்கம்பங்களிலும் தொலைத்தொடர்பு கம்பங்களிலும் காட்சிப்படுத்தி வருகின்றனர். அவை தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரானது என்பதால் உடனடியாக அப்புறப்படுத்துமாறு அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

'தூய்மையான நகரத்தை உருவாக்குவோம்: சுத்தமான நகரமாக்குவோம்' என மேடைகளில் முழங்கும் வேட்பாளர்கள் நகரத்தை அசிங்கப்படுத்தும் வகையில் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தி வருகின்றனர். நகரத்தின் தூய்மைத்தன்மையை அசிங்கப்படுத்தும் வகையில் சுவரொட்டிகளை காட்சிப்படுத்துபவர்கள் எவ்வாறு உள்ளூராட்சி சபைகளை வழிநடத்தவுள்ளனர் என மக்களும் கேள்வியெழுப்புகின்றனர். (எ-9)

# வர்த்தகர்கள் இருவருக்கு 12ஆயிரம் ரூபா தண்டம்

தென்மராட்சி.ஜன.25

திகதி காலாவதியான பிஸ்கட், சோடா மற்றும் பால்மா வகைகளை விற்பனைக்கு வைத்திருந்த சாவகச்சேரி வணிகர்கள் இருவருக்குத் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நகரப் பகுதி வணிக நிலையங்களில் அண்மையில் பரிசோதனை நடத்தப்பட்டது. காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரு வணிகர்கள் இனங் காணப்பட்டனர். அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வணிகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் 12 ஆயிரம் வீதம் தண்டம் விதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்.ஜன.25

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் (வடமாகாணம்) வருடாந்த பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் சுன்னாகம் சேவை நிலையத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் வ.சுப்பி ரமணியம் தலைமையில் நடைபெறும். (எ-4)

# பிரதிநிதி மாநாடு

யாழ்ப்பாணம்.ஜன.25

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவை சங்கத்தின் அங்கத்தவர்களின் பிரதிநிதி மாநாடு கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள், தொழிற்சங்கத் தலை வர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-4)

# ஒரே வலையமைப்பின் கீழ் உள்ளூராட்சி சபைகள்

யாழ்ப்பாணம்.ஜன.25

வடக்கு உட்பட நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சி சபைகளையும் ஒரே வலையமைப்பின்கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இலத்திரனியல் முறைமையை அமுல்படுத்தும் ஆரம்ப நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நடுவண் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தொலைத் தொடர்புகள் அமைச்சு, தகவல் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவை இணைந்து இலத்திரனியல் உள்ளூராட்சி முறைமையினை ஆரம்பிக்கவுள்ளன.

நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபா, தகவல் தொடர்பாடல் அமைச்சர் ஹரின் பெர்ணாண்டோ ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்து உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# ஊவா மாகாண விவகாரம்: திருமலையிலும் ஆர்ப்பாட்டம்

பதுளை, ஜன.25

**ஊவா மாகாணத்தில் தமிழ் பாடசாலையொன்றில் அதிபரை முழந்தாழிட வைத்த விவகாரத்தைக் கண்டித்து திருகோணமலையில் எதிர்ப்பு நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளனர் என கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராஜா நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

"ஊவா மாகாணத்தில் இடம்பெற்றுள்ள இந்தச்செயல் கல்விப் புலத்திலுள்ளோரை அவமதிப்பதாக உள்ளது. இது போன்ற அருவருக்கத் தக்க சம்பவங்கள் இனிமேல் எதிர்காலத்தில் நாட்டில் எந்தப்பாகத்திலும் இடம்பெறக் கூடாதென்பதற்காக இந்தக் கண்டன எதிர்ப்புநடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம்.

கல்வித் துறையை சுதந்திரமானதாகவும் அரசியல் கலப்பற்றதாகவும் இயக்குவதற்கு அரசியல்வாதிகள் அனுமதிக்க வேண்டும்.

தமது அரசியலை உரசிப் பார்க்கின்ற இடமாக கல்வித்துறையை எவரும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தும் அடையாள எதிர்ப்பாக எமது கண்டன எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெறும்.

உண்மையை மூடி மறைக்கும் அல்லது முன்னுக்குப்பின் முரணாக பொது வெளியில் கருத்து வெளியிடுவதற்கு கல்விப் புலத்திலுள்ளோருக்கான தடைகள் தொடர்பாக ஆராய்ந்து உண்மை நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)



## கல்வி அமைச்சராக செந்தில் தொண்டமான் பதவியேற்பு

பதுளை, ஜன.25

ஊவா மாகாண தமிழ் கல்வி அமைச்சராக செந்தில் தொண்டமான் மாகாண ஆளுநர் எம்.பி.ஜயசிங்க முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தனது கல்வியமைச்சு பதவியில் இருந்து விலகியதை யடுத்து, செந்தில் தொண்டமான் பதவியேற்றுள்ளார். பாடசாலை அதிபர் ஒருவரை மண்டியிட வைத்த சம்பவம் தொடர்பில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து ஊவா மாகாண முதலமைச்சர் தனது கல்வி அமைச்சு பதவியிலிருந்து விலகினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற)

## முதிரை மரக்குற்றிகளுடன் இருவர் கைது



கிளிநொச்சி, ஜன.25

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட பெறுமதியாக முதிரை மரக்குற்றிகள் கிளிநொச்சி பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மரக்காலை ஒன்று க்கு மரங்கள் கடத்தப்பட்ட நிலையில் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்பு அணியினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியின் காடுகளில் பெறுமதியான முதிரை மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு நகருக்கு கடத்தப்பட்டு வருகின்றமை தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து இந்த மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றின் பெறுமதி நான்கு இலட்சத்திற்கும் அதிகம் என கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இரண்டு டிப்பர் வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற - 35)

## மு.கா.அமைப்பாளர் பதவி விலகினார்

மட்டக்களப்பு,ஜன.25

கிழக்கு மாகாண முஸ்லிம்களை இழிவுபடுத்தி முகநூல் கருத்து வெளியிட்டு சர்ச்சைக்குள்ளாகியுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையின் பிரதித் தலைவருமான ஷபீக் ரஜாப்தீன், நேற்று பதவிகளிலிருந்து விலகினார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இந்த விடயம் தொடர்பில் விளக்கம்



கோரியதை தொடர்ந்தே, ஷபீக் ரஜாப்தீன் இத்தீர்மானத்தை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்மாந்துறையைச் சேர்ந்த முகநூல் நண்பர் ஒருவருடன் சமகால அரசியல் தொடர்பாக விவாதிக்கும்போது, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் செயற்பாடுகளை விமர்சித்தும் இழிவுபடுத்தியும் ஷபீக் ரஜாப்தீன் கருத்துகளை வெளியிட்டிருந்தார். என்று கூறப்படுகின்றது. (ற-ரி5)

## சட்ட விரோத மணல் அக்ழ்வு ரூ 5 லட்சத்து 60,000 தண்டம்

மட்டக்களப்பு, ஜன.25

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார்.

12 சந்தேக நபர்களும் நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் முன்னிலையான போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்துக்கு முரணாக வாவியின் உட்பகுதியில் மணல் அகழ்ந்த குற்றச்சாட்டின்பேரில் 12 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் சட்டத்தை மீறிய குற்றத்துக்காக ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

பொலிஸாரால் கைப்பற்றபட்ட மணல் அரச உடமையாக்கப்பட்டதுடன் உழவு இயந்திரங்களை விடுவிக்க மாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (ற-ரி5)

## மண்முனை மக்கள் மறியல் போராட்டம்

மட்டக்களப்பு, ஜன.25

மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை தென் மேற்குப் பிரதேசத்துக்குட்பட்ட மக்கள் மாவடிமுன்மாரி வீதியை மறித்து நேற்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வதை நிறுத்துமாறு கோரியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 18ஆம் திகதி குறித்த மக்கள், சட்டவிரோதமாக மண்ணேற்றுவதற்கு எதிராக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், மண்ணேற்றுவதால் தமது வளம்சுரண்டப்படுவதுடன், இயற்கை பாதிப்புக்கள் ஏற்படுகிறது எனவும் வீதிகள் உடைந்து போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

பிரதேச செயலாளர், சட்டவிரோத மணலேற்றுவதனை நிறுத்துமாறு, உத்தரவிட்டிருந்தபோதிலும், சட்டவிரோத மண்ணேற்றும் செயற்பாடு நிறுத்தப்படாமையால் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் எனத் தெரிவித்தனர். (ற-ரி5)



## திடீர் சுகவீனத்தால் 150 மாணவர்கள் மருத்துவமனையில்

பொலனறுவை.ஜன.25

பொலனறுவை புலத்திசிபுர தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் 150 மாணவர்கள் திடீரென்று சுகவீனமுற்ற நிலையில் நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அனைவரும் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நோய்க்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்தக் கல்லூரி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)



## இலங்கை வந்தடைந்தார் இந்தோனேசிய அரச தலைவர்

கொழும்பு, ஜன.25

இந்தோனேசிய அரச தலைவர் ஜோகோ விடோடோ இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பையேற்று வந்த இந்தோனேசிய அரச தலைவர் இராணுவ மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து இரு நாட்டு அரச தலைவர்களுக்கு இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தோனேசிய அரச தலைவருக்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் பொருளாதாரம் வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ற)

## குர்திஷ் ஆயுதக் குழுவுக்கான ஆதரவை உடன் நிறுத்துங்கள்

அமெரிக்காவை எச்சரிக்கிறது துருக்கி



அங்காரா, ஜன. 25

சிரியாவில் குர்திஷ் ஆயுதக் குழுவுக்கு அளிக்கும் ஆதரவை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று துருக்கி அரசு வலியுறுத்தி உள்ளது.

சிரியாவில் குர்திஷ் ஆயுதக் குழு செயற்பட்டு வருகிறது. இந்த ஆயுதக் குழுவுக்கு அமெரிக்கா இராணுவ உதவிகளையும், நிதி உதவிகளையும் செய்து வருகிறது. குர்திஷ்அமைப்பை தனது எதிரியாகக் கருதுகிறது துருக்கி. இதனால் அவ்வப்போது துருக்கிக்கும், குர்திஷ் குழுவுக்கும் இடையில் போர் நடைபெறும். தற்போதும் கடும் போர் நடை பெற்று வருகிறது. இந்த நிலையிலேயே குர்திஷ் ஆயுதக் குழுவுக்கான உதவியை நிறுத்துமாறு அமெரிக்காவை எச்சரித்தது துருக்கி.

"சிரியாவுக்கு அருகில் எங்கள் எல்லையில் குர்திஷ் அமைப்பு தனது கட்டமைப்பை நிறுவும் செயலை பொறுத்துக் கொள்ள முடியாது.

அந்த அமைப்புக்கு அமெரிக்கா வழங்கும் இராணுவ உதவியையும், நிதி உதவியையும் பொறுத்துக் கொள்ள இயலாது" என்று துருக்கி யின் தரப்பில் குறிப்பிட்டுள்ளது. (ம)



குர்திஷ் அமைப்புக்கு எதிரான தாக்குதல்

# துருக்கிக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வொஷிங்டன், ஜன. 25

குர்திஷ் ஆயுதக் குழுவுக்கு எதிராக துருக்கி நடத்திவரும் தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை விடுத்தது.

துருக்கிநாட்டின்கிழக்கு, தென்கிழக்குப் பகுதியில் வசித்துவரும் குர்திஷ்தான் மக்களுக்குஆதரவாகவும்அவர்களின் தனிநாட்டுக்கோரிக்கையைமெய்ப்பிக்கும் வகையிலும் குர்திஷ் ஆயுதக் குழு போராடி வருகிறது. குர்திஷ் ஆயுதக் குழுவுக்கு எதிராக துருக்கியும் அவ்வப்போது தாக்குதல் நடத்துவது வழமை. தற்போதும் குர்திஷ் ஆயுதக்குழுவுக்கும் துருக்கிப் படைக்கும் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில்குர்திஷ்அமைப்புக்குஎதிராக நடத்தப்படும்தாக்குதலுக்குஅமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

"சிரியாவில்ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிராக நடைபெறும் போரில் குர்திஷ் ஆயுதக் குழுவும் இணைந்து பணியாற்றி வருகிறது. அந்தப் படையைக் குறிவைத்து துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்துவது தீவிரவாதத்துக்கு எதிரான போரை பலவீனப்படுத்தும்" என்று அமெரிக்காவின் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பென்ஸுக்கு அதியுயர் பாதுகாப்பு

இஸ்ரேலுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்கத் துணை அதிபர் பென்ஸுக்கு அங்கு உச்சக்கட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பலஸ்தீனத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றிஅவற்றைத்தன்னுடன் இணைத்து வைத்துள்ளது இஸ்ரேல். அந்த நாடு ஜெருசலேமை தனது தலைநகராகவும் அறிவித்திருந்தது. எனினும் இஸ்ரேலின் இந்த அறிவிப்புக்கு பிறிதெந்த நாடும் அங்கீகாரம் கொடுக்கவில்லை. இந்த நிலையில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இஸ்ரேலின்தலைநகராகஜெருசலேமைஅங்கீகரித்தார்அமெரிக்க அதிபர் ட்ரம்ப். எனினும் அமெரிக்காவின் இந்த அறிவிப்பை எந்த நாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. கிழக்கு ஜெருசலேம் பலஸ்தீனத்தின் தலைநகர் என்று உறுதிபட அறிவித்துள்ளது ஐரோப்பிய ஒன்றியம். இந்த விவகாரம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது.

அமெரிக்க துணை அதிபர் பென்ஸ், தற்போது இஸ்ரேலுக்குச் சுற்றும்பயணம்மேற்கொண்டுள்ளார். இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகம் ஜெருசலேமில் எதிர்வரும் 2019ஆம்ஆண்டுமுடிவுக்குள் திறக்கப்படும் என்று பென்ஸ் தெரிவித்திருந்தார். அவரது இந்தக்கருத்தைஅடுத்துபலஸ்தீனம், காசா, மேற்குக்கரை ஆகிய இடங்களில் நடைபெற்றுவந்த போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. இதையடுத்து பென்ஸுக்கான பாதுகாப்புமேலும்அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம)

## லிபியாவில்தாக்குதல் 22 அப்பாவிகள் சாவு

லிபியாவில்நேற்றுமுன்தினம்நடத்தப்பட்ட இரட்டைக்குண்டுத் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர்.

தொழுகைமுடித்துவந்தவர்களை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவ இடத்தில் 22 பேர் உயிரிழந்தனர். சுமார் 30 பேர் காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில்பலரின்நிலைமைகவலைக்கிடம்என்பதால்உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. தாக்குத லுக்கு நேற்று மாலை வரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (ம)





சிரியாவில்முகாமிட்டிருக்கும்குர்திஷ்ஆயுதக்குழுவுக்குஎதிராககடும்போரை முன்னெடுத்து வருகிறது துருக்கி. அதுதொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

## "ஈரானுக்கு ஏவுகணைகளை ஏற்றுகிறது வடகொரியா"



ஈரானுக்கு கப்பல்கள் மூலம் கள்ளத்தனமாகவடகொரியாஏவுகணைகள் ஏற்றுமதிசெய்கிறது என்று அணுவாயுதவல்லுநர்கோர்டான்சங்தெரிவித்தார். உலக நாடுகளின் கண்டனங்களைப்புறம்தள்ளிஏவுகணைமற்றும் அணுவாயுத பரிசோதனைகளை வடகொரியா நடத்தியுள்ளது. இதன் காரணமாக, அந்தநாட்டின்மீதுஐ.நா சபை பல்வேறு தடைகளை விதித்தது. தற்போது, கள்ளத்தனமாக ஈரானுக்கு ஏவுகணைகளை வடகொரியாவழங்கிவருகிறதுஎன்றுகுற்றச்சாட்டுவைக்கப்பட்டு வருகிறது.

'நியூக்ளியர்ஷட்டவுன்' என்றபுத்தகத்தின் ஆசிரியரும், அணுவாயுத வல்லுநருமான கோர்டான் வடகொரியா தொடர்பில் சில காட்டமான கருத்துக்களை வைத்துள்ளார்.

"ஈரானுக்குக்கப்பல்கள்மூலமாகவடகொரியாகள்ளத்தனமாகஏவுகணைகளை ஏற்றுமதி செய்து வருகிறது. இதனை அமெரிக்கா தடுக்க வேண்டும். இதனை நாம் அனுமதிக்கக் கூடாது. இதை அனுமதித்தால், அது மூன்றாம்உலகப்போருக்குவழிவகை செய்யும். ஐ.நா தனது விதிமுறைகளை செயல்படுத்தா விட்டாலும், அமெரிக்காசெய்யவேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார். (ம)

# தலிபான்களுக்குஎதிராக நடவடிக்கைகள் தேவை

## பாகிஸ்தானுக்கு அமெ. 'அட்வைஸ்'



> பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு புகலிடம் தருகிறது என்று எங்களைப் பார்த்து சொல்கிறவர்கள், அதற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.


வொஷிங்டன், ஜன. 25

"தலிபான் அமைப்புக்கு எதிராக பாகிஸ்தான்ஆக்கபூர்வமானநடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள நட்சத்திர விடுதியொன்றில் ஆயுததாரிகள் அண்மையில் நடத்திய தாக்குதலில் 45 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு தலிபான் அமைப்புப் பொறுப்பேற்றது. தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு எதிராக சில கடும் கருத்துக்களை வைத்துள்ளது.

அமெரிக்க அதிபரின் இல்லான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சாரா, "தலிபான்தலைவர்களைபாகிஸ்தான்கைது செய்ய வேண்டும் அல்லது அங்கு இருந்து உடனே வெளியேற்ற வேண்டும். தலிபான் பயங்கரவாதிகள் தனது நாட்டில் இருந்து செயல்படுவதை பாகிஸ்தான் தடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

சாரா சாண்டர்ஸ் நிருபர்களைச் சந்தித்த அடுத்த சில நிமிடங்களில் அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் அய்ஜாஸ் அகமது சவுத்ரி பிறிதொரு நிகழ்ச்சியில் உரையாற்றினார். அப்போது அவர், "பாகிஸ்தானில் இருந்த பயங்கரவாதிகளையும், அவர்களது புகலிடங்களையும், ஆயுதத் தொழிற்சாலைகளையும் படைகள் ஒழித்துக்கட்டி விட்டன. இந்தநிலையில்பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு புகலிடம் தருகிறது என்று எங்களைப் பார்த்துசொல்கிறவர்கள், அதற்கான ஆதாரத்தைக்காட்டவேண்டும். இதை ஒரு பகிரங்கச் சவாலாக சொல்கிறேன். 10 மாதங்களாக நாங்கள் ஆதாரத்தை கேட்டுக்கொண்டு இருக்கிறோம். பாகிஸ்தானில் எந்த குகையிலாவது பயங்கரவாதிகள் இருந்தால் காட்டுங்கள். நாங்கள் தீர்த்துக்கட்டுகிறோம்" என்று குறிப்பிட்டார். (ம)




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பன்னாட்டு விசாரணையை நோக்கி நகரும் அவசியம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முதன்மை அமர்வுகளில் ஒன்று எதிர்வரும் பங்குனி மாதம் நடைபெற உள்ள நிலையில், கலப்பு நீதிமன்றத்துக்கும் வெளிநாட்டு நீதிபதிகளுக்கும் எதிரான குரல் அரச பக்கத்தில் இருந்து உரமாக எழுந்துள்ளது. ''வெளிநாட்டு நீதிபதிகள் பக்கச்சார்பானவர்கள், வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அமையவே செயற்படுவார்கள், இது இலங்கைக்குச் சாதகமாக அமையாது, எனவே வெளிநாட்டு நீதிபதிகளை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை '' என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு மேலும் 2 வருட கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அது தொடர்பான தீர்மானம் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தொடர்பில் 2017ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தில், 2015ஆம் ஆண்டுத் தீர்மானத்தைக் கொழும்பு அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பானவாய்மூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் 2018 பங்குனி மாத அமர்வில் முன்வைப்பார்.

ஆணையாளரின் அந்த அறிக்கை வருவதற்கு ஒரு மாதம் இருக்கையிலேயே, 2015ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டு 2017ஆம் ஆண்டில் அதனை நிறைவேற்றுவதாக மீண்டும் வாக்குறுதியளித்த கலப்பு நீதிமன்றம் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் விடயத்தில் இருந்து தாம் முழுமையாகப் பின்வாங்குவதாகக் கொழும்பு அறிவித்துள்ளது.

அமைச்சர் மகிந்த சமரசிங்கதான் இந்த அறிவிப்பை விடுத்தார் என்பதால் அது அரசின் கருத்தல்ல என்று நிராகரிக்க வேண்டிய அவசியமில்லை. அரச தலைவரோ தலைமை அமைச்சரோ சமரசிங்கவின் கருத்தை நிராகரிக்கவில்லை என்பது மட்டுமல்ல கடந்த காலங்களில் இதே கருத்தைத்தான் அவர்களும் தெரிவித்திருந்தார்கள். எனவே வெளிநாட்டுநீதிபதிகளை ... ப்போவதில்லை என்பதை அடுத்த பங்குனி மாத அமர்வில் அ... அறிவித்துவிடும் என்று அவர் சொல்வதை முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட முடியாது.

2015ஆம் ஆண்டில் தான் ஏற்றுக்கொண்ட எல்லா நல்ல விடயங்களிலும் இருந்து கொழும்பு பின்வாங்க ஆரம்பித்துவிட்டதற்கான கடைசி உதாரணமாகத்தான் அமைச்சரின் கருத்து அமைந்திருக்கிறது. பன்னாட்டு அழுத்தங்களில் இருந்துதன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உத்தியாகத்தான் ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானங்களை மைத்திரி– ரணில் கூட்டு அரசு பயன்படுத்திக்கொண்டது என்கிற விமர்சனங்களை உறுதிப்படுத்துவதாக கொழும்பின் தற்போதைய போக்குக் காணப்படுகின்றது.

நல்லாட்சி, நல்லிணக்கம் என்பவற்றை நோக்கி கூட்டு அரசு முன்னெடுத்த முக்கியமான, பலமான அடியாக வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் உலகநாடுகளால் பார்க்கப்பட்டது; வரவேற்கப்பட்டது. கொழும்பு ஏற்றுக்கொண்ட அந்த நிலைப்பாட்டில் இருந்து அது பின்வாங்க முடியாது. அதற்குப் பன்னாட்டுச்சமூகம் இடமளிக்க மாட்டாது என்றும் தமிழர் தரப்பில் விளக்கம் சொல்லப்பட்டது.

இப்போது அவை அனைத்தும் தலைகீழாகி வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்றுக்கொள்ளமாட்டோம், நீதியான உள்நாட்டு விசாரணையை மட்டுமே முன்னெடுப்போம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் அறிவிக்கப்போவதாகச் சொல்லுமளவுக்கு நிலமை வளர்ந்துவிட்டது.

உள்நாட்டு விசாரணைக்கான எந்தவொரு ஏற்பாடும் இல்லாத நிலையிலும், உள்நாட்டு விசாரணையொன்றை ஏற்றுக்கொள்வதற்குப் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்கள் தொடர்ந்துதிட்டவட்டமாக மறுத்துவரும் நிலையிலும் அரசு வெளிநாட்டு நீதிபதிகளைக்கொண்ட கலப்பு நீதிமன்றத்தை மறுத்திருப்பதானது பன்னாட்டு விசாரணை ஒன்றைத் தவிர மாற்று வழிகள் எதுவும் தமிழர்களுக்கு இல்லை என்றாக்கிவிட்டது. இனி பன்னாட்டு விசாரணையை நோக்கியே தமிழர்களின் காய் நகர்த்தல்கள் அமைந்தாக வேண்டும்.



# அவலங்களை எதிர்கொள்ளும் சிறுபான்மையின மக்கள்

சேரலாதன்

ஊவா மாகாண முதலமைச்சரால் மண்டியிட வைக்கப்பட்ட பாடசாலை அதிபருக்கு ஆதரவாக பல்வேறு திசைகளில் இருந்தும் கண்டனக்குரல்கள் எழுந்து வருகின்றன. அரச தலைவர் இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்டி வருவதாகவும்தெரியவருகின்றது. பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர் ஒரு தமிழ்ப்பெண் என்ற வகையில். மலையக மக்கள் ஒன்றுதிரண்டு அவருக்குநீதிகேட்டுகுரல்எழுப்பிவருகின்றனர். ஊவாமுதலமைச்சரது இந்த இழிசெயலைஎந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

சிறுபான்மையினர்எதையும்தாங்கிக்கொள்ளத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற திமிருடன் நடந்துகொண்ட அந்த அரசியல்வாதிகளுக்கு அதிகபட்சத்தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதே நடுநிலையாளர்களின் பெரு விருப்பமாகும். நல்லாட்சி அரசுஅரசியல்வாதிக்குஅப்பால்சென்றுநீதியை நிலைநாட்ட வேண்டும். பாதிக்கப்பட்டவரின்



மனவேதனைக்கு மருந்து வேண்டும். ஏற்கனவே இந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான்ை... யின மக்கள் பல்வேறு வகையிலும் பேரினவாதத் தரப்புக்களால் பாதிப்புக்களை எதிர்கொண்டு வரும்நிலையில்இந்தச்சம்பவம்நிகழ்ந்துள்ளது. உலகின் எந்தவொரு நாட்டை எடுத்துக்கொண்டாலும், அங்கு வாழ்கின்ற சிறுபான்மையின மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்வது வழக்கமாகி விட்டது. இதற்கு பல நாடுகளை உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

### இந்தியாவில் கூட இன முரண்பாடுகள் நிலவியே வருகின்றன

மிகப்பெரிய ஜனநாயக நாடு எனக் கூறப்படும் இந்தியாவில் இந்துமதத்தைக் கடைப்பிடிக்கின்ற மக்கள்அதிகஅளவில்உள்ளனர். முஸ்லிம்மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர்.

இந்த இரண்டு பிரிவு மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்ததாகச் சரித்திரமே கிடையாது. இந்தியா பிளவுபட்டு பாகிஸ்தான் என்ற நாடு உருவாகுவதற்கு இதுவே காரணமாயிற்று. இதைவிட சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்ற தலித் இன மக்கள் உயர்சாதியினர் என அழைக்கப்படுகின்றமக்களால்அடிக்கடிதுன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர். பொருளாதார ரீதியில் மிகவும்பின்தங்கியநிலையிலுள்ளஇந்தமக்கள் தமக்கெதிரானஅநீதிகளைதட்டிக்கேட்கமுடியாத நிலையில் காணப்படுகின்றனர். எமது நாட்டைப்பொறுத்தவரையில் சிறுபான்மை யினர் என்ற அந்தஸ்துடன் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் நாடு சுதந்திரம் அடைந்த பின்பும் தமது சுதந்திரத்தை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். மொழியால் வேறுபடுத்திக்காட்டப்படும் தமது உரிமைகளைப் பெறுவதற்காக ஆயுதம் ஏந்திக்கூடப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்தனர். தற்போதுகூட அவர்களதுபிரச்சினைகளுக்குத்தீர்வுகிடைக்கவில்லை. அவலங்களைச் சுமந்தவாறே அவர்கள் தமது வாழ்க்கையைஓட்டிக்கொண்டுஇருக்கின்றனர்.

### அமெரிக்காவில் கூட இனங்கள் மத்தியில் பூரண ஒற்றுமை நிலவவில்லை

உலகின் முதன்நிலை நாடான அமெரிக்காவில் ... இன்றும் சிறுபான்மையினரான கறுப்பின மக்கள் வெள்ளையர்களால் ஓரளவு புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். வெள்ளையர்களுக்குச்சமமான உரிமைகள் இவர்களுக்கு முழுதாக வழங்கப்படாத நிலையே இன்றும் காணப்படுகின்றது.

அண்மைக்காலமாக மியன்மாரில் வாழ்ந்து வரும்சிறுபான்மைரொகிங்யர்கள்தொடர்பான துயரமான செய்திகள் வெளிவந்துகொண்டிருந்தன. இந்த இனத்தைச்சேர்ந்த மக்கள் தற்போது மியன்மாரில் இருந்து இடம்பெயர்ந்து வேறு நாடுகளில் அகதிகள் என்ற பெயருடன் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம் நாடுகளில் வாழ்கின்ற வேறு மதப்பிரிவினர் முற்றாகவே புறக்கணிக்கப்படும் நிலையில்தான் காணப்படுகின்றனர். இவர்கள்தமது மதக்கடமைகளைக்கூட நிறைவு செய்யமுடியாத நிலையில் அல்லல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### முஸ்லிம் நாடுகளில் இஸ்லாமிய மதப் பிரிவுகள் மத்தியில் இணக்கமற்ற நிலை


முஸ்லிம் நாடுகளின் மக்கள் கூட ஷியா, சன்னி என இரண்டு பிளவுகளாகப் பிரிந்து நின்று தமக்குள்மோதிக்கொள்கின்றனர். இவர்கள்பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபடும்போது கூட எதிர்த் தரப்பினரால் கொல்லப்படுகின்ற அவலமும் நிகழ்கின்றது.

ரஷ்யாவில் கூட செக்கினிய மக்களின் துயர வரலாறு பதிவாகியுள்ளது. இவ்வாறு சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படுகின்ற வரலாறு நீண்டுகொண்டே செல்கின்றது. மனிதர்கள் அனைவருமே இறைவனால் படைக்கப்பட்டவர்கள். அவர்களின் உயிர்கள் பெறுமதி வாய்ந்தவை. ஆனால்மனிதர்களேசகமனிதர்களைவெறுத்து ஒதுக்கின்ற இழிநிலை தொடரத்தான் செய்கின்றது. இந்த உலகம் அமைதியை இழந்து தவிப்பதற்கு இதுவே முதன்மைக் காரணமாகும்.

இதேவேளை சகல இன மக்களையும் அரவணைத்துச்செல்கின்ற நாடுகளும் இல்லாமலில்லை. அந்த நாடுகளில் அமைதியும், சுபீட்சமும் செழித்தோங்கி வருவதைக் காணமுடிகின்றது. ஏனைய நாடுகளும் இவற்றை பின்பற்றி நடந்தால் என்ன?

இந்துமதி

# தமிழர்களின் இருப்புக்கு எதிரான குடியேற்றங்களும் நில ஆக்கிரமிப்பும்



திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால்தமிழர்தாயகநிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாணமுதலமைச்சர்சுட்டிக்காட்டியிருக்கிறார். அவரது கருத்து முழுக்க முழுக்க உண்மையானது. இதைத்தடுக்க முடியாத நிலையில் அவர் முதலமைச்சர் பதவியை வகிப்பதும் புரிகின்றது. நாட்டின் வடக்கும், கிழக்கும் தமிழர்களின் தாயக பூமி என்பது எப்போதோ ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இதற்கு ஏற்றாற் போன்று தமிழர்கள் பெருமளவில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருகின்றனர். நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னரான காலத்திலிருந்து தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகமாறிவருகின்றது. இலங்கையின் முதல் பிரதமரான டி. எஸ். சேனநாயக்காவினால் பிள்ளையார்சுழிபோடப்பட்டுக் கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட அரசின் ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்கள் இன்று கூடத் தொடரவே செய்கின்றன.



### இனங்களுக்கிடையில் வேறுபாடு காட்டப்படுவது தவறான செயற்பாடு

ஓர் இனத்தை வஞ்சகமாக ஏமாற்றுவதுமிகப்பெரியதுரோகமான செயலாகும். அதுவும் ஒரு நாட்டின் அரசின் ஆதரவுடன்இது இடம்பெறுவதைஎந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அகதிகளாகநீண்டதூரம்நடந்துவந்துஇஸ்ரேல்என்ற நாட்டை உருவாக்கி அதைத் தமது தாயகமாகக் கொண்ட யூதர்கள்தமதுகடந்தகாலசோக வரலாற்றை மறந்து நடந்து கொள்கின்றனர். பாலஸ்தீன மக்கள் யூதர்களால் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டு அவர்களின்நிலங்கள்தினமும்அபகரிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, பலஸ்தீன நிலங்களில்யூதக்குடியேற்றங்களும்வகைதொகையின்றி இடம்பெற்று வருகின்றன. யூதக்குடியிருப்புக்களால்பலஸ்தீனமக்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதைப் போன்றதொரு நிலைதான் இலங்கையிலும்காணப்படுகின்றது. கிழக்கு மாகாணம் தமிழர்களிடம் இருந்து ஒரு அளவுக்குப் பறித்தெடுக்கப்பட்டுவிட்டது. தமிழ்த் தாயகப்பூமியில் இன்று அவர்கள் சிறுபான்மையினர் என்ற குறியீட்டுடனேயே வாழ்கின்றனர். ஒரு மாகாண முதலமைச்சராகக்கூட ஒருதமிழர்வர முடியவில்லை. திருகோணமலை நகரின் நுழைவாசல்களில் திட்டமிடப்பட்ட வகையில்சிங்களகுடியேற்றங்கள்ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இன மோதல்கள் ஏற்படும்போது அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் நகருக்கு வெளியே வருவதிலும், உள்ளே செல்வதிலும் அச்சமானதொரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்திலும் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதாகத் தெரியவில்லை. மட்டக்களப்பின்எல்லைகளும்சிங்களக்குடியேற்றங்களால்அபகரிக்கப்பட்ட நிலையேகாணப்படுகின்றது. இந்தநிலைதொடர்ந்து இடம்பெறுமானால் கிழக்கு மாகாணம் தமிழர்களின் கரங்களிலிருந்து முற்று முழுதாக அபகரிக்கப்பட்டுவிடும்.

### வடமாகாணத்தின் எல்லை மாவட்டங்களிலும் நில ஆக்கிரமிப்பு

வடக்கு மாகாணத்தைப்பொறுத்தவரையில் எல்லை மாவட்டங்களான முல்லைத்தீவு, வவுனியா ஆகியவை குறி வைக்கப்பட்டுநிலஆக்கிரமிப்புஇடம்பெற்றுவருகின்றது. இதனால் வடக்கில் வாழ்கின்றதமிழர்களும் பேராபத்தொன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளனர்.

திட்டமிட்ட குடியேற்றங்களால் இனப்பரம்பல்களில்மாற்றங்கள்ஏற்பட்டுஇனரீதியான பாதிப்பும் ஏற்பட்டு விடும். தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திலும் வீழ்ச்சி ஏற்படுவதுசாத்தியமானதொன்றுஎன்றேகருதமுடியும்.குறிப்பாகநாடாளுமன்றம்,மாகாண சபை, உள்ளூராட்சிச்சபைகள் ஆகியவற்றில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் வீழ்ச்சி கண்டுவிடும். வடக்கு கிழக்கில் தமிழ்மக்களேபெரும்பான்மையினராகவாழ்ந்தார்கள். மாகாணசபையின்அதிகாரமும்அவர்களிடமே இருந்தது. ஆனால் இணைந்திருந்தமாகாணநிர்வாகம்பிரிக்கப்பட்டதால் எல்லாமேதலைகீழாக மாறிவிட்டன.

ஓர் இனம் நிலைத்து வாழ்வதற்கு அவர்களுக்கு சொந்தமான நிலம் அவசியமாகும். நிலம் இருந்தால்தான் எதையும் கட்டியெழுப்ப இயலும். நிலம்தான் ஓர் இனத்தின் இருப்பை உறுதி செய்கின்றது. இதை நன்குணர்ந்த காரணத்தினால்தான் இனவாதிகள் நிலப்பறிப்பில் ஈடுபடுகின்றனர். இதன் மூலமாக தமிழ் இனத்தை அடிமைப்படுத்தப் பேரினவாதத் தரப்புக்கள் முனைகின்றன. படைபலமும், அதிகாரமும் பெரும்பான்மையினர்கையில்இருப்பதால், மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் இதே வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றன. மூன்று தசாப்த காலமாக இடம்பெற்றபோர்இதற்கொருசிறந்த வாய்ப்பை வழங்கிவிட்டது. பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளில்படையினர்நிலைகொண்டுள்ளனர். இவர்கள்நிரந்தரமாகவேஇங்கு தங்கிவிடுவார்கள் என்ற அச்சம் நிலங்களைஇழந்தமக்களிடம்நிறையவே காணப்படுகின்றது.

### தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு வழங்கப்படல் அவசியம்

அரசு இதற்கொரு தீர்வு வழங்காது காலம்கடத்தவதைஇனியும்பொறுக்க முடியாது. போர் ஓய்ந்து பல ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும், படையினர் மக்களின் காணிகளை அடாத்தாக பிடித்துவைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு புறம் குடியேற்றங்கள், மறுபுறம் படையினரின் காணி ஆக்கிரமிப்பு என இருபுறமும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்கள் செய்வதறியாத நிலையில் தவித்து வருகின்றனர்.

இந்த நாட்டில் அமைதியும் சுபீட்சமும் நிலவ வேண்டுமானால், இனங்களுக்கிடையில் பாராபட்சம் இருக்கலாகாது. ஓர் இனத்தின் அடையாளங்களை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளும் இடம்பெறுவதால், குறிப்பாக நில ஆக்கிரமிப்பும், மொழி மீதானஒதுக்கல்களும்அறவேஒழிக்கப்பட வேண்டும். இந்த நாட்டில் வாழ்கின்ற அனைவரும்இலங்கைத்தாயின்பிள்ளைகள் என்பதை என்றென்றும் நினைவில் இருத்திக்கொள்ளவேண்டும். ஒரு தாய் தனது பிள்ளைகளுக்கிடையில் வேறுபாடு காட்டமாட்டார். அதைப்போன்று தான் இலங்கைத்தாயின் பிள்ளைகளான சகல இனத்தவர்கள் மீதும் வேறுபாடு காண்பிக்கப்படக்கூடாது.

ஆகவே திட்டமிட்ட குடியேற்றங்களையும் படையினரின்நிலஆக்கிரமிப்புக்களையும் உடனடியாகநிறுத்திதமிழ்மக்களின்அச்சத்தைப்போக்கவேண்டும். அரசு அவர்களை அரவணைத்துச்செல்ல வேண்டும். அப்போது தான் உண்மையான அமைதி இந்த நாட்டில் மலரும்.

ஆசிரியருக்கான கடிதம்

## மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை மீண்டும் உயிர்பெறுமா?

பிரித்தானியாவின் ஜோர்ஜ்மன்னரால் இலங்கையர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட காசநோயைக் குணமாக்கும் வைத்தியசாலையே மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையாகும். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வடபகுதியில் ஏராளமானவர்கள் இருந்ததன் விளைவாக மயிலிட்டியில் இது கட்டப்பட்டது. 1990ஆம் ஆண்டு வரை சிறப்பாக இயங்கி வந்த நிலையில், தற்போது மீண்டும் இதனது அவசியம் உணரப்படுகிறது.

வடமாகாணத்தில்வருடந்தோறும்ஆயிரம்காசநோயாளிகள்இனங்காணப்படுகின்றனர். யாழ். மாவட்டத்தில் மட்டும் 75 ஆயிரம் ஆஸ்த்மா நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். இதைவிட வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய 5மாவட்டங்களிலும் மூன்று லட்சம் நோயாளிகள் சுவாசம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய நிலையில் தொடர்பான் கோளாறுகளால் வடபகுதி மக்கள் முக்கியமாக போர்ப் பாதிப்புக்கள் காரணமாக அண்மைக்காலமாக சுவாசக் கோளாறுகளினால் பெருமளவில் பீடிக்கப்பட்ட நிலையில் மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையைச் சகல வசதிகளோடு மீண்டும் இயங்க வைக்க உரியவர்களான மதிப்புமிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மாவட்ட செயலக அதிகாரிகள், சமூகப் பிரபல்யங்கள், ஆர்வலர்கள், புத்திஜீவிகள், சகல மதப் பிரமுகர்கள் உள்ளிட்டோர் ஆவனபுரியும் வண்ணம் இந்த மண் முக்கியமான இந்த விண்ணப்பத்தை முன்மொழிகிறது. உயிர்பெறுமா?

வடபகுதி கடல் சுவாத்தியமும் விசாலமான இடவசதியும் மயிலிட்டியில் காணப்படுவதால் எமதுமக்களின்ஆரோக்கியத்துக்காக இந்தக்கைங்கரியங்கத்தைச்செய்ய எவரும்முனையாது இருப்பார்களாயின், புண்ணியம் எப்படிப் பூக்கப் போகிறது? தேர்தல்கள் இங்கு வந்துதான் என்ன பிரயோசனம்? தெய்வங்களுக்குக் கோயில் கட்டித்தான் என்ன பிரயோசனம்?

இந்த நிலையில் கடந்த 30 ஆண்டுகளாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துள் சிக்கியிருந்த மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, மிக விரைவில் இராணுவத்தினரால் பொதுமக்களது பாவனைக்கு விடுவிக்கப்படவுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை மனதுக்கு ஆறுதல் தருமொரு செய்தியாகக் கொள்ளத்தக்கது.

கே.எஸ்.சிவஞானராஜா



# தை மாத ராசி பலன்

## விருச்சிகம்

முன்கோபத்தைக் குறைத்துச் செயல்படுவதன் மூலம் அதிர்ஷ்ட பாதையில் முன்னேற்றங்கள் பல காணும் விருச்சிக ராசிக்காரர்களே இந்த மாதம் வாழ்க்கைத் தரம் உயர எடுக்கும் முயற்சிகள் கை கூடும். நெருக்கமானவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள். ராசியாதிபதி செவ்வாய் சஞ்சாரத்தால் முன்பின் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவீர்கள். இதனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. வழக்கத்தை விட செலவு கூடும்.

தொழில், வியாபாரம் தொடர்பான பேச்சின்போது மிகவும் நிதானமாக பேசுவது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் தாமதப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு வகையில் அலைச்சல், கூடுதல் செலவைச் சந்திப்பார்கள். வேறு ஒருவர் செய்த செயலுக்கு வீண் பழி ஏற்க வேண்டி இருக்கும். எனவே கவனம் தேவை.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே வீண் மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வதன் மூலம் நன்மை உண்டாகும். உறவினர்களிடம் பேசும் போதும் அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போதும் நிதானமாக இருப்பது நல்லது. உங்களது பொருள்களை பத்திரமாக வைத்துக் கொள்வது நல்லது.

**பெண்களுக்கு:** முன்பின் யோசிக்காமல் பேசுவதை தவிர்ப்பது நல்லது. செலவு கூடும். முயற்சிகளில் சாதகமான பயன் கிடைக்கும்.

**அரசியல்வாதிகளுக்கு:** நன்மை தரும் காலமிது. குடும்பத்துடன் பொழுதைக் கழிப்பீர்கள். ஆன்மிகப் பயணங்கள் மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் நீண்ட நாள்களாக நடக்காமல் இருந்த காரியங்கள் நடந்து முடியும்.

**கலைத்துறையினருக்கு:** வேலைகள் கிடைப்பதுபோல் இருந்து பின் நழுவிச் செல்லும் சூழல் உருவாகும். கவலை வேண்டாம். உங்கள் அயராத முயற்சியால் வெற்றி காண்பீர்கள்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் வெற்றி பெறக் கூடுதல் கவனம் செலுத்திப் படிப்பது நல்லது. வீண் அலைச்சல் உண்டாகும். சகமாணவர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது.

## நாளை

**26.01.2018**

வெள்ளிக்கிழமை

**தை - 13**

திதி: நவமி மு.ப. 11.03
நட்சத்திரம்: பரணி பி.இ. 03.43 வரை
சுபநேரம்: 08.06–09.36 வரை
ராகுகாலம்: 02.06–03.36 வரை




**1980**

இந்தியாவின் உயர் விருதான பாரதரத்னாவிருது, அன்னைதிரேசாவுக்குக் கொடுக்கப்பட்டது.

## வரலாற்றில் இன்றைய தினம் 25.01.2018

1494 இரண்டாம் அல்போன்ஸ் நேபாள அரசரானார்.

1755 - மொஸ்கோ பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது.

1890 - 72 நாள்களில் உலகைச் சுற்றிமுடித்தார் நெல்லிபிளி.

1918 - ரஷ்யாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது உக்ரைன்.

1942 - அமெரிக்கா, ஐக்கிய இராச்சியத்துக்கு எதிராக தாய்லாந்து போர் அறிவிப்புச் செய்தது.

1955 - ஜேர்மனியுடனான போரை முடிவுக்குக் கொண்டுவந்தது சோவியத் யூனியன்.

1971 - உகண்டாவின் அதிபரானார் இடி அமீன்.

## பத்தி எழுத்து

# பாத்திரமறிந்து பிச்சையிடுங்கள்

இந்தியாவில் வயது முதிர்ந்த யாசகர் ஒருவர், ஏலம் விடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான காணித்துண்டை வாங்கிய பரபரப்பான சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலும் நாளாந்த, மாதாந்த சீட்டுப்பிடிப்போரும் யாசகர்களாக இருப்பது பெரிய புதினமல்ல.

முதலில் நாம் யாசகர்களை இனங்கண்டபிறகு அது உண்மையாயின் ஐநூறல்ல ஆயிரமும் கொடுங்கள். அதனை எவரும் தடுக்க முடியாது. பாத்திரமறிந்து பிச்சை கொடு என்று ஆராயாமலா சொல்லியுள்ளார்கள். யாழ்ப்பாணம் பேருந்துத் தரிப்பிடத்தில் ஒரு யாசகர். வயது அறுபத்தைந்துக்கும் மேலே இருக்கும். பார்த்தால் அவர் ஒரு மெல்லிய வாடல். உடுப்புகளும் அப்பிடி இப்பிடி. அந்த நபருக்கு ஒவ்வொருவரும் மனமிரங்கித் தாள்களைச் சொரிந்தனர். போதுமான அளவு பணம் அவருக்குக் கிடைத்தது.

இன்றுமொருநாள் அதே யாசகர், அதே உருவம், கையிலே தாள் காசுகளுடன் பேருந்தை நடுவீதியில் மறித்தவராய், அங்கீகரிக்கப்பட்ட குடிபானக் கடைக்குள் நுழைந்த காட்சி வண்டிலிருந்த அனைவரையுமே பிரமிக்க வைத்துவிட்டது. அடேயப்பா. இந்தச் சாராயப் பிரியருக்கு நாமெல்லாருமே பாத்திரமறியாது யாசகம் செய்துவிட்டோமே. வண்டியை நிறுத்துமளவுக்கு யாசகர் இன்னும் பல திருகுதாளங்கள் செய்யக்கூடும்.

இறைவனைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்கும், தொண்டு செய்பவர்களுக்கும், வறுமைக் கோட்டை எட்டியுள்ளவர்களுக்கும், எதற்குமே வழியில்லாதவர்களும் நோயாளிகளுக்கும், அடிமை வேலை செய்பவர்களுக்கும் அன்னதானம் வழங்குவது பெரும் புண்ணியமாகும். மேலும் யாத்திரை செய்து கொள்வோருக்கும் நேர்த்தி கொண்ட அடியார்களுக்கும் தூரப் பயணித்துவரும் உண்மையான தொண்டர்களுக்கும் அன்னதானம் செய்து இறைவனை மகிழ்விப்பது பெரும்பேறாகும்.

இதைத்தவிர அரசியல் பேசுவோருக்கும் மது, மாது போதையில் துள்ளிக் குதிப்போருக்கும், பொழுதுபோக்காக உல்லாசத்தைக் கொள்முதல் செய்வோருக்கும் நாம் எந்தத் தானம் செய்தாலும் அது தர்மமாகாது. அன்னம் என்பது கொட்டிச் சிந்துவது அல்ல. கையெடுத்துக் கும்பிட வைப்பது. எனவே பாத்திரமறிந்து பெறுமதிக்கு வரங்கொடுங்கள். யாசகர்களை அவதானித்துக் கொள்ளுங்கள். அவர்களிடையே எச்சரிக்கையாக இருங்கள். யாசகர்கள் எனின் அள்ளிக் கொடுங்கள், இல்லையேல் அறிவுரை கொடுங்கள். இந்தமண் பேறாகட்டும்.

கருடன்

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### தர்மகுலசிங்கம் பானுஷா

திதி: வளர்பிறை அட்டமி

அன்னை மடியில்
17.07.1991

இறைவன் அழைப்பில்
19.01.2013

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம் - நேரம்
தவறாமல் உன் நினைவு
எம்மை வாட்டுதம்மா
அறிவின் சிகரமாய்
அன்பின் இருப்பிடமாய் இருந்த எம் செல்வமே
நீங்காத துயரிலே எம்மை இருத்தி விட்டு எங்கேயம்மா சென்றாய் ?
எத்தனையோ கற்பனைகள் - உன் மனதில்
எல்லாம் கானல் நீராகி விட்டதம்மா
எந்நாளும் உன் நினைவுகளுடன் நாம்.....
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உன் நினைவில் வாழும்
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர். (CS 13236) (14,17) குடும்பத்தினர்.

---

## சாவகச்சேரி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ -து)
டச்சு வீதி, சாவகச்சேரி

பதிவு இல : J/1594 பதிவுத்திகதி : 11.03.1972

### கட்டட ஒப்பந்தகாரர் கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் ஆளுமையின் கீழ் இயங்கும் கைதடி நுணாவில் 191 கிளை நிலையத்தின் கீழ்வரும் வேலைகளை மேற்கொள்வதற்கான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.

**01. நவீன கிளைக் கட்டடம் அமைத்தல்**
**02. மலசலகூடம் அமைத்தல்**

மேற்காண் வேலைகளை செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பங்களைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 10.02.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைவர்**
**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்**
**சாவகச்சேரி.** (IN 5660) (14,17)

**தொடர்பு**
**021 227 0086**

---

## Tailor தேவை

ஆண்களுக்குரிய ஆடைகளைத் தைப்பவர்கள் தேவைப்படுகின்றார்கள். (Juki Mechine) துணிகள் Cut பண்ணித் தரப்படும். பீசுக்கு சம்பளம் வழங்கப்படும். ஆண்கள் / பெண்கள் இருபாலாரும்.வயது எல்லை இல்லை.
24A, Power house Road, Modern Market Jaffna.
T.P - 077 734 1102,
Viber - 077 529 5772,
Whatsapp - 077 529 5772 (CS/13237) (11,17)

---

## காணி விற்பனைக்கு

றக்கா வீதி, றக்கா Lane சந்திக்கு அருகில் (தெற்குப் பக்கத்தில்) 1 ¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (விலை குறைக்கப்பட்டுள்ளது.)
**076 872 8556 (Kanthan)**

---

## பெயர் மாற்றம்

நல்லாயன் வீதி, இளவாலையைச் சேர்ந்த **பிலிப்பு ஆசீர்வாதம் தேவசகாயம்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **பிலிப்பு ஆசீர்வாதம் தேவதாஸ்** என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(CS/18245)(12 17) ஆ.தேவதாஸ்

---

## மரண அறிவித்தல்



### திருமதி மனோன்மணி இராசையா

சங்குவேலி - தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி இராசையா 23.01.2018 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகு - சின்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், மனோகறாஜ் (லண்டன்), ஜயந்தகுமார் (பிரான்ஸ்), ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேந்திரராசா, மனோகரதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகபாரதியின் (லண்டன்) அன்பு மாமியாரும், மகிஷா, றாகேஷ் (லண்டன்), வர்ணஜா, அபிகேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2018) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பமாகி தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"மணிமகுடம்",**
**சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்**
**மகேந்திரராசா**

**077 926 4199, 077 715 1101** (CS/13228) (11,17)

---

## மரண அறிவித்தல்

ஆண்டவன் மடியில்
04 . 09 . 1949



ஆண்டவனின் பாதத்தில்
24 . 01 . 2018

### திருமதி ஜெயரஞ்சிதமலர் தர்மபாலன் (றஞ்சி)

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை தற்காலிக வதிவிடமாகவும் ஜேர்மனியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயரஞ்சிதமலர் தர்மபாலன் (றஞ்சி) நேற்று (24.01.2018) புதன்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயசிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை (உரும்பிராய்) தம்பதிகளின் அன்பு மருமகளும், தர்மபாலனின் அன்பு மனைவியும், கௌதமன் (கண்ணன்), கௌதமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், Romona வின் பாசமிகு மாமியாரும், கமலநாதன் பாமினி (நியூசிலாந்து), காலஞ்சென்ற மோகன் சூரியகுமார், விமலன் ராஜ்குமார் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களம்), காலஞ்சென்ற நகுலன் ஜெயக்குமார் மற்றும் மாலா (பிரான்ஸ்), அனுரா நந்தகுமார் பவா (கனடா), சுதன் சாந்தகுமார் ஜொய்சி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும், மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**மகாஜன பாம்,**
**கூமாங்குளம், வவுனியா**

தகவல்: **விமலன் ராஜ்குமார்,**
**R.மகேஸ்வரி (வனஜா)**

**077 023 6893** (AVA/252)(11,17)

---

## ES Printers



அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்

021 492 7471,
021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி கோகிலாம்பாள் மகாலிங்கம்



தோற்றம் 21.06.1936 மறைவு 14.01.2018

யாழ். வண்ணார்பண்ணை ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், லண்டன் Harrow, Milton keynes ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோகிலாம்பாள் மகாலிங்கம் 14.01.2018 ஞாயிற்றுக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம்(அனலைதீவு) -கண்ணம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராமசாமி - வள்ளிப்பிள்ளை(அனலைதீவு) தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், சசிகலா (லண்டன்), ஜெயவதனி(கொழும்பு), கலாரஞ்சினி (கனடா), சுரேந்திரன்(சுவிஸ்), சுரேஸ்குமார் (லண்டன்), பிரேமாவதி(கவிதா - லண்டன்), நந்தன்(பெறாமகன் லண்டன்), காலஞ்சென்றவர்களான இதயச்சந்திரன், லோகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மகாலிங்கம் இராஜேஸ்வரி மற்றும் பவானி(கனடா), சோதிலிங்கம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான காந்தரூபன், கனகலிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தா, கெஜவதனி(சுவிஸ்), சுபாசினி(லண்டன்), கமலதாஸ்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருபாகரன்(கனடா), கிருஷாந்தினி(கனடா), பவன், கரன், எழில்(வவுனியா) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ஜெனா(ஜேர்மனி) அவர்களின் அன்பு அத்தையும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் தில்லையம்பலம்(கனடா), கமலினி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காந்தரூபன், ரேவதி(கொழும்பு), உதயரூபன்(லண்டன்), சத்தியதீபன் சயந்தினி(கனடா), பிரேம்குமார் கௌசல்யா(லண்டன்), நிருத்திகா(லண்டன்), நிஷா, கீர்த்திகா, நேஹா(லண்டன்), ஜெனன், ஜெய்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை இல. 77, ஜினா வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 02.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**77, ஜினாவீதி, ஓட்டுமடம்,**
**யாழ்ப்பாணம்.** (CS 13230) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 819 4091 (வதனி) / 077 190 9163 (ரூபன்)**

---

## மூன்றாம் ஆண்டு நீங்கா நினைவில்

### லோகநாதன் கஜந்திரன் (கஜன்)



அன்னை மடியில்
15.09.1987

இறைவன் அடியில்
18.01.2015

நிஜமாக நீ மறைந்து மூன்றாண்டுகள் ஆனதுவோ?
நீ இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ?
சிரித்த முகமும் கனிவான பேச்சும்
காதுகளில் ரீங்காரம் ஒலிக்கின்றது
பிரிந்து விட்டாயோ எமைவிட்டு – ஆனால்
பிரியாது உன் நினைவுகள் பழகிய இடமெல்லாம் பார்க்கையில்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

N.லோகநாதன்
49, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (CS/13234)(11,17)

குடும்பத்தினர்.

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
டச்சு வீதி, சாவகச்சேரி

### மரவிற்பனைக்கான கேள்விப் பத்திரம் கோரல்

பதிவு இல: J/1594 பதிவுத்திகதி: 11.03.1972

எமது சங்கத்தின் தலைமைக்காரியால வளாகத்தில் உள்ள கீழ்வரும் விபரப்படியான மரங்களை விற்பனை செய்ய தீர்மானித்திருப்பதால் அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் காரியாலயக் கடமை நேரத்தில் மரங்களை பார்வையிட்டு தங்களின் கேள்விப் பத்திரங்களை 10.02.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கூடியதாக தலைவர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**1. தேக்கமரம்- 02, 2. வேப்பமரம் -01**

**தலைவர்**
**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம், சாவகச்சேரி.**

தொடர்பு
021 227 0086

(In/5641)(16.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகலிங்கம் புஸ்பவதி**

அன்போடு அரவணைத்து ஆசையாய்
அறிவுரைகள் கூறி எமையெல்லாம்
ஏற்றமுடன் வாழவைத்த அம்மாவே!
என்றாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் என்றும் வாழ்வீர்கள்!

பிறப்பு 1947.10.10 இறப்பு 2017.02.05

**பிள்ளைகள்.**
ஞானவைரவர்
கோயில் வீதி,
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

(CS/13231)(12-17)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 28 . 06 . 1998 மறைவு 17 . 01 . 2016

### செல்வி ஜெயராமசர்மா ஸ்ரீரம்மியா
(யா/ வேம்படி மகளிர் கல்லூரி)

பதினேழு வருடங்கள் வாழ்ந்து விட்டு பாதியிலே போனதேனோ !!
பட்டங்கள் பல பெறுவாய் என நினைத்தோம்
பொய்யாக்கி சென்றதேனோ ! கண்ணீரில் வாழ்கின்றோம்
கண்களால் பார்த்ததெல்லாம் மனதை விட்டுப் போகுதில்லை
தவமிருந்து பெற்ற மகளே ! தவிக்க விட்டு சென்றதேனோ !
பெத்த வயிறு தவிக்கிறது வளர்த்த உயிர் ஊமையாகிப் போனது
உடன் பிறந்தவன் தனித்து நிற்கின்றான்
ஏன் போனாய் கண்ணம்மா சாமிகிட்ட


சோ. ஜெயராமசர்மா
சுதுமலை அம்மன் கோயிலடி,
மானிப்பாய்.

என்றும் உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
077 296 7271

(CS 13229) (14.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை தங்கராசா

மாமுனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கராசா 23.01.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (பூசாரியார்)- சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயலோகநாதன்(நோர்வே), ஜெயவள்ளிக்கொடி(சுசி இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், இராசரத்தினம் மற்றும் தங்கம்மா, இராசலிங்கம், தங்கராணி, இராசகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அம்பிகா(நோர்வே), இராசகோபால்(நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகலிகா(நோர்வே), சிந்துஜா (நோர்வே), கீர்த்தனா(இந்தியா), கார்த்திகா(இந்தியா), டிலான்(இந்தியா), யூலன் (நோர்வே), செல்வன்(நோர்வே), அஜித்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை, புவனேஸ்வரி, சின்னப்பு, லீலாவதி, சந்திரவதி, அருளானந்தசாமி, ஐயாமுத்து, ஐயாத்துரை, கண்ணப்பு, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாமுனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாமுனை.** (CS 0013227) (14,17) **தகவல்: குடும்பத்தினர்.**

## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF GRADUATE STUDIES
### Postgraduate Programme - 2017/18

The Faculty of Graduate Studies, University of Jaffna calls applications from eligible candidates for the following Postgraduate Programme.

**Master of Science in Environmental Management – 2017/18 (Batch II)**

**Admission Requirements:**

a) Graduates from Science, Agriculture, and Social Sciences based disciplines from recognized universities.

OR

b) Any other graduates with related to the environmental science back ground may be considered.

Course Fee : Rs.200,000/-
Medium : English
Duration : One year
Selection : Exam & interview

**Application Form: 1000/-**
**Closing date for Application: 23 February, 2018.**

**Applications Procedure:**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. : 021 222 3608) either in person or post, on a payment of Rs. 1000/- per application form on production of receipt in support of the payment to the University Account number 162-1-001-8-0000902 at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order for Rs. 1000/- per application form drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 22.5 x 10 c.m. (9" x 4") in size.

Application forms and other details will also be available in the Faculty web site www.grad.jfn.ac.lk. Those who wish to send the downloaded application form should attach a money order for Rs. 1000/- drawn in favor of the Bursar, University of Jaffna or the receipt in support of the payment to the University Account number 162-1-001-8-0000902 at the People's Bank.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely by registered post or by hand on or before the closing date of application. This programme applied for should be indicated as "Application form M.Sc in Environmental Management – 2017" on the top left hand corner of the envelop.

Incomplete, Illegible or late applications will not be considered.

Note: - The Candidates those who applied for this course earlier and sat the selection examination on 11.11.2017 need not apply again.

Registrar
18.01.2018.

(13.17)



# கவுதம் கார்த்திக் படத்தில் நடனம் ஆடினார் ஆர்யா

கவுதம் கார்த்திக், வைபவி நடித்து வரும் படம் 'இருட்டு அறையில் முரட்டுக்குத்து'. இந்தப் படத்தை சந்தோஷ் பி.ஜெயக்குமார் இயக்கி வருகிறார்.

'இருட்டு அறையில் முரட்டுக்குத்து' படத்தில் கவுதம் கார்த்திக்குடன் நடிகர்ஆர்யாவும்நடனம்ஆடியுள்ளார். இதுகுறித்துஆர்யாகூறுகையில், "ஒரு நாள், இயக்குநர் ஜெயக்குமார் திடீர் என்று என்னை 'இருட்டு அறையில் முரட்டுக்குத்து' படப்பிடிப்பு தளத்துக்கு அழைத்துச்சென்றார். முன் அறிவிப்பு இல்லாமல் கவுதம் கார்த்திக்குடன் என்னையும் நடனம் ஆட வைத்து விட்டார்.

'இருட்டு அறையில் முரட்டுக்குத்து' படத்தில் நான் ஒரு பாடலுக்கு நடனம் ஆடுவேன் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. என்னைப்போலவே இயக்குனருக்கும் அந்த எண்ணம் இல்லை. திடீர் என்றுஎடுத்தமுடிவுதான். கவுதம்கார்த்திக்குடன்இணைந்துநடனம் ஆடியது ஒரு புதிய அனுபவமாக அமைந்தது" என்றார்.

## பரிசாக்கிடுவோம்

அன்னைக்கு அன்பைப் பரிசாக்கு
அயலவருக்கு அரவணைப்பைப் பரிசாக்கு

தோற்றவனுக்கு துணிவைப் பரிசாக்கு
துவள்பவனுக்கு தோளைப் பரிசாக்கு

ஏழைக்குத் தருமத்தைப் பரிசாக்கு
ஏழ்மைக்கு முயற்சியைப் பரிசாக்கு

எதிரிக்கு மன்னிப்பைப் பரிசாக்கு
துரோகிக்கு தூர விலகுவதைப் பரிசாக்கு

பொறுமைக்கு பெருமைகளைப் பரிசாக்கு
பொறாமைகளுக்கு புத்திமதியைப் பரிசாக்கு

நண்பனுக்கு நல்லிதயத்தைப் பரிசாக்கு
உனை நேசிக்கும் இதயத்துக்கு உன்னையே பரிசாக்கு

குழந்தைகளுக்கு
தோற்றால்
வெட்கப்படுவதையோ
வருத்தப்படுவதையோ
கற்றுக்
கொடுக்காதீர்கள்!

தொடர்ந்து முன்னேற
கற்றுக் கொடுங்கள்

## கீச்சுகள்

twitter.com/
SaranyaTwtzz

குடும்பத்துக்காக
தனது ஆசைகளை
விட்டுக் கொடுத்து
வாழும் ஆணோ
பெண்ணோ
பெற்றோருக்குக் கிடைத்த
வரங்கள்...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாமன் மைத்துனர் வகையில் கேட்ட உதவி கிடைக்கும்.

**இடபம்:** பிடிவாத குணத்தால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படலாம். தொழிலில் வருமானம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் திடீர் செலவு உண்டாகும்.

**மிதுனம்:** அடுத்தவர் வியக்கும் வகையில் பணியாற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** பணிகளில் மேம்போக்காக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகமும் ஆசியும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை முன்னேற்றம் பெறும்.

**கன்னி:** மனதில் எண்ணிய எண்ணம் செயல்வடிவம் பெறும். நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** குடும்ப விஷயத்தைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**விருச்சிகம்:** நண்பரின் செயலை விமர்சனம் செய்ய வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். பெண்களால் குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும்.

**தனுசு:** கடந்த கால அனுபவம் வளர்ச்சிக்கு துணைநிற்கும். புதிய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துவீர்கள். தொழிலில் வியத்தகு அளவில் அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் மேம்படும். பணக்கடனில் ஒரு பகுதி அடைபடும்.

**கும்பம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். பணியில் மட்டும் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**மீனம்:** பசெயலில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

அண்ணே எலிக்கு எதுக்கு வால் இருக்கு தெரியுமா?
எதுக்குடா இருக்குது



செத்துப் போச்சென்டா தூக்கிப் போட...

தம்பி நீ கொடுத்த நோட்டு கிழிஞ்சிருக்கு வேற கொடு



இந்தா நீ கொடுத்த டிக்கட்டும் கிழிஞ்சிருக்கு நீயும் வேற கொடு

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | | 7 | | | 8 | |
| 7 | 9 | 4 | | | | | | |
| 5 | 8 | 6 | | | 4 | 1 | | 7 |
| 1 | | 2 | | 6 | | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | | 7 | |
| 3 | | | | | 8 | 7 | | |
| | | | 5 | | | 8 | | 3 |
| 9 | | 8 | 4 | | | 2 | | 6 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 7 | 5 | 8 | 6 | 3 | 1 | 2 |
| 3 | 8 | 2 | 1 | 7 | 4 | 9 | 6 | 5 |
| 1 | 6 | 5 | 2 | 9 | 3 | 8 | 7 | 4 |
| 7 | 5 | 6 | 4 | 3 | 9 | 2 | 8 | 1 |
| 2 | 3 | 1 | 6 | 5 | 8 | 4 | 9 | 7 |
| 4 | 9 | 8 | 7 | 2 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 1 | 4 | 9 | 6 | 2 | 7 | 5 | 3 |
| 6 | 7 | 3 | 8 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 3 | 1 | 7 | 6 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



## சிரி

**தோழி 1 :** அவ்வளவு பெரிய கட்டுப் போட வேண்டிய அளவுக்கு உன் புருஷன் காதில எப்படி அடிபட்டது?

**தோழி 2 :** நீதானடி சொன்னாய்... தோசைக்கல் வாங்கினதை மறைக்காதே, உன் புருஷன் காதில போட்டிடுன்னு.

# நினைவலைகள்



**திரு. தம்பையா திருநீலகண்டன்**
தோற்றம்: 31.07.1928
மறைவு: 05.02.2017

**திருமதி திருநீலகண்டன் பராசக்தி**
தோற்றம்: 12.02.1934
மறைவு: 07.04.2016

ஐயிரு திங்களாக அடியுதைபட்டு மேனி
கையிலே கண்டு எம்மைக் கண்களாய்க் காத்து உன்னை
உம்மிலே ஊறும் இரத்த ஊட்டமாம் பால்சொரிந்து
மன்னவர், ராணியாக்கி மகிழ்வுற நின்ற தாயே...!
உம்முடனாகி நின்று உயிரதாய்க் கருணை, அன்பு
இன்னதென்று எமக்குக் காட்டி இவ்வுல குயர்வுகாட்டி
தன்னொடும், தனியராவும் தளைத்திட வழிகள் சொன்ன
தெய்வமே...! ஐயா...! நீவீர் தெய்வமாய் இருவர்கூடி...
எம்மிடை விட்டு ஏசி ஏங்கநாம் ஓராண்டின்று
மண்ணுற வந்ததம்மா..... மனம் மிக வாட்டுதையா....
இன்னுமோ பலவாம் ஆண்டு இருந்திருந்து ஏகினாலும்
உங்களின் நினைவு எங்கள் உயிரொடு உறைந்து நின்று
நல்லரும் வழியைக் காட்டும், நயந்து நாம் உங்கள் பாதை
செல்லுவோம், பெருமை செய்வோம், சேர்ந்திறை மாதம் வாழ்வீர்...
ஓம் சாந்தி...! சாந்தி...!! சாந்தி...!!!

தகவல்: குடும்பத்தினர்






## யாழ். பன்னாட்டு வர்த்தக கண்காட்சி

ஒன்பதாவது ஆண்டாக இடம்பெறவுள்ள யாழ்ப்பாணம் பன்னாட்டு வர்த்தக கண்காட்சி நிகழ்வுகள் யாழ். மாநகர சபை மைதானத்தில் நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் 28ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

வடக்கிற்கான நுழைவாயில் என பெயர் பெற்றுள்ள இந்தக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுகள் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. கண்காட்சி நிகழ்வுக்கான முன்னாயத்த வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (ஒ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி அரியநாயகம் சேதுப்பிள்ளை**

மலர்வு 17.03.1939 உதிர்வு 27.12.2017

தகவல்:- குடும்பத்தினர்.

அன்புடையீர்!

கடந்த 27.12.2017 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் திருமதி அரியநாயகம் சேதுப்பிள்ளை**

**உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்**

அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.01.2018) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று - கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திடீரென எமது தாயார் இயற்கையெய்திய செய்தி அறிந்து எமது துயரத்தினை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயைகூர்ந்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

"துரைபொன் வாசம்"
சந்நிதி வீதி,
உடுப்பிட்டி.

## போலியான...

சிங்கப்பூர் தலைமை அமைச்சர் லீ ஹிசேயின் லூங் கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள சிங்கப்பூர் தலைமை அமைச்சர் லீ ஹிசேயின் லூங் தலைமையிலான குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் நடை பெற்றது. சந்திப்புத் தொடர்பில் எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதிய அரசமைப்பு நடைமுறைகளை வெற்றிகரமான ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படும் பிழையான, தேவையற்ற அச்சங்களை நீக்குமுகமாக அரச தலைவரும், தலைமை அமைச்சரும் சிங்கள மக்கள் மத்தியில் புதிய அரசமைப்புத் தொடர்பில் தெளிவூட்டல்களை மேற்கொள்ளவேண்டும். தற்போது மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதாக அமையவில்லை. அதியுச் சமான அதிகாரப் பகிர்வையே நாம் கோருகின்றோம். வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஒருமித்த, பிரிக்க முடியாத, பிரிவுபடாத நாட்டுக்குள் தீர்வொன்றை விரும்புகிறார்கள். மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் தங்களது அதிகாரங்களைப் பாவிக்கக்கூடிய ஓர் உண்மையான அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டையே வேண்டி நிற்கிறோம். இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருக்க முடியாது. இந்த ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும்.

வடக்குக் கிழக்கில் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள், முதலீடுகள் மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். வடக்குக்கிழக்கில் உள்ள இளைஞர்கள் அர்ப்பணிப்புள்ள, கடின உழைப்பாளிகள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக போரினால் அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களும் திறன் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் கிடைக்கவில்லை. சிங்கப்பூர் அரசும் மக்களும் எமது இளைஞர்களின் திறன்களையும் அறிவையும் விருத்தி செய்வதும் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதுமான முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும். வடக்குக் கிழக்கில் பெருமளவிலான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இயற்கைத் துறைமுகம் ஒன்றையும் மேலும் பல வளங்களையும் கொண்ட திருகோணமலையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் சிங்கப் பூர் கருத்திற் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இம் முதலீடுகள் ஒரு பலமாக அமையும் என்று இரா.சம்பந்தன் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## தேர்தல்...

ஆரம்பமாகவுள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தல் அறிக்கை இளங்கலைஞர் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டது.

ஒட்டுமொத்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கட்சியின் கொள்கை அறிக்கையே வவுனியாவில் வைத்து கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனால் 28ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது முன்வைத்த தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களுக்கு என்ன நடந்தது ? ஒவ்வொரு விடயத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன? என்பவற்றை உள்ளடக்கிய தேர்தல் அறிக்கை முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல் அறிக்கை வெளியீட்டைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்துக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டம் அன்றைய தினமே நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், பாண்டியன்குளம் பகுதிகளுக்கான பரப்புரை 29ஆம் திகதி பி.ப. 3 மணிக்கும், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்றுப் பகுதிகளுக்கான பரப்புரை அன்றைய தினம் பி.ப. 5 மணிக்கும் நடைபெறவுள்ளது. மன்னார் மாவட்டத்துக்கான பரப்புரை எதிர்வரும் 30ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் முதலாம் திகதி, இரண்டாம் திகதி, மூன்றாம் திகதிகளில் கிழக்கு மாகாணத்துக்கான பரப்புரை நடைபெறவுள்ளது. இறுதிநாள் பரப்புரை எதிர்வரும் 7ஆம் திகதி கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)


## முதலாம் ஆண்டு நினைவு



பிறப்பு 28 . 11 . 1946

இறப்பு 04 . 02 . 2017

**அண்ணாமலை மகேந்திரன்**


ஆண்டொன்று கழிந்தது அப்பா – இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**ஆறுமுகம் சிவலட்சணம் (வாமு)**

(மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்)



மாதகல் மேற்கினைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவலட்சணம் 24.01.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் தங்கப் பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகனும் கோமதியின் அன்புக் கணவரும் பிரம்மியா, சஜிராஜ், யாழினி(பேராதனை பல்கலைக்கழக இணைந்த சுகாதார பீட 2 ஆம் வருட மாணவி), தயாபரன்(பொதுச்சுகாதார பரிசோதக பயிலுனர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டினேஸ் கண்ணா(Proprieter Premier Travels & Tours) இன் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற வேதாபரணம், காலஞ்சென்ற மகாதேவன், மதியாபரணம், சிவஅன்பு, வேலழகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


Near C.C.T.M School Lane,
Kokuvil west, Kokuvil.

(CS 13251) (14)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 241 0871**

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 02 . 1946

இறப்பு 21 . 01 . 2018

**திருமதி சத்தியபாமா ஜெகநாதன்**

யாழ். பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா ஜெகநாதன் 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேல்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரை ஜெகநாதனின் அன்பு மனைவியும் ஜெகநாதன் சத்தியேந்திராவின் அன்புத் தாயாரும் சந்தியேந்திரா சுபாவின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உருத்திரதீசன்
(நேதாஜி - பேறாமகன்)

077 369 5922

(CS 13253/15/17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சப்பிரகமுவ பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று இன்று 25.01.2018 BMICH இல் Special degree B.Sc. in Physical Education என்னும் பட்டம் பெறும்

**யாகேஸ்வரன் நியான்சன்**

அவர்களை சீரும் சிறப்புடனும் பல்கலையில் பல பட்டங்கள் பெற்று என்றும் இனிமையாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நண்பர்கள்
( செ. கிரேஸ்குமார்,ம.கோபிராஜ், அ.சந்திரமோகன்) (CS/13232,16,17)

Best Wishes

வட்டுத் தெற்கு, வட்டுக்கோட்டை

## மரண அறிவித்தல்

**திருமதி யோகவதி அரசகேசரி (லலிதா)**



வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகவதி அரசகேசரி 22.01.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

471, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
அ.தவசொரூபன் (மகன்)
(மாவட்ட தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்)

**021 222 8682**

## நினைவஞ்சலி




திருமதி
**ஆனந்தலட்சுமி சிவாஸ்காந்தன்**

ஊர் அயல் உறவைப் பேணி
உள்ளன்பாய் எமது கல்வி
சூழலில் ஒளிதந்த - எங்கள்
சுடர்விளக்கு இன்று இல்லை
மாணவர்கள் கல்வியில்
உயர்கலைகளில் வளர உழைத்த
ஆனந்தலட்சுமி என்ற உயர் பிறவியை மறவோம் அம்மா

30.12.2017 ஆம் திகதி இறைபதம் அடைந்த எமது கல்லூரியின் அரசியல் விஞ்ஞானபாட ஆசிரியை திருமதி ஆனந்தலக்சுமி சிவாஸ்காந்தன் அவர்களுக்கு எமது நினைவஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம், யா/ இணுவில் மத்திய கல்லூரி

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 23.06.1953

இறப்பு 19.01.2013

அமரர்
**கனகசுந்தரம் சிவராசா**

திதி : பூர்வபக்க அட்டமி

அன்புடனே எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்த அப்பாவே
ஆண்டுகள் ஐந்து ஆகியும்
ஆறவில்லை எம் துயரம்

குடும்பத்தினர்.

## விற்பனைக்குண்டு

**மோட்டார் சைக்கிள்கள்**

1. HONDA DIO - NPBFU - XXXX
2. SUZUKI GIXXER - NPBEY - XXXX
3. TVS APACHE 180 - NPBFG - XXXX
4. TVS APACHE 200 - NPBFK - XXXX
5. TVS WEGO NPBFO - XXXX
6. TVS WEGO - NPBFS - XXXX
7. HERO CDL - NPBET - XXXX
8. BAJAJ CT 100 - NPBFG - XXXX
9. HERO DASH - NPBEN - XXXX
10. BAJAJ PULSAR - NPBEL - XXXX
11. HONDA SHINE - NPBEJ - XXXX

தொடர்புகளுக்கு : மேனகாந் - 077 060 8074, 077 364 4409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
NO. 233, Stanly Road, Jaffna.
0212219997, 0212221898 (31847/15/17)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்றுக்கு House Keeping வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு :- 021 222 5226 (CS 13290/15-17)


## மரண அறிவித்தல்

### திருமதி மேரிவிஜிதா சசிகுமார்

வட்டக்கச்சியினை பிறப்பிடமாகவும் இல.98, படிவம் 02 அனிஞ்சியங்குளத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிவிஜிதா சசிகுமார் கடந்த (23.01.2018) செவ்வாய்க்கிழமை அகாலமரணம் அடைந்து விட்டார்.

அன்னார் சசிகுமாரின் அன்பு மனைவியும் கபிநெயாவின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சந்திரசேகர் மற்றும் மல்லிகா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் பத்மநாதன்(நாதன்), புனிதவதி (மாலா) தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ரூபி, சிந்து, ரிவுளா, துஷானி, டிலக் ஷி ஆகியோரின் சகோதரியும் வசந்தமாலா(அமுதா) வின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அனிஞ்சியங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லலை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 98, படிவம் 02, அனிஞ்சியங்குளம், மல்லாவி.**

**தகவல்: சசிக்குமார் (கணவர்) 0767899759**

(CS/13255.16.17)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விஞ்ஞானபீடம்

| | |
|---|---|
| விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு | - 2016 நிலை 1G, 2G, 3G, |
| கணினி விஞ்ஞான பட்டத்தேர்வு | - 2016 நிலை 1S, 2S, 3S, 4S |
| விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத்தேர்வு | - 2016 நிலை 3M, 4M |

**இரண்டாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித்தேர்வு**

இரண்டாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித்தேர்வுகள் (End of Course Examinations) பங்குனி 2018 இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித்தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்றவிரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 2018 மாசி (Feb) 2 ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

22.01.2018 (IN 5642/15/17) **பதிவாளர்**

## 2018 ஆம் ஆண்டிற்கான மல்லாவி மாட்டிறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம்கோரல் அறிவித்தல்

மேற்படி மல்லாவி மாட்டிறைச்சி கடையை 02.02.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலங்கூறல் நடவடிக்கை 01.02.2018 ந.ப 12.00 மணிக்கு துணுக்காய் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன் மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(அலுவலக தொலைபேசி இலக்கம் 021228 3478)

**க.தனபாலசிங்கம்**
**செயலாளர், பிரதேச சபை, துணுக்காய்** (IN / 5643,16,17)

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம் வீரகத்தி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வீரகத்தி நேற்று (24.01.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS /13260,16,17)

**கிழுவானை வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய். 077 349 9459**

### திருமதி இராஜேஸ்வரி கோபாலன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி கோபாலன் கடந்த (23.01.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும் கோபாலனின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி குலமணி, சகுந்தலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்வரத்தினராஜா மற்றும் சறோஜா, பொன்னுராஜா, தெய்வேந்திரம் ஆகியோரின் மைத்துனியும் மிதுலா, மிலானி, மயூரி, டிலானி, டிலைஸ்சன் ஆகியோரின் பெரியதாயும் விக்னேஸ்வரன், மயூரன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் மெல்வின், நிலான், நிலா, சமிரா, சஞ்சனா, சாதுரியா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**119, கனகசபை வீதி, மானிப்பாய். 077 3617500** (CS 13259/15/17) **தகவல்: குடும்பத்தினர்.**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1936 | 2018 |
| 04 | 01 |
| 09 | 22 |



### திருமதி இரத்தினேஸ்வரி பொன்னம்பலம்

யாழ்.நெட்டிலிப்பாய், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி பொன்னம்பலம் (22.01.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அனனார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி செல்லமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராமசாமி, குமாரசாமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற சரஸ்வதி, குமாரசாமி மற்றும் திருஞானசம்பந்தர் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திலகவதி, மனோகரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் கணேசானந்தன் (ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), தயாழினி (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் சசீவன், சாத்விகா (லண்டன்), வஜீவன் (லண்டன்), தனுஷா - காந்தீபன் (கனடா), யசந்தன், கபிலன் (கனடா), மதுவந்தி (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கவின், ஷர்வின், நிகரிலன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகையகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரபத்திரர் கோயிலடி, நாவற்குழி கைதடி.** (cs13258)(16,17) **தகவல்: குடும்பத்தினர். 077 936 5126, 077 085 3893**

## குங்குமப்பூ சாப்பிட்டால் குழந்தை வெள்ளையாக பிறக்கும் என்பது சரியா?

ஆசை ஆசையாய் பெற்றுக்கொள்ளப் போகும் குழந்தை எப்படி எல்லாம் இருக்க வேண்டும் எனும் கற்பனை கர்ப்பிணிக்கு மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தினர் அனைவருக்குமே இருக்கும். இதன் விளைவாகப் பாட்டிமார் முதல் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் வரை பலரும் பல யோசனைகள் சொல்வார்கள். பல தலைமுறைகளாகப் பின்பற்றப்படும் கர்ப்பகால நம்பிக்கைகளை முன்வைப்பார்கள்.



அவற்றில் எது சரி, எது உண்மையில்லை என்று தெரிந்து கொள்வதில் குழப்பம் ஏற்படுவது இயல்பு. அந்த நம்பிக்கைகளை கடைப்பிடிக்கத் தொடங்குவதற்கு முன்னால், மகப்பேறு மருத்துவரிடம் ஆலோசனை கேட்டுக்கொள்வதே நல்லது. அப்போதுதான் தேவையில்லாத பயங்களையும், பழக்கங்களையும் களைய முடியும். அதன் மூலம் கர்ப்பிணியின் ஆரோக்கியத்தையும் வயிற்றில் வளரும் சிசுவையும் காப்பாற்ற முடியும்.

குங்குமப்பூவுக்கும் குழந்தை வெள்ளையாகப் பிறப் பதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பாலை அப்படியே குடித்தால் மசக்கை மாதங்களில் கர்ப்பிணிக்குக் குமட்டல் ஏற்படும். இதைத் தவிர்க்க ஒரு வாசனைக்காகவும், ருசிக்காகவும் பாலுடன் குங்குமப்பூவைச் சேர்க்கும் பழக்கம் வழக்கத்தில் வந்திருக்க வேண்டும். அதில் இரும்புச் சத்து இருப்பதால், குருதி உற்பத்திக்கு உதவும்; கரோட்டினாய்டுகள், ஆன்டி ஆக்ஸிடென்டுகள் ஆகியவையும் இருக்கின்றன. இவை தாய்க்கும் குழந்தைக்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துகின்றன.

எனவே, தரமான குங்குமப்பூவைச் சாப்பிட்டால் நல்லது. குழந்தை கறுப்பாகவோ, வெள்ளையாகவோ பிறப்பதற்குப் பெற்றோரிடமிருந்து குழந்தைக்கு வந்துள்ள மரபணுக்கள்தான் காரணம். பெற்றோர் வெள்ளை நிறத்தில் இருந்தால் குழந்தை வெள்ளையாக பிறக்கும். சருமத்தின் நிறத்தை நிர்ணயிப்பது மெலனின் எனும் நிறமிகளே தவிர, குங்குமப்பூ அல்ல!



## இது புதுசு

ஆண்களுக்கான ரீசேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## தமிழரிடமிருந்து...

க்கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதும் தடுக்கப்படாவிட்டால் தமிழர்கள் அந்த மாவட்டத்தை இழக்கும் நிலை ஏற்படும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் எச்சரிக்கின்றார்

முல்லைத்தீவின் சூரியனாறு, பெரியாறு என்பவற்றை மறித்து கிவுல் ஓயா என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் பெரும் நீர்ப்பாசனத்திட்டம்தடுத்துநிறுத்தப்படாவிட்டால்முல்லைத்தீவு மாவட்டத்தில்தமிழர்களின்இருப்புகேள்விக்குறியாகும்என்றும் அவர் தெரிவித்தார். இந்தப் பிரச்சினை தொடர்பான தீர்மானம் ஒன்றைஇன்றுஅவர்மாகாணசபையில்கொண்டுவரவுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

காலங்காலமாகத் தனித்தனமை வாய்ந்த பண்பாட்டு அடையாளங்களோடுஇருந்தபட்டிக்குடியிருப்பு,மருதோடை,ஒதியமலை, தண்டுவான், குமுழமுனை, நெடுங்கேணி, சாம்பன்குளம், வேப்பங்குளம், கோட்டைக்கனி,ஆமையங்குளம், ஆலங்குளம்,கண்ணாட்டி,அக்கரைவெளிஎனப்பழையகாலஊர்களும் குளங்களும் அதனை அண்டிய வயல்கள் குடியிருப்புகளுடன் அமைந்துள்ளது மட்டுமன்றி கடல் வள்ளங்களையும் மிகையாகக் கொண்ட கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி போன்ற பாரம்பரிய இடங்கள் தமிழர்களின் பாரம்பரிய குடியிருப்புக்களாக இருந்தன. எனினும் இதற்குள் சிங்களக்குடியேற்றங்களைஏற்படுத்திஅவற்றுக்குபுதியசிங்கள பெயர்கள் சூட்டப்பட்டுதமிழர்களின் அடையாளங்கள் அளிக்கப்படுகின்றன.

அந்தவகையில் மண்கிண்டி மலை அல்லது மறிச்சுக்கட்டிக்குளம்ஜனகபுர,ஆமையன்குளம்கிரிபன்வெவ,முந்திரிகைக்குளம் அல்லது உந்துராயண் குளம் நெலும்வெவ, சிலோன் தியேட்டர்ஸ்பண்ணைகஜபாபுரஅல்லதுநவகஜபாபுர,கென்பண்ணை கல்யாணபுர, வெடிவைத்தகல்லு நிக்கவெவ, மயில்குளம்மொனரவெவ, வவுனியா வடக்கு பிரிவுகள் சில ஹகட்டுகஸ்வெவ எனசிங்களத்திற்குப்பெயர்மாற்றப்பட்டுள்ளன.முல்லைத்தீவின் சூரியனாறு, பெரியாறு என்பவற்றை மறித்து கிவுல் ஓயா என்ற பெயரில் பெரும் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டத்திற்காக இராமன் குளம், கொட்டோடைக் குளம், வெள்ளாங்குளம், ஓயாமடுக்குளம், ஆகிய குளங்கள் மற்றும்அதற்குரியவயல்நிலங்கள்யாவும்மூடப்பட்டுமேற்படிதிட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்தப்பகுதியில்இருந்தநிலங்கள்யாவும்தமிழ்மக்களின்பூர்வீக நிலங்கள்ஆகும்.உருவாக்கப்படும்இந்தப்புதியதிட்டத்தின்மூலம் 6ஆயிரம்ஏக்கர்வயல்நிலங்களுக்குநீர்பாய்ச்சக்கூடியவிதத்தில் சுமார் ஆயிரம் மில்லியன் ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டே இந்த வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன. தமிழ் மக்கள்பலரின்கைகளில்தமதுபூர்வீகக்காணிகளுக்கானசான்றாவணங்கள்இருந்தநிலையிலும்கடந்தஅரசதலைவர்தேர்தலுக்கு முன்பாக குடியேற்றவாசிகளுக்கு புதிய அனுமதிப் பத்திரத்தை முன்னைய ஆட்சியாளர்கள் மயில்க்குளம் பகுதியில் வைத்து வழங்கியிருந்தார்கள்.

**மகாவலி(ட)**

மகாவலி(ட)வலயம்தொடர்பானவர்த்தகமானிபிந்திய அறிவித்தல்கள் 1982, 1988, 2014 ஆகிய ஆண்டுகளில்வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் மகாவலி)(ட) வலயம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் வீதி உள்ளடங்கலாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகப் பகுதிவரையும் விரிவாக்கப்பட்டுள்ளது. இவைகள்மாவட்டத்தின் அபாயத்தை உணர்த்துவதாகவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தின் கடந்த வருட புள்ளி விவரத்தின்படி39ஆயிரத்து590தமிழ்க்குடும்பங்களைசேர்ந்தஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 735 தமிழ் மக்களுக்கு ஒரு மாதிரியும் குடியேற்றப்பட்ட 3 ஆயிரத்து 336 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்தஒருஇலட்சத்துஆயிரத்து189சிங்களமக்களுக்குவேறு மாதிரியாகவும் அரசின் செயற்திட்டங்கள் அமைகின்றன. இதே நிலைநீடித்தால்நீண்டகாலஅடிப்படையில்முல்லைத்தீவுமாவட்டத்தில் தமிழின இருப்பு குலைக்கப்பட்டு சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக் கொள்ளும் மாவட்டமாக மாறும் நிலைஏற்படும்என்று அவர் தெரிவித்தார்.

(உ-8)

## பதுங்கு குழியில்...

செய்யப்பட்டுள்ளனர். மேலும் மூவர் தப்பியோடிவிட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம்நடத்தியவிசாரணைகளிலிருந்து 3வீடுகளில்கொள்ளையடிக்கப்பட்ட ஒருலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டரைப்பவுண் நகை என்பன மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தென்மராட்சி தெற்கு மறவன்புலவில் இடம்பெற்றது. கேரதீவு முதன்மை வீதியிலிருந்து பலஉணவுப்பொதிகளுடன் ஒருவர் சென்றதை சிவில் உடையில் நின்ற பொலிஸ் அலுவலர் ஒருவர் கண்டுள்ளார். அவரைப் பொலிஸ் அலுவலர் பின்தொடர்ந்து சென்றபோது பதுங்கு குழி ஒன்றில் மேலும் பலர் இருந்ததைக் கண்டார்.. அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டதால் உடனடியாகப் பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் வழங்கினார்.

அங்குவிரைந்தசாவகச்சேரிபொலிஸாரைக்கண்டதும்குழியிலிருந்த 5 பேரும் தப்பியோடத் தொடங்கினர். பொலிஸார் துரத்திச் சென்றனர். கடல் தண்ணீருக்குள் இறங்கி அவர்கள் தப்பியோடினர். பொலிஸாரும்கடல்தண்ணீருக்குள்இறங்கித் துரத்தினர். இருவர் பிடிபட ஏனைய மூவரும் தப்பியோடிவிட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நாவற்குளி மற்றும் அளவெட்டியைச்சேர்ந்தவர்கள். இதுவரையானவிசாரணைகளிலிருந்து நாவற்குளி கேரதீவு வீதியிலுள்ள வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட பணமும் நாவற்குளியில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ்அதிகாரிவிக்கிரமசிங்கதெரிவித்தார். நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில்நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தென்மராட்சிதெற்குப்பகுதியில்நாவற்குளிதொடக்கம்தனங்களப்புவரையானபகுதிகளில்மூன்றமாதங்களாகஅடுத்தடுத்து பலவீடுகளில்திருட்டுஇடம்பெற்றது. கடந்தவெள்ளிக்கிழமை தச்சன்தோப்பு பகுதியிலும் மறுநாள் கைதடியிலும் நகைகள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டன. வீட்டின் கதவுகளை கோடரியால்தாக்கிச்சேதப்படுத்தி உள்நுழைந்து அங்கிருந்த குடும்பங்களை மோசமாகத் தாக்கி கொள்ளை இடம்பெற்றிருந்தது.

சம்பவங்கள்தொடர்பாகச்சாவகச்சேரிபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. திருடர், கொள்ளையர்களைப் பிடிப்பதில் பொலிஸார் அதிக ஈடுபாடு காட்டவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரியிருந்தனர்.

(உ-4,9)


## பதவி வெற்றிடம்

வவுனியாவை மையமாக கொண்டு வடக்கில் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்ற உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று அதன் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தகுதிவாய்ந்த ஓர் இணைப்பாளரை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை கோருகின்றது.

**விண்ணப்பதாரி 30 வயதுக்கு குறையாதவராகவும் குறைந்த பட்சம் 05 வருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.**

விண்ணப்பதாரி பின்வரும் தொழில்சார் அனுபவங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

1. கிராமிய சமூக அமைப்புகள் குறிப்பாக பெண்கள் அமைப்புகளின் திறன் விருத்தி.
2. வாழ்வாதார விருத்தி திட்டங்கள்.
3. சிறுவர் நலன் விருத்தி மற்றும் அமைப்புக்கள் தொடர்பான துறைசார் அனுபவம்.
4. இளைஞர் யுவதிகளின் திறன் விருத்தி/ அபிவிருத்தி நடவடிக்கைகள்.
5. திட்டமிடல், அறிக்கைகள் தயாரிப்பு தொடர்பான அனுபவங்கள்.

**கல்வித்தகைமை**

பல்கலைக்கழகப் பட்டம் அல்லது டிப்ளோமா கற்கைநெறி - கிராமிய அபிவிருத்தி தொடர்பான துறைகள் அல்லது அதற்கு சமமான ஏனைய தகைமைகள்.

**சம்பளஅளவுத்திட்டம்** : ரூ.30,000.00 (பேசித் தீர்மானிக்கப்படும்).
**வேலைத்தளம்** : பூநகரி
**விண்ணப்ப முடிவுத்திகதி** : 09.02.2018
**மின்னஞ்சல்** : mfm.dcrr@gmail.com

(AVA 253/15/17)



## மரண அறிவித்தல்

# சரவணை சண்முகநாதன் (தம்பா)



தோற்றம் 15.10.1937 — மறைவு 22.01.2018

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் துணைவி மற்றும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட சரவணை சண்முகநாதன் கடந்த (22.01.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் றஞ்சினி, சந்திரதாசன் (பிரான்ஸ்), சத்தியசீலன்(கிளி பிரான்ஸ்), பிரேமகுமார் (பிரான்ஸ்), சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அமீன்(கொழும்பு) மற்றும் சுகந்தி (பிரான்ஸ்), லீதா(பிரான்ஸ்), சுகிர்தவாணி(பிரான்ஸ்), ஆனந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கந்தசாமி (பிரான்ஸ்) மற்றும் லில்லிமலர், காலஞ்சென்றவர்களான தம்புராசா (பிரான்ஸ்), திருநாவுக்கரசு மற்றும் தனபாலசிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலமணி(பிரான்ஸ்), ரத்தினேஸ்வரி(பிரான்ஸ்), தங்கமணி (லண்டன்), காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் ரத்தினகுமாரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜான்சன் (லண்டன்), அத்தியா, அஸ்ரா, சந்தியா (பிரான்ஸ்), சஞ்ஜெய் (பிரான்ஸ்), சுஜீவன்(பிரான்ஸ்), சோந்திரின்(பிரான்ஸ்), வத்சா (பிரான்ஸ்), ஆகாஸ (பிரான்ஸ்), அதியா(பிரான்ஸ்), அலக்ஸியா(பிரான்ஸ்), ஐஸ்வினியா (பிரான்ஸ்), அஸிரியன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற்வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழம் வீதி, ஆறுகால் மடம்,**
**ஆனைக்கோட்டை,**
**077 815 5100**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS / 13262,16,17)



## மரண அறிவித்தல்

# சுந்தரலிங்கம் தினேஸ்கரன்



பிறப்பு 30.09.1990 — இறப்பு 12.01.2018

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போதுடுபாயில்வசித்துவந்தவருமான சுந்தரலிங்கம் தினேஸ்கரன் 12.01.2018 வெள்ளிக்கிழமை டுபாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுந்தரலிங்கத்தின் அன்பு மகனும், சதீஸ்கரன், கமலவாணி, துளசினி, சிந்துசியா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராகுலன், ஜெசிந்திரன், சுதாகரன் ஆகியோரின் மைத்துனரும், அனோஜா, அஸ்வின் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2018) வியாழக்கிழமை அல்லாரையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டைமுறிச்சான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அல்லாரை வடக்கு,**
**கொடிகாமம்.**


**தகவல்**
**குடும்பத்தினர்**

(ACH/303)(11,17)

**சி.சுந்தரலிங்கம் - 077 963 0111**


# கேலப் அரையிறுதியில்

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சிமோனா கேலப் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கேலப்பை எதிர்த்து செக்குடியரசின் பிளிஸ்கோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கேலப். அவர் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டு இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



# சச்சினின் வாழ்க்கை வ்ரலாறுக்கு அங்கீகாரம்

ஈரான் தலைநகர் தெக்னிரோ ல், விளையாட்டை மைய மாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திரைப்பட திருவிழாவில் சச்சின் வாழ்க்கை வர லாற்றை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட 'சச்சின் ஏ பில்லியன் ட்ரீம்ஸ்' திரைப் படத்துக்கு 2 விருதுகள் கிடைத்தன.
சிறந்த இயக்குநருக்காக ஹெல்மர் ஜேம்ஸ் எர்ஸ்கினும், சிறந்த படத்திற்காக ரவி பக்ச்சாண்ட்காவும் இந்த விருதைப் பெற்றிருக்கிறார்கள். இது குறித்து இயக்குநர் தெரிவிக்கையில் "இந்தியாவின் கிரிக்கெட் ஜாம்பவான் பற்றிய கதையில் என்னுடைய பணி உலகளவில் பாராட்டப்பட்டதற்குப் பெருமைப் படுகிறேன். இந்தப் படத்துக்காக சச்சின், அவரது குடும்பத்தினர் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் பலரும் உதவி புரிந்தார்கள். உலகளவில் இதற்கு அங்கீகாரம் கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று தெரிவித்தார். (ம)





# ஏஞ்சலிக் கெர்பர் அரையிறுதிக்குள்



பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடரான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் ஜேர்மனிய வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர்.
கெர்பரை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை மார்ட்டினா கீஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:1, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் கெர்பர். (ம)

# தென்னாபிரிக்காவின் துல்லிய வேகத்தில் இந்தியா தவிடுபொடி




தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் இந்திய அணி வெறும் 187 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. மூன்று துடுப்பாட்ட வீரர்களைத் தவிர வேறெவரும் பெரியளவில் சிறப்பாகச் செயற்படவில்லை.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கும் என்பதால் அஸ்வின், ஜடேயா இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக முரளி விஜய் மற்றும் லோகேஸ் ராகுல். ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் ராகுல். 8 ஓட்டங்களுடன் முரளி விஜயை பவிலியனுக்குத் திருப்பினார் ரபாடா. 13 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளை இழந்தது இந்தியா.
புஜாராவும் கோக்லியும் இணைந்து இந்திய அணியின் இன்னிங்ஸை ஓரளவு கட்டமைத்தனர். அரைச்சதம் கடந்தார் கோக்லி. அதிகம் நிதானித்தார் புஜாரா. புஜாரா தான் எதிர்கொண்ட முதல் 50 பந்துகளில் ஓர் ஓட்டத்தைத்தானும் பெறவில்லை. அணி 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோக்லி.
ரகானே, பட்டேல், பாண்டியா ஆகியோர் முறையே 9, 2, 0 என பவிலியன் திரும்பினர். புஜாராவும் 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் அடித்தாடி 30 ஓட்டங்களைச் சேர்த்து ஆறுதல் கொடுத்தார் புவனேஸ்வர்குமார். முடிவில் 187 ஓட்டங்களுக்குச் சுருண்டது இந்திய அணி.
பந்துவீச்சில் ரபாடா 3 இலக்குகளையும், மோர்கல், பிளன்டர், பிளுக்வையோ ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி நாள் முடிவில் ஓர் இலக்கை இழந்து 6 ஓட்டங்களைப் பெற்றது. மார்க்ரம் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எல்கர் 4 ஓட்டங்களுடனும், ரபாடா ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் களத்தில் உள்ளனர். (ம)



# ஜோ ரூட் விலகல்

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு தொடரில் இருந்து ஜோ ரூட் விலகியுள்ளார்.
ஆஸ்திரேலியா இங்கிலாந்து இடையிலான ஆஷஸ் தொடர் முடிவடைந்த பின்னர் தற்போது இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிவடைந்த பின்னர் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இருந்து விலகினார் ரூட்.
'அனைத்து ஆட்டங்களிலும் விளையாடுவதற்காகவே நான் இங்கு வந்தேன். இங்கிலாந்து அணிக்காக விளையாடுவதை நான் மிகவும் நேசிக்கிறேன். கிரிக்கெட் ஆட்டத்தை தவற விடுவதை நான் விரும்பவில்லை. நான் விலகுவது குறித்து பயிற்சியாளரிடம் பேசினேன். இந்த சீசனில் இன்னும் ஏராளமான ஆட்டங்கள் உள்ளன. இது ஒரு சிறிய இடைவெளிதான்" என ரூட் மேலும் தெரிவித்தார். (ம)




ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் எதிர்வரும் ஜூலை மாதம் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான வெற்றிக்கிண்ணம் நேற்று இலங்கைக்கு எடுத்து வரப்பட்டது. கிண்ணம் 54 நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. முதலாவது பயணமாக இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நவஜீவன்ஸ், றேஞ்சர்ஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 25
நாச்சிமார் கோயிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் நவஜீவன்ஸ், றேஞ்சர்ஸ் அணிகள் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றன.

**கலைமதி – நவஜீவன்ஸ்**
முதலாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது.

**டயமன்ஸ் – றேஞ்சர்ஸ்**
இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## சென். அன்ரனிஸ் அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பரணம், ஜன. 25
யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றது. (ம23)




## ஐக்கியம் கழகம் இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 25
பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதியது. இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 13:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## ஞானம்ஸ் இறுதியில்

அமரர்களான பார்த்தீபன், கேசிகன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக துன்னாலை வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
வல்லியானந்தம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதியாட்டம் நடைபெற்றது. அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து ஸ்பேஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 6 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜனன் 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஸ்பேஸ் அணியின் சார்பில் மது 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்பேஸ் அணி 5.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 31 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக மதுசன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் செந்தில், ரஜீவன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-422)

## தோமஸ், மைக்கல் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜன. 25
வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங் களில் சென். தோமஸ் 'ஏ', மைக்கல் அணிகள் வெற்றிபெற்றன.
பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 37:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென். தோமஸ் 'ஏ' அணி வெற்றிபெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித் துறை மலையான் சான்டோ விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் மைக்கல் விளையாட் டுக்கழக அணி 39:22 புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஆனைக்கோட்டை யூனியன் இறுதிக்குத் தகுதி பெற்றது

யாழ்ப்பாணம், ஜன. 25
பார்த்தீபன், கேசிகன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக துன்னாலை வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடரில் ஆனைக்கோட்டை யூனியன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
வல்லியானந்தம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதியாட்டம் நடைபெற்றது. ஆனைக்கோட்டை யூனியன் அணியைஎதிர்த்து கலைமகள் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கலைமகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜங்கரன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஆனைக்கோட்டை யூனியனின் சார்பில் பவி, கனோஜன் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்ப்றறினர்.
பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் அணி 2.1 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. அதிகபட்சமாக மனோ 24 ஓட்டங்களையும், வெஸ்லி 17 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-422)

## நக்கீரன் இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், ஜன. 25
பருத்தித்துறைபிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் நக்கீரன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் அல்வாய் நக்கீரன் அணியைஎதிர்த்துவல்வை அணி மோதியது. இதில் பலத்த ஆதிக்கம் செலுத்திய அல்வாய் நக்கீரன் அணி 13:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## யங்ஸ்ரார் வி.கழக கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 25
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.
மருதநிலா விளையாட்டுக் கழக அணிக்கும், ஈகிள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மருதநிலா விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், நியூ பைட் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான அரையிறுதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
786 விளையாட்டுக் கழக அணிக்கும், கோல்டன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான அரையிறுதி ஆட்டத்தில் 786 விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## அபான்ஸ் கையிருப்பு அகற்றல் பிரமாண்ட சேல்

50% வரை தள்ளுபடி

வளிச்சீராக்கிகள், குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக்காட்சிகள், சமைய இயந்திரங்கள், ஓடியோ மற்றும் ஹோம்தியேட்டர்கள், சிறிய உபகரணங்கள், மைக்ரோவேவ் அவன்கள், கையடக்கத் தொலைபேசிகள், மடிக் கணினிகள் மற்றும் இன்னும் பலவற்றை குறைந்த விலையில் பெற்றிடுங்கள்.



26ஆம் திகதி மற்றும் 27ஆம் திகதி ஜனவரி 2018 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

அபான்ஸ் தலைமைக் காரியாலய வாகன தரிப்பிடம் (McDonald's க்கு அருகில்)
இல 498 காலி வீதி, கொழும்பு 03

**26ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி ஜனவரி 2018 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை**

| | |
|---|---|
| எஹலியகொடை | - "Famous Building" சம்பத் வங்கிக்கு அருகில், பிரதான வீதி, எஹலியகொடை |
| மஹரகம எலைட் | - 134CD ஹைலெவல் வீதி, மஹரகம |
| அநுராதபுரம் எலைட் | - 155, பிரதான வீதி, அநுராதபுரம் |
| தெஹிவளை எலைட் | - 156A, காலி வீதி, தெஹிவளை |
| இரத்மலான எலைட் | - 95, காலி வீதி, கல்தேமுல்ல, இரத்மலான |

**26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி ஜனவரி 2018 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை**

| | |
|---|---|
| அம்பாறை | - நகர மண்டபம், அம்பாறை |
| யாழ்ப்பாணம் | - 121/1, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம் CTB பஸ் நிலையத்திற்கு பின்னால்) |
| வவுனியா | - ரெஸ்ட் ஹவுஸ், வரவேற்பு மண்டபம், வவுனியா |

**27ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி ஜனவரி 2018 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை**

| | |
|---|---|
| பிலியந்தல | - போக்குந்தர பிலியந்தல கூட்டுறவு சங்கம், இல.14/1, மொரடுவை வீதி, பிலியந்தல |
| நீர்கொழும்பு | - பௌத்த நிலையம், நீர் கொழும்பு |
| கம்பளை | - தேசிய உரிமை மத்திய நிலையம், (தேசிய மரபு உரிமைகள் நிலையம்) பல்லேவெல, கம்பளை |

**28ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி ஜனவரி 2018 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை**

| | |
|---|---|
| மாத்தளை | - மகாத்மா காந்தி சர்வதேச நிலையம், இல.01, மகாத்மா காந்தி மாவத்தை, மாத்தளை |

**28ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி ஜனவரி 2018 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை**

| | |
|---|---|
| பதுளை | - சைமன் பீரிஸ் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம், பதுளை |

**29ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி ஜனவரி 2018 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை**

| | |
|---|---|
| குருணாகல் | - YMBA கட்டிடம், இராஜபில்ல மாவத்தை, குருணாகல் |

Abans

காசோலை மற்றும் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்ய முடியும். *நிபந்தனைகள் உண்டு



இன்சுவை யாழ்.ஒடியல் கூழ்
தினமும் மு.ப.11 மணிமுதல்
யாழ் பாடி,
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868,
(CS 13184/15) 0777 360 353, 075 9875 800



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு,
advt@uthayan.com,
021 493 1111



DLB CAR PLUS
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 42
சீட்டிழுப்பு திகதி 24.01.2018
வெற்றி இலக்கங்கள் 38 45 46 Y ஞாயிறு
15
34, 76, 560/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk



சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2986 திகதி: 24.01.2018
புதன்கிழமை
இளஞ்சிவப்பு
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 49 64 72 75 C
போனஸ் இலக்கம்: 46
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 41,978,410/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK<ran> டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 147
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.01.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,387,955/-
வெற்றி இலக்கங்கள் 02 03 25 38
ஆங்கில எழுத்து Z
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK<ran> டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டச்செயலகத்தில் திட்டமிடல் பிரிவின்
சாரதியாக கடமையாற்றிய

### ஆறுமுகம் சிவலட்சணம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திட்டமிடல் பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்,
மாவட்ட திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(c/ 31846.16.17)


GCE O/L
உடன் கைதேர்ந்த சந்தைப்படுத்தல் வல்லுநர் ஆகிடுங்கள்




SLIM IIS

PRELIMINARY CERTIFICATE IN MARKETING (PCM)

MARKETING IN TAMIL (MIT)

சந்தைப்படுத்தலில் இலங்கை அரசின் அங்கிகாரம் பெற்ற
Sri Lanka Institute of Marketing (SLIM)
இன் ஆங்கில/தமிழ் மொழி மூலமான 3 மாத கற்கை நெறிகள்

NEW BATCH COMMENCES FROM
27.01.2018

தொழில் வளர்ச்சி, கல்விசார் ஆலோசனைகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு
IIS CITY CAMPUS 071 777 3555 # 200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.



## 6 மாத தொழிற்பயிற்சி கற்கைநெறி

- தையல்
- கேயர்ஸ்ரையில்
- பிளவர்
- பியூட்டிபாலர்
- குக்கரி
- ஐஸ்சிங்
- மௌலர்
- கைவினை பொருள்கள்
- மேக்கப்



9 வகை கற்கைநெறிகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் திங்கள் முதல் வெள்ளிவரை 10.00 மணிக்கு நடைபெறும்.

இடம் : உதயவாழ்வு (உதயன் பணிமனையருகில்)
55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொடர்புகளுக்கு : 021 492 7425

(IN 5499/15)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.